₹10

fmpb

# அறைகூவல்


Volume 55 Issue 4 April 2025




## சிலுவைக்கருகில் இன்னும் அதிகமாய்

*“கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.” கலா. 5:24*

# ஆரம்ப வரிகள்...



## சிலுவை அண்டையில்

நம் கிறிஸ்தவ சமுதாயத்தில் ஃபன்னி கிராஸ்பியை (Fanny Crosby) அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. இவர் 1820 மார்ச் 24ஆம் தேதி நியூயார்க் தேசத்தில் ப்ரூஸ்டர் (Brewster) பிரசித்திப்பெற்ற ஹார்வாட் (Harvad college) கல்லூரியை நிறுவியவரின் பரம்பரையில் பிறந்து, தவறான சிகிச்சையினால் சிறுவயதிலேயே கண் பார்வையை இழந்தார். இவர் அழகிய கவிதைகளையும், பாமாலைகளையும் எழுதியுள்ளார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் பல கேள்விகளோடு வாழ்ந்த அவரை, ஒருநாள் அவரது நெருங்கிய நண்பரான தியோடர் கேம்ப் ஒரு கன்வென்ஷனுக்கு வரும்படி அழைப்பு கொடுத்தபோது முதலில் தயங்கினார். ஆனால் அன்றிரவு சொப்பனத்தில் தனது நண்பன் மரிக்கிறதுபோலவும், அவரின் மரண படுக்கையில் அவர் ஃபன்னியை நோக்கி **நீ என்னை பரலோகத்தில் சந்திப்பாயா?** என்று கேட்டார். அதற்கு ஃபன்னி **தேவனுக்குச் சித்தமானால் சந்திப்பேன்** என்று கூறினார். (இந்த வார்த்தையை தனது பாட்டி மரிக்கும் தருவாயில் இருந்தபோதும் கூறியிருந்தார்) அவரின் சொப்பனத்தில் நண்பன் அவரிடம் **மரிக்கும் எனக்கு நீ உறுதியளிக்கிறாய்** என்று ஞாபகப்படுத்தினார்.

மறுநாள் அவர் தன் நண்பனோடு மூன்று நாட்கள் நடைபெற்ற கன்வென்ஷனுக்குச் சென்றார். முதல் இரண்டு நாள் கூடுகையில் அவர் மீது தேவ தாசர்கள் கைகளை வைத்து ஜெபித்தபோது அவர் எதிர்ப்பார்த்த எந்த மாற்றமும் நிகழவில்லை. மூன்றாம் நாள் அவர் மட்டும் பலிபீடத்தில் முழுங்கால் படியிட்டு ஜெபிக்கும் போதும் எந்த மாற்றமும் நிகழவில்லை. ஆனால் அங்கிருந்த பாடல் குழுவினர் **'சிலுவை அண்டையில் நம்பி வந்து நிற்கையில்'** என்ற பாடலைப்பாட ஆரம்பித்தவுடன் அல் லேலூயா என்று சொல்லி துள்ளிக் குதித்து இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டார். பின்னர் **இயேசுவே கல்வாரியில்...** போன்ற ஆயிரக்கணக்கான பாடல்களை எழுதினார்.

ஃபன்னி கிராஸ்பி தனது சரீர கண்களால் சிலுவையைப் பார்க்காவிட்டாலும், ஆவிக்குரியக் கண்களால் கிறிஸ்து சிலுவையில் உண்டுபண்ணின இரட்சிப்பை சுதந்தரித்துக்கொண்டார். சிலுவைப் பாடல் ஒருவரை இவ்வாறாக மாற்ற முடியுமானால் "சிலுவை வீணாகுமோ! அவர் சிந்திய இரத்தம் வீணாகுமோ!" வீணாகாதே. நாமும் சிலுவைக்கருகில் செல்லும்போதெல்லாம் சிறப்பானவர்களாக மாறமுடியும்.

இந்த லெந்து காலங்களில் சிலுவையண்டையில் என்று பாடும் நாம், சிலுவைக்கு அருகில் எவ்வளவு கிட்டிச் சேர்ந்துள்ளோம்? சிலுவையை நோக்கிச் செல்ல முற்படும் நமக்கு பாவமான, பாரமான காரியங்கள் தடையாக இருக்கின்றனவா? கலா. 5:24இல் கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்று வாசிக்கிறோம். சிலுவை வெற்றியின் சின்னம். அப்படியென்றால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிற நாம் சிலுவைக்கருகில் செல்வதின் நோக்கம் நம் சுயம், நமது மாம்சம், அதின் இச்சைகள் ஆகியவைகளை சிலுவையில் அறைவதற்கும், அவர் நமக்காக சிலுவையில் உண்டுபண்ணின வெற்றி வாழ்வினை சுதந்தரித்துக்கொள்வதற்குமே. எனவே அனுதினமும் சிலுவைக்கருகில் நெருங்கிச் செல்வோம். கிறிஸ்து நமக்காக உலகம், மாம்சம், பிசாசை ஜெயித்து சிலுவையில் வெற்றிச் சிறந்தார். "சிலுவையின் நிழலில் அனுதினம் அடியான் சாய்ந்திளைப் பாறிடுவேன்" என்று பக்தன் பாடுவதுபோல், நாமும் அந்த இளைப்பாறுதலைப்பெற்று, இளைபாறுதலற்று அலையும் நம் சக தேசத்தாரையும் சிலுவையின் பாதையில் நடத்திடுவோம் வாரீர்.

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."

*ரோமர் 5:8*

மாம்சத்தினாலும், இரத்தத்தினாலுமான தம்முடைய இருதயத்தை நம்முடைய மீட்புக்காக சிலுவையில் அறைய தேவன் ஒப்புக்கொடுத்தார்.

*– இ. ஸ்டான்லி ஜோன்ஸ்*

"சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது."

*1 கொரி. 1:18*

சிலுவையைப் பாருங்கள்! இயேசுவுக்கு ஒரு ஆத்துமா எத்தனை அருமையானது என்று அறிவீர்கள்.

*– அன்னை தெரேசா*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...

கிறிஸ்துவில் அன்பானவர்களே,

நமதாண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

தேவசித்தத்தின்படியும், வழிநடத்துதலின் படியும் இம்மாபெரும் இயக்கத்தின் பொது காரியதரிசியாக ஒருமித்த கருத்தோடும், ஜெபத்தோடும் தேர்ந் தெடுக்கப்பட்டதில் நான் மகிழ்ச்சியடை கிறேன். மேலும் தாழ்மையோடு தேவனை மகிமைப்படுத்துகிறேன். இது ஒரு தனிநபரின் வெற்றியல்ல, மாறாக இது ஒரு பகிர்ந்துகொள்ளப்படும் வெற்றியாகும். இது நம் அனைவருக்கும் சொந்தமானது. இந்த கனமான பொறுப்பிற்குள் அடியெடுத்து வைப்பது தேவ சித்தமும், மிஷனெரி ஊழியத்தின் ஒரு பகுதி என்றும் உறுதியாக விசுவாசிக்கிறேன். நம் எஜமானுக்கும், நமது இயக்கத்திற்கும் மற்றும் தேசத்திற்கும் பணி செய்யும்படி கர்த்தர் அருளுகிற பலத்தை நம்பி, கொடுக்கப்பட்ட இந்த நியமனத்தை ஆழமான கடமை உணர்ச்சியுடனும், நெஞ்சம் நிறைந்த நன்றிகளுடனும் ஏற்றுக்கொள்கிறேன். 2 நாளா. 2:11 இவ்வாறாக கூறுகிறது, கர்த்தர் தம் ஜனத்தை சிநேகித்ததினால் உம்மை அவர்களின் ராஜாவாக வைத்தார். உங்களிடமிருந்து வருகிற குறுஞ்செய்திகள், மின் அஞ்சல்கள் மற்றும் அழைப்புகள் மூலமாக உங்கள் ஜெபங்கள் மற்றும் ஆதரவுகள் உறுதியாக்கப்பட்டு



நான் உற்சாகப்படுத்தப்படுகிறேன். உங்களுடைய மாறாத அர்ப்பணிப்புள்ள ஜெபங்கள் மூலம் நான் பலனடைந்து உத்வேகம் பெறுகிறேன். முழுவதும் கர்த்தரையே சார்ந்து, எனது சிறந்த சேவையினை கர்த்தருக்கு செய்ய அர்ப்பணிக்கிறேன். தேவனுக்கும் இயக்கத்திற்கும் ஆழ்ந்த நன்றியுடன் நான் உறுதி ஏற்கிறேன்.

## விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு – கிறிஸ்தவ பயணத்தின் மையக் கருத்து

“வேகமாக, உயரமாக, பலமாக மற்றும் இணைந்து” என்று சொல்லப்படுகிற ஒலிம்பிக்கின் வார்த்தையைப்போல், விசுவாசத்தில் முன்னேறவும், நம்பிக்கையில் அதிகம் வளரவும், கிறிஸ்துவின் ஒரே சரீரமாக அன்பிலே பலப்படவும், ஆவிக்குரிய பயணத்தைத் தொடர நாம் அழைக்கப்படுகிறோம். புதிய உடன்படிக்கையின்படி வாழ மூன்று

அடிப்படையான கடமைகள் உள்ளன என்று எபிரெயர் நிருபத்தின் ஆக்கியோன் எபி. 10:22-26இல் விவரிக்கிறார்.

## தேவனுக்கு நமது கடமை – பூரண நிச்சயத்தோடு அவரண்டை சேர்வது

இயேசு கிறிஸ்துவின் மூலமாக பிதாவிடம் கிட்டிச்சேர்வதே நமது முதலாவது அழைப்பாகும். இந்த புதிய உடன்படிக்கையின் மூலமாக நாம் எந்த தடையுமின்றி தேவனை அணுகுகிறோம். நம்மைப் படைத்தவருடன் நெருக்கமான உறவு கொண்டு, நாம் அவரையே எப்போதும் பின்தொடர்பவர்களாக இருத்தல் வேண்டும் என எபி. 10:22 கூறுகிறது. விசுவாசத்தில் பூரண நிச்சயத்தோடு அவரை சேரக்கடவோம். இது நமது ஆவிக்குரிய கடமை. மன்னிப்பிற்காகவும், கிருபைக்காகவும், நீதிமானாக்கப்படுவதற்காகவும், தம்முடைய சிங்காசனத்தை எப்போதும் அணுகும் வாய்ப்பை அளிக்கும் இயேசுவை உண்மையுடன் நம்பி அவரை பின்பற்றுவது அவசியம்.

## உலகிற்கு நமது கடமை – நம்பிக்கையை இறுகப்பற்றிக்கொள்வது

நமது இரண்டாவது அழைப்பு என்னவெனில் நாம் நம்முடைய நம்பிக்கையில் உறுதியாக இருப்பது. நிச்சயமற்ற, நம்பிக்கையற்ற இந்த உலகத்தில் நாம் வாழ்ந்தாலும், தேவனுடைய வாக்குத்தத்தங்களில் உறுதியாக நிற்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுதலில் அசையாமல் உறுதியாக இருக்கக்கடவோம். அதாவது, நம் சோதனைகளில் எவ்வித தயக்கமோ, சந்தேகமோ இன்றி உறுதியாக இருக்க அழைக்கப்படுகிறோம். விசுவாசிகளாகிய சகோதர சகோதரிகள் தங்களுடைய விசுவாசத்திலே உறுதியாக இருந்து கலங்கரை விளக்காக ஒளிவீசுவதை காண இந்த உலகம் விரும்புகிறது. இந்த அசையா நம்பிக்கையானது சுவிசேஷம் என்னும் தீப்பிழம்பாய் மாறி வழித்தவறிச் செல்லும் மனிதர்களை கிறிஸ்துவின் இரட்சிப்பிற்கு நேராய் நடத்துகிறது.

## விசுவாசிகளுக்கு நமது கடமை – அன்பினாலே ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவது:

இறுதியாக நாம் ஒருவரையொருவர் அன்பினாலே தாங்கி, பெலப்படுத்திட நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். உண்மையான விசுவாசம் என்பது சுயத்தைச் சார்ந்ததல்ல, அது நமது நற்கிரியைகளிலும், அன்பிலும் வெளிப்படுகிறது. எபி. 10:24,25இன் படி இவ்வாறாக உபதேசிக்கிறது, அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். நியாயப்பிரமாணத்தின்படி நடந்து, சுய நீதியினை வலியுறுத்துகிற சடங்காச்சார எபிரெயரைப்போலன்றி, புதிய உடன்படிக்கையின்படி சுயத்தைக் களைந்து, சக விசுவாசிகளுக்கு பணிவிடை செய்வதிலும், பெலப்படுத்துவதிலும், உற்சாகப்படுத்துவதிலும் நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

## ‘நாம்’ இணைந்து

இந்த நிருபத்தின் வேத வசனங்களில் ‘நாம்’ என்கிற பதம் அதிகளவில் உபயோகப்படுத்தப்பட்டு, கிறிஸ்துவின் ஒரே சரீரமாய், கிறிஸ்துவில் இணைந்து செயல்பட வேண்மென்று நமக்கு வலியுறுத்துகிறது. நாம் இந்தப் பயணத்தை தனியாக அல்ல, இணைந்து, ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி, எழுந்துகட்ட, முன்னேற அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒற்றுமையாக செயல்படும் வேளையில் நாம் இன்னும் பலமாக இணைந்து வளர்ந்து தேவ ஊழியத்தை நிறைவேற்ற இயலும்.

- விசுவாசத்தில் கர்த்தரண்டை இன்னும் அதிகமாக கிட்டிச் சேர்வோமாக – அவருடனான உறவிலே ஆழமாக பலப்படுவோம்.
- நாம் கொண்டிருக்கிற நம்பிக்கையிலே உறுதியாக இருப்போம் – அசைக்கப்படமுடியாத நம் சாட்சியின் வாழ்வில் நிலைத்திருப்போம்.
- ஒருவருக்கொருவர் அன்பிலே தாங்குவோம் – கிறிஸ்துவின் இராஜ்யத்தை ஒன்றிணைந்துக் கட்டுவோம்.

முன்பே கூறியபடி ‘வேகமாக, உயரமாக, பலமாக, இணைந்து’ என்ற ஒலிம்பிக்கின் நோக்க வார்த்தையின்படி நாம் இணைந்து செயல்படும்போது கிறிஸ்துவுக்குள்ளான நம் வாழ்வு பெலப்படுகிறது. திருச்சபையின் ஊழியம் என்பது தனி ஒருவன் கிறிஸ்துவை பின்பற்றுவது மாத்திரமல்ல அது அனைவருக்குமான ஒரு அழைப்பு. இணைந்து நாம் அவரையே சேவிப்போம், அவருக்கே சேவை செய்வோம், அவருடைய நாமத்தை அகிலமெங்கும் பறைசாற்றுவோம்.

கர்த்தருக்கென ஓய்வின்றி உற்சாகமாக உழைத்த நமது மூத்த அனுபவமுள்ள மிஷனெரிகளை மதுரையில் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூடுகையில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். ஒவ்வொருவருடைய சாட்சிகளும் மகத்தான, உற்சாகம் தரக்கூடியவைகளாக அமைந்தன. நிகழ்ச்சியின் இறுதியில் எடுக்கப்பட்ட கருத்துகணிப்புகளில் இக்கூடுகையை வருடந்தோறும் நடத்தும்படி கேட்டுக்கொண்டனர். செயற்குழுவில் முன்மொழியப்பட்ட ‘‘மிஷனெரி என்பவர் எப்போதும் மிஷனெரிதான்” என்பதை முன்வைத்து அவர்களை நான் இன்னும் பணித்தளங்களில், வசிக்கும் இடங்களில் ஊழியம் செய்ய உற்சாகப்படுத்தினேன். ஓய்வு பெற்ற இந்த மிஷனெரி வல்லுநர்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

1000 மணி நேர ஜெபக்கூடுகைகள் பணித்தளங்களிலேயும், முன்னேற்றப் பணி மையங்களிலேயும், தலைமை செயலகத்திலேயும் கிரமமாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த முயற்சி நம் தேசத்திற்கும், ஊழியத்திற்கும் தேவையான, ஊக்கமான ஜெபங்கள் ஏறெடுப்பதை ஊக்குவிக்கிறது. இதற்காக விசேஷித்த ஜெபக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டு ஜெபிக்கும் குழுக்களுக்கு அனுப்பப்

பட்டுள்ளது. ஜெபக் கடிதம் வேண்டு பவர்கள் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள பட்சமாக கேட்டுக்கொள்கிறேன். தேவன் தனது மகத்தான கிரியையை இத்தேசத்தில் நடப்பிக்க நீங்களும் இந்த மன்றாட்டு ஜெபத்தில் இணைந்துகொள்ள உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

## நடக்கவிருக்கின்ற கூட்டங்கள் –

### உங்கள் ஜெபம் வேண்டி

*நான்கு முக்கிய கூட்டங்களுக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன:*

- ✦ கேரள மாநில முகாம் ஏப்ரல் 25 – 27 வரை கோழிக்கோட்டில் வைத்து நடைபெறவுள்ளது.
- ✦ ஏப்ரல் 25–27 வரை சத்தீஸ்கர் பிராந்திய ஓராவன் ஊழியங்கள் & வெள்ளி விழா கொண்டாட்டங்கள் – பத்தல்காவ்.
- ✦ ஏப்ரல் 25–27 வரை தமிழ்நாடு, புதுச்சேரி முன்னேற்றப்பணி ஊழியர்களின் குடும்பக் கூடுகை – கொடைக்கானல்.
- ✦ மே 15 – 18 தமிழ்நாடு, புதுச்சேரி மாநில முகாம் – சேலம்

அழிந்துபோகும் ஆத்துமாக்களை மீட்கும் ஊழியத்தின் கரிசனைகளைப் பகிர்ந்துகொள்ளவும், பணித்தளத்தில் ஊழியர்களின் தேவையை வலியுறுத்தவும் இந்த கூடுகைகள் மிகவும் உதவியாக இருக்கும். தேவ ஆவியானவரின் அசைவாடுதல் இம்முகாம்களில் உணரப்படவும், மாபெரும் அறுவடைகள் நம் தேசத்திலே நடைபெறவும் தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இறுதியாக ‘வேகமாக, உயரமாக, பலமாக, இணைந்து’ என்கிற ஒலிம்பிக்கின் நோக்க வார்த்தையை விட, நம் கிறிஸ்தவப் பயணத்தில் மிக முக்கியமானது விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்பவைகள் என வேதம் நமக்கு சுட்டிக் காண்பிக்கிறது. தேவனோடு விசுவாசத்தில் இணையவும், அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் அகிலத்திற்குச் சாட்சியாக இருக்கவும், கிறிஸ்தவ ஐக்கியத்தில் ஒருவரை யொருவர் அன்பினாலே தாங்கவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

ஊழியத்தில் புதிய பொறுப்பை ஏற்றுள்ள நான், உங்களுடைய ஜெபங்களை அதிகமாக யாசிக்கிறேன். தேவன் தாமே ஞானத்தையும், பலத்தையும், பகுத்தறிவின் ஆவியையும் எனக்கு தந்தருள்வாராக! உங்களுடைய ஊக்கமான வேண்டுதல்களும், ஆதரவும் விலைமதிக்க முடியாத வைகள். தேவ கிருபையால் அவரின் நோக்கம் சிறந்த முறையில் நிறை வேறும் என்று உறுதியாக நம்புகிறேன். விசுவாசத்திலேயும், அர்ப்பணிப் பிலேயும் நாம் ஒன்றிணைந்து முன்னேறுவோமாக!

தேவனின் உன்னதப் பணியில்



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**

# என்னை சிலுவைக்கண்டை வழிநடத்தும்

## எருசலேமிலிருந்து கொல்கொதா நோக்கி ஒரு பயணம்



சிலுவையில் அறையுண்டு உயிர்த்தெழுந்த நமதாண்டவரை நாம் முன்வைத்து அர்த்தமுள்ளதாக தியானிக்கும் இந்த லெந்து காலம், திருச்சபைகளின் வழிபாட்டு முறைகளில் புனிதமானவைகளாகக் கருதப்படுகிறது. இந்திய திருச்சபைகளுக்கும், ஊழியங்களுக்கும் சிலுவையின் பாடுகள் மிகவும் யதார்த்தமாக மாறிக் கொண்டே வருகிறது. அனைத்து இடங்களிலும் கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களை எதிர்கொள்கின்றனர். நாம் உபத்திரவப்படும்போது, சிலுவையைக் குறித்து வெட்கப் படாதவண்ணம், சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைப்போல அதனை எதிர்கொள்ள தேவன் நமக்கு வல்லமையை அருளுகிறார். நம்முடைய விசுவாச வாழ்க்கையின் மையப்பகுதியாக சிலுவை திகழ்கிறது. அங்குதான் நம்முடைய பாவங்கள் பரிகரிக்கப்பட்டன, கிருபை பொழியப்பட்டது, விசுவாசிக்கின்ற அனைவருக்கும் மீட்பு உறுதியாக்கப் பட்டது. சிலுவை ஒரு சரித்திர சின்னம் மாத்திரமல்ல அது அன்றாடம் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்படுகிற அழைப்பாகும். **கர்த்தரண்டை என்னை வழிநடத்தும்** என்ற பாடல் வரிகள், அவரின் காலடியில் அர்ப்பணித்து அவரின் தியாகத்தின் வல்லமையினால் வாழ, தேவனண்டை வர விரும்பும் ஓர் இருதயத்தின் ஆவலை வெளிப்படுத்துகிறது.

எருசலேமிலிருந்து கல்வாரி நோக்கிய பயணம், இயேசுவின் வாழ்க்கையைப் புரிந்து, விரைவில் சம்பவிக்கப் போகிறவைகளை உணர்த்தி, உண்மையில் அவர் யார் என்கிற சத்தியத்தை நமக்குப் போதிக்கிறது (மத்.21:10). அவர் எருசலேமை நெருங்கும்போது பதற்றமும், எதிர்பார்ப்பும் அதிகரித்துக் கொண்டே போகிறது. புழுதி படிந்த எருசலேமின் வீதிகள், நடக்கபோகிற, சரித்திரத்தை மாற்ற போகிறவைகளுக்கு மௌன சாட்சிகளாக நிற்கின்றன. இயேசு கிறிஸ்துவின் நகர பிரவேசத்தில் மனமகிழ்ந்து, ஓசன்னா, தாவீதின் மைந்தனுக்கு ஓசன்னா (ஓசன்னா– எங்களை இரட்சியும் என்று பொருள்படும்) (மத்.21:9) என்று கத்திய நிலைமாறி, முழு நகரமும் கலக்கத்திலும், குழப்பத்திலும் மூழ்கியிருந்தது என்று பார்க்கிறோம். பூமி அதிர்ச்சியினால் உண்டாகும் நடுக்கங்களின் வார்த்தை மத். 24:7, 27:51, 28:2 வசனங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மத்.27:17-22இல் ‘‘பரபாசை எங்களுக்குத் தாருங்கள், இவனை சிலுவையில் அறையுங்கள்’’ என்று கூக்குரலிட்டனர். சிலர் அழுது புலம்ப, பலர் கேலி பேச இப்படியாக உலகம் அறிந்திராத மாபெரும் அன்பிற்குச் சாட்சியாக எருசலேம் நகர வீதிகள் ஜனங்களின் குரலால் நிறைந்திருந்தன.

குற்றமற்ற தேவ குமாரன் இயேசு கிறிஸ்து தன்னுடையதல்லாத சிலுவையினை சுமந்துகொண்டு எருசலேமின் வீதி களினூடே கொல்கொதாவை நோக்கி நகர்கிறார். அவர் ஜனங்களின் பாவங் களையும், அவர்களின் கலகக் குரல் களையும் தம்மீது ஏற்றுக்கொண்டார்.

இந்த உபத்திரவம் ஊழியத்தின் முழுவடிவம் அல்ல, ஊழியத்தின் ஒரு பகுதியாகும். இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்திருக்கிறேன் என்பதில் ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்து உறுதியாக இருந்தார் (லூக்.19:10). ஆகவே சிலுவை என்பது ஊழியத்தின் உச்சகட்டம் என்பதாகவும், அவரை விசுவாசிக்கின்றவர்களுக்கு மீட்பினை உறுதிசெய்யும் நிகழ்வாகவும் இருக்கிறது.

## சிலுவையின் ஊழியம்

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங் களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குண மாகிறோம்" (ஏசா.53:4,5).

கெத்சமனேயில் நடந்த துரோகத்தி லிருந்து கிறிஸ்துவின் இறுதி மூச்சுவரை கல்வாரியில் நடைபெற்ற காரியங்கள் குறிப்பிட்ட நோக்கமுடையவைகளாகவே இருக்கின்றன. தனிப்பட்ட இரட்சிப்பிற்காக மாத்திரமல்ல அகிலத்தின் மீட்புக்காக இந்த பயணம் அமைகிறது.

## எல்லா ஜனங்களுக்குமான நற்செய்தி

யூத மதத்தலைவர்களின் கண்டனங்கள் மத்தியில் ரோமர்கள் மரணதண்ட னையை நிறைவேற்றும் போது, சிலுவையின் பாரத்தினால் கிறிஸ்து தள்ளாடிக்கொண்டிருக்க, சிரேனே ஊரானாகிய சீமோன் சிலுவையினை சுமந்து செல்ல அழைக்கப்பட்டான் (லூக்.23:26). கொல்கொதாவை நோக்கிய கிறிஸ்துவின் பயணம் அவரின் தியாகம் மற்றும் உலக இயல்பு ஆகியவைகளை வெளிப்படுத்துகிறது. இஸ்ரவேலின் இரட்சிப்பிற்காக மாத்திரமல்ல, அகிலத்தின் பாவ மீட்பிற்காகவே அவர் உலகத்திற்கு வந்தார் (1 யோ. 2:2). நாம் கிருபையைப் பெறவே அவர் சிலுவையில் ஆணி களால் அறையப்பட்டு தேவ கோபாக் கினையை ஏற்றுக்கொண்டார். உபத்திர வத்தின் வேளையிலும் அவருடைய இருதயம் வந்த நோக்கத்திலே நிலைகொண்டிருந்தது.

- மரண துக்கத்தின் வேளையிலும் சத்துருக்களுக்காக ஜெபித்தார். "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்.23:34).
- சிலுவையில் தொங்கின கள்ளனுக்கு இரக்கம் பாராட்டினார். "இன்றைக்கு நீ என்னுடனே பரதீசியிலிருப்பாய்" (லூக்.23:43).
- தேவனிடத்திலிருந்து பிரிக்கப் படுதலின் துயரத்தைத் தாங்கிக்கொண்டார். "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத்.27:46, சங்.22:1).

ஆனாலும் அவருடைய இறுதி மூச்சிலே "எல்லாம் முடிந்தது" என்று அறிக்கையிடுகிறார் (யோ.19:30). இது யூத இன மக்களுக்குமட்டுமன்றி உலகத்தின் அனைத்து இனத்திற்கும் தேவனோடு இடைபட தடையற்ற வழியினை ஏற்படுத்துகிறது. பிரிவினை யின் தடைச்சுவர் தகர்க்கப்பட்டது (எபே.2:14). இரட்சிப்பு என்பது ஆலயத் திற்குள் அடைபட்டு கிடக்காமல் உலகத்தின் முடிவு பரியந்தமும் பரவ வழிசெய்கிறது. விலைக்கிரயம் செலுத்தப்பட்டது, அவர் செய்த ஊழியம் முழுமையடைந்தது, அவரை விசுவாசிக்கும் அனைவருக்கும் இரட்சிப்பின் வழி திறக்கப்பட்டது, இதுவே நற்செய்தியின் மையக் கருத்தாகும். கிறிஸ்து ஏனோதானோவென்று மரிக்கவில்லை. நம்முடைய இடத்திலே அவர் மரித்தார். எனவே சிலுவையின் வழி என்பது, தியாக அன்பின் வழியாகவே உணரப்படுகிறது.

## சீஷத்துவத்திற்கும், ஊழியத்திற்குமான ஓர் அழைப்பு

தன்னை பின்தொடர்பவர்களுக்கு கிறிஸ்து சொன்னதாவது, "உங்கள் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்தொடருங்கள்" (லூக். 9:23). உணர்ச்சி மிகுதியினால் தீர்மானம் எடுக்காதபடி, வாழ்வின் முழுமைக்குமான அர்ப்பணிப்பினைச் செய்யுமாறு சீடர்களை அவர் தயார் செய்தார். கிறிஸ்தவம் பரவிய முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கு, கிறிஸ்துவுக்கு சீடராக இருப்பது என்பது தலையை வெட்டக் கொடுக்கிற ஆபத்தான ஒரு காரியமாக இருந்தது. அவர் நிமித்தம் அவரின் சீடர்கள் ஆலோசனை சங்கத்தில் நிறுத்தப்படுவார்கள், ஆளுநர்கள் மற்றும் ராஜாக்களின் சபையின் முன் இழுத்துவரப்படுவார்கள் என்று கிறிஸ்து முன்னரே தன்னுடைய சீடர்களுக்கு எச்சரிக்கை செய்திருந்தார் (மத்.10:17,18). அவருடைய மரணம் ஒரு முடிவாக இராமல் திருச்சபைகளின் ஊழியத்திற்கு ஆரம்பமாக இருந்தது. உயிர்த்தெழுந்தப்பின் கிறிஸ்து தன் சீடர்களுக்கு முன்பாக நின்று அவர்கள் செய்ய வேண்டிய பணியை ஒப்படைத்தார். "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்" (மத்.28:19). சிலுவை என்பது தனிப்பட்ட ஒருவரின் இரட்சிப்புக்காக மாத்திரமல்ல, அகில உலகத்தின் மீட்புக்காக ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்து சிலுவையைச் சுமந்து கொல் கொதா மலைக்குச் சென்றபடி நாமும் இந்த சுவிசேஷத்தினை உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சுமந்து செல்ல அழைக்கப்பட்டிருக்கிறோம்.

- சிலுவை நம்மை முன்நோக்கிச் செல்ல அழைக்கிறது. – பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் (யோ. 20:21).
- சிலுவை நற்செய்தி அறிவிக்க நம்மை கட்டாயப்படுத்துகிறது. – சுவிசேஷத்தை நான் பிரசங்கியா திருந்தால், எனக்கு ஐயோ (1 கொரி. 9:16).

- சிலுவை சீடர்களை உருவாக்க நம்மை பணிக்கிறது. - பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? (ரோ.10:14).

சிலுவையின் பாதை என்பது ஊழியத்தின் பாதையாகும். நான் கிறிஸ்துவைப் பின்பற்றுபவன் என்று பறைசாற்று கிறவன் அவருடைய தியாகத்தை அறியாதோருக்கு அறிவிக்க வேண்டும்.

## கொல்கொதாவும், உலக ஊழியமும்

கபாலஸ்தலத்திலே கள்ளர்கள் மத்தியில் தண்டனை நிறைவேற்றப்பட்டு தொங்கி கொண்டிருக்கும் வேளையில் ஒருவன், உன்னையே நீ காப்பாற்றிக்கொண்டு எங்களையும் காப்பாற்று என்று கேலி பேச, மற்றொருவன் தன் பாவங்களை உணர்ந்தவனாய் கெஞ்சுகிறான். சிலுவையின் இறுதிக் கட்டத்தில் கூட ஊழியம் தொடர்ந்தது. யாரும் மீட்புக்கு விதிவிலக்கல்ல என்பதை நிரூபிக்கும் வண்ணம் தன் இறுதிக் கட்டத்தில் ஒருவன் மீட்கப்படுகிறான்.

- விரும்பத்தகாத இடத்தில் கூட நாம் இழந்துபோனவர்களைத் தேடுகிறோமா?
- உலகமே வெறுத்தாலும் அவருடைய சுவிசேஷத்தைப் பறைசாற்ற நாம் ஆயத்தமாக இருக்கிறோமா?
- இன்னும் கேள்விப்படாதவர் களுக்காக நாம் துயர் அனுபவிக்கத் தயாரா?

## ஊழியப் பாதையில் நமது பொறுப்பு

எருசலேமிலிருந்து கொல்கொதா வரையிலான பயணம் உபத்திரவங்கள் நிறைந்தது மாத்திரமல்ல அது கிறிஸ்துவின் மீட்பின் அன்பின் செய்தியினை உள்ளடக்கியது. ஊழிய பாதையிலே அவருடைய மீட்பின் செய்தி யினை இந்த உலகத்திற்கு நாம் எடுத்துச் செல்கிறோம்.

சிலுவையின் காரணத்தினால்

- நாம் அவருடைய இரத்தத்தினாலே மீட்பைப் பெற்றிருக்கிறோம் (எபே.1:7).
- நம்முடைய விசுவாசத்தினாலே நியாயம் தீர்க்கப்படுகிறோம் (ரோ.5:1).
- கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக நாம் படைக்கப்பட்டிருக்கிறோம் (2 கொரி.5:17).
- நித்திய ஜீவனின் வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கிறோம் (யோ.3:16).

## நம்முடைய வாழ்விலே சிலுவையைச் சுமந்து திரிகிறோமா?

- கிறிஸ்துவைப் பின்பற்ற கொடுக்கப் படும் அழைப்பு அர்ப்பணிப்பின் அழைப்பு. பரி. பவுல் இவ்வாறு அறிக்கையிடுகிறார். “கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” (கலா. 2:20). சுயத்திற்கு மரித்து அவருடைய மகிமையில் பிழைத்திருப்பதே உண்மை சீஷத்துவம்.

- இழந்துபோனவர்களுக்கு அந்த சுவிசேஷத்தைச் சுமந்து செல்கிறோம். சிலுவையின் பாரத்தை சிரேனே ஊரானாகிய சீமோன் தாங்கிச் சென்றதுபோல, இழந்து போனவர் களின் பாரத்தை சுமக்க நாம் அழைக்கப்படுகிறோம். ஊழியம் என்பது ஒரு விருப்பம் அல்ல, அது ஒரு கட்டாயக் கடமையாகும். கேள்விப்படாவிடில் எப்படி விசுவாசிப் பார்கள் (ரோ.10:14).
- முதலாவதாக நாம் ஏற்றுக் கொண்டதால் நாம் ஊழியத்திற்குப் போக வேண்டும். உலகத்திற்காக கிறிஸ்து துயரத்தை அனுபவித்தார். இன்னும் அவரைக் கேள்விப்படாதோர் மத்தியில் இந்த சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல உலக ஆசாபாசங் களை விட்டுவிட நாம் தயாரா?
- சிலுவையில் நம்முடைய இரட்சிப்பை மாத்திரமல்ல, நம்முடைய ஊழிய அழைப்பினையும் பெறுகிறோம். தேசங்கள் அவரை அறியத்தக்கதாக கிறிஸ்து கொல்கொதாவில் துன்பங் களை சகித்தார். பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்பதே அவருடைய கட்டளையாக இருக்கிறது (யோ.20:21).

தேவனே எங்களை சிலுவைக்கண்டை நடத்தும். அதன் வல்லமையை இழந்து போகாவண்ணம் பாதுகாத்தருளும். உலகத்தின் இறுதிவரை இந்த நற்செய்தி யினை எடுத்துச்செல்ல எங்களை வழிநடத்தும். ஆமென்!

**அருள்திரு. விஜய் பி. ஐசக்**
– பொதுச்செயலர்



# மிஷனெரி பிரதிஷ்டை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் மேட்டுப்பாளையம் முன்னேற்றப்பணி மாவட்டத்தின் சார்பில் குஜராத் மற்றும் ஹரியானா மாநிலங்களில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகள் இருவரை 09.02.2025 அன்று சிறுமுகை சி.எஸ்.ஐ. இம்மானுவேல் ஆலயத்தில் வைத்து அருட்திரு. ஆர். கிப்ட் தாம்சன் அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். திருச்சபையின் குருவானவர் அவர்களுக்கும், திருச்சபை விசுவாசிகளுக்கும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துகொள்கிறோம். இவர்களை திரு. சாம்சன் குடும்பம் மற்றும் திரு. புஷ்பராஜ் குடும்பம் ஜெபித்து தாங்கி வருகின்றனர். இவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கின்றோம். இந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை சிறப்பாக நடந்து முடிய கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. எசேக்கியா,**
விரிவுப்பணி செயலர்
– மேட்டுப்பாளையம்.



# ஒய்வு பெற்ற மிஷனெரிகளின் கூடுகை

நமது இயக்கத்தில் ஓய்வுபெற்ற மிஷனெரிகளின் கூடுகை மனிதவள மேம்பாட்டுத் துறையால் ஒழுங்கு செய்யப்பட்டு மதுரை, சரந்தாங்கியிலுள்ள 'ஹிஸ் ரெஸ்ட்' தேவ சாந்தி வளாகத்தில் 2025 பிப்ரவரி 18 முதல் 20 வரை நடைபெற்றது. மறைந்த பி. சாமுவேல் ஐயா அவர்களின் மகன் திரு. ரிச்சர்ட் மிஷனெரிகளுக்கான போக்குவரத்து வசதிக்கான வாகனங்களை தந்து உதவினார்கள். அருள்திரு. ஐசக் தனசிங், திரு. மோசஸ் முரளிதரன், திரு. எட்வர்ட் ஜெபசிங் ஆகியோர் மிஷனெரிகளுக்கான பிரயாண பொறுப்புகளை ஏற்று உதவி செய்தனர். தங்குமிடம் மற்றும் விருந்தோம்பலை திருமதி. கிளாடி சாம் கவனித்துக்கொண்டார்.

பிப்ரவரி 18ஆம் தேதி மாலை துதிப்பாடல்களுடன் இக்கூடுகை ஆரம்பிக்கப்பட்டது. 19ஆம் தேதி காலை தியானத்தில் அருள்திரு. ஜாண் பெர்லின் தேவ வார்த்தையை பகிர்ந்துகொண்டார். டாக்டர் செல்வின் (ஒட்டன்சத்திரம்), அருள்திரு. ஜெயபால் சித்தர் (ஐ.இ.எம். மிஷனெரி) ஆகியோர் சிறப்பு செய்தியாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். வேல்டு கேசட் அவுட்ரீச் இந்தியா மற்றும் இந்திய வேதாகம சங்கத்தின் உதவியுடன் நமது மிஷனெரி திரு. கிறிஸ்டோபர் தாமஸ் மற்றும் திருமதி. வசந்தா வேம்பு அவர்களின் முயற்சியால் தயாரிக்கப்பட்ட சௌத்ரி ஆடியோ பைபிள் (புதிய ஏற்பாடு) அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. டாக்டர் செல்வின், ஓய்வு பெற்ற மிஷனெரிகள் தங்கள் கடந்தகால ஊழியத்தை நினைவுகூர்ந்து எதிர்க்கால சேவைக்கு தயாராக வேண்டுமென்று ஊக்குவித்தார். அதன்பின் அருள்திரு. ஜாண் பெர்லின் ஓய்வு மிஷனெரிகளுடன் கலந்துரையாடினார். மாலை சந்தியாவில் திரு. ரிச்சர்ட் அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ அன்புடன் தேவனின் பணியை செய்ய வேண்டுமென உற்சாகப்படுத்தினார்.

மறுநாள் 20ஆம் தேதி காலை தியானத்தில் நமது இயக்கத்தின் துணைத் தலைவரான திரு. சாம் பொன்னையா அவர்கள் தேவ வார்த்தையை பகிர்ந்துகொண்டார். டாக்டர் செல்வின் மற்றும் அருள்திரு. ஜெயபால் சித்தர்

ஓய்வு காலத்தில் வரும் சவால்களை எதிர்கொள்வதைக் குறித்தும், தாங்கள் இருக்குமிடத்தில் ஊழியத்தைத் தொடர்வதைக் குறித்தும் ஆலோசனை வழங்கினார்கள். ஒவ்வொரு ஓய்வு பெற்ற மிஷனெரியும் ஆண்டுதோறும் குறைந்தது ஒரு இளைஞரையாவது மிஷனெரி ஊழியத்திற்கு வழிநடத்த வேண்டும் என்றும், 2030ஆம் ஆண்டுக்குள் 1000 இளைஞர்களை மிஷனெரிகளாக பணித்தளங்களுக்கு அனுப்ப வேண்டுமென்ற இயக்கத்தின் தொலைநோக்குத் திட்டத்தையும் நமது விரிவுப்பணி செயலர் அருள்திரு. ரூபன் சாமுவேல் பகிர்ந்துகொண்டார்.

இயக்கத்தின் பொதுசெயலராக பொறுப்பேற்றுள்ள அருள்திரு. விஜய் பி. ஐசக், ஓய்வு பெற்ற மிஷனெரிகளின் ஊழியத்தை பாராட்டிப் பேசினார். மறைந்த பி. சாமுவேல் ஐயாவின் மூத்த மகன் திரு. ரேமண்ட், தனது குஜராத் ஊழிய அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். நிதிசெயலர் திரு. சாலமோன் ஜெபராஜ், வந்திருந்த மிஷனெரிகளை உற்சாகப்படுத்தினார். அருள்திரு. ஐசக் தனசிங் அவர்களின் முயற்சியினால், மதுரையைச் சேர்ந்த ஜெபக்குழுவினர் கூடுகைக்கு வந்திருந்த ஒவ்வொரு மிஷனெரி குடும்பத்திற்கும் வெகுமதியை வழங்கி மகிழ்வித்தனர்.

இயக்கத்தின் ஊடகக்குழுவின் மூலம் திரு. செல்வின் மற்றும் திரு. எட்வர்ட் ஜெபசிங் மூத்த மிஷனெரிகளின் வாழ்க்கை மற்றும் ஊழியங்களை குறித்த வீடியோ ஆவணப்படத்தை சேகரித்தனர். மனிதவள மேம்பாட்டு துறை செயலர் இக்கூடுகையில் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற மிஷனெரிகளை உற்சாகப்படுத்தி கூட்டத்தை நிறைவு செய்தார். இக்கூடுகையை ஆசீர்வதித்துத் தந்த தேவனுக்கும், இக்கூடுகைக்கு அதிகம் உதவிய திரு. ரிச்சர்ட் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**அருள்திரு. வி.பி. ஜெபராஜ் சாமுவேல்,**
செயலர் – மனிதவள மேம்பாட்டுத் துறை.



# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்

திரு. டி. வின்செண்ட் ஜெபக்குமார் ஐயா அவர்கள் 1990-ம் ஆண்டு வில்லிவாக்கம் சிட்கோ பகுதியில் நமது இயக்கத்தில் ஜெபக்குழுத் தலைவராக சிறப்பாக செயல்பட்டு வந்தார். ஐயாவும் அவருடைய மனைவியும் காணிக்கை சேகரித்து அனுப்புவதிலும், ஜெபிப்பதிலும், ஜெபக்குழு நடத்துவதிலும் சிறப்பாக செயல்பட்டு வந்தார்கள். இறுதி வரை ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் மிஷனெரிகளை ஆதரித்து வந்தவர் 26.01.2025 அன்று தன்னுடைய 75வது வயதில் நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். அன்னாரின் பிரிவினால் வாடும் பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**திரு. என். ஜெயசேகர்,** கௌரவ பிராந்திய விரிவுப்பணி செயலர் – திருமுல்லைவாயல்.



# சௌத்ரி மொழியில் ஒலி வேதாகமம் அர்ப்பணிப்பு

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இவ்வருடம் பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஓய்வு பெற்ற மிஷனெரிகளின் கூடுகையில் சௌத்ரி மொழியில் தயாரிக்கப்பட்ட ஒலி வேதாகமம் (ஆடியோ பைபிள்) அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களால் தேவ நாம மகிமைக்கென்று அர்ப்பணம் செய்யப்பட்டது. நம் இயக்கத்தின் மொழிப்பெயர்ப்பாளர்களான திரு. கிறிஸ்டோபர் தாமஸ் மற்றும் அவரது மனைவி திருமதி. வசந்தா வேம்பு அவர்கள் சௌத்ரி மொழியில் மொழிப்பெயர்த்த புதிய ஏற்பாடு 2006ஆம் ஆண்டில் இந்திய வேதாகம சங்கத்தாரால் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது. 2023ஆம் ஆண்டில் இந்த புதிய ஏற்பாடு சற்று திருத்தியமைக்கப்பட்டது. அச்சமயம் இந்திய வேதாகம சங்கத்தின் ஒலி ஒளி துறையின் துணை இயக்குநராக பொறுப்பேற்ற நமது இயக்கத்தின் முதல் மிஷனெரி அருள்திரு. ஹாரீஸ் ஹில்டன் அவர்களின் மகன் திரு. காலேப் மார்டின் அவர்கள் சௌத்ரி மொழியில் ஒலி வேதாகமம் வெளியிட இந்திய வேதாகம சங்கம் முன்வர ஆயத்தமாயுள்ளது என்று கூறினார். இந்த நல் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும்படி 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இதற்கான ஆயத்தப்பணிகள் துவங்கப்பட்டது. மாலோட் திருச்சபையைச் சேர்ந்த நமது விசுவாசியான திருமதி. ஆஷாவின் குரல் தேர்ந்தெடுக்கப்பட்டு, வியாராவிலுள்ள ஒரு கிறிஸ்தவரின் ஸ்டுடியோவில் வைத்து ஒலிப்பதிவு செய்யப்பட்டது. ஆஷா சௌத்ரி மொழியின் பழைய ஏற்பாட்டு மொழிப்பெயர்ப்பை சரிபார்ப்பதில் தன்னார்வலராக உதவி செய்தவர்களில் ஒருவர்.

இந்த ஒலிப்பதிவு 2024ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிக்கப்பட்டு ஒலிப்பதிவு நகல் இந்திய வேதாகம சங்கத்தாருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஒவ்வொரு வசனத்திற்கும் இடையே இடைவெளி கொடுக்கும்பணி முடிந்தப்பின் அதன் நகல் மின்னணுக் கருவியில் பதிவு செய்தவதற்காக வேல்டு கேசட் அவுட் ரீச் ஆஃப் இந்தியா என்ற இயக்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. பூரண வடிவம் பெற்ற சௌத்ரி ஆடியோ பைபிளை பிப்ரவரி 18ஆம் தேதி கிடைக்கப்பெற்றோம். 300 ஒலி வேதாகமத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக எடுக்கும் முயற்சிகளுக்காக ஜெபித்து கொள்ளுங்கள். **விசுவாசம் கேள்வினால் வரும்** என்ற வசனத்திற்கிணங்க இதைக் கேட்கிற சௌத்ரி மக்கள் வேத வசனத்திற்கு செவிகொடுக்க ஜெபிப்போம்.

**திரு. கிறிஸ்டோபர் தாமஸ்** (சௌத்ரி வேதாகம மொழிப்பெயர்ப்பாளர்)



# பணித்தள விஜயம்

பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டையிலிருந்து நமது பிராந்திய முன்னேற்றப்பணி செயலர் அருள்திரு. அ. ஜாண் சாமுவேல் அவர்கள் தலைமையில் 26 பேர் கொண்ட குழுவாக குஜராத் மற்றும் தாத்ராநகர் ஹவேலியிலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட தேவன் கிருபை செய்தார். நேத்ரங் சிறுவர் விடுதி மற்றும் தலைமைத்துவ பயிற்சி மையம் அமைந்துள்ள ஃபோக்டியில் 31.01.2025 அன்று மிஷனெரிகளுடன் இணைந்து உபவாசித்து ஜெபித்தோம். விடுதியில் படிக்கும் நம் விசுவாசிகளின் பிள்ளைகளுக்காகவும், அவர்கள் தேவைகளுக்காகவும் ஜெபித்தோம். அதன்பின் ஜாவ்டாவிலுள்ள தூய தாமஸ் ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை சந்தித்தோம். எங்களுடன் வந்த செல்வி. சாரோன் ஏஞ்சலின் மற்றும் திருமதி. விஜிலா அசோகன் ஆகியோர் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கலந்துரையாடினார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நமது மிஷனெரிகளின் தியாகமான கடின உழைப்பு எங்களை ஆச்சரியப்பட வைத்தது.

01.02.2025 அன்று பிப்பள்வாடா, ஹல்முடி, காம்ப்ளா டுங்கர்டா ஆகிய கிராமங்களில் கட்டப்பட்டுள்ள ஆலயங்களைப் பார்வையிட்டோம். மாதத்தின் முதல் நாள் போப்பி கிராம விசுவாசிகளோடு இணைந்து தேவனை ஆராதித்தோம். அன்று மாலை கெர்காம் மற்றும் ராந்தா விடுதிப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள், மனபாட வசனங்கள் அனைத்தும் எங்களை மெய்சிலிர்க்க வைத்தது. 02.02.2025 அன்று காலை மதுபன், பில்பெரி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற ஞானஸ்நான ஆராதனையிலும் கலந்துகொண்டு தேவனைத் துதித்தோம். 03.02.2025 அன்று எங்கள் பிரயாணத்தின்போது மும்பையில் ஏ.ஜி. திருச்சபையில் இரண்டு மணி நேரம் சிறப்பு ஜெபம் ஏறெடுக்க தேவன் கிருபை செய்தார். சவால் நிறைந்த மிஷனெரிப் பணியை இன்னும் துரிதப்படுத்த எங்களால் இயன்றமட்டும் செயல்படுவோம் என்ற தீர்மானத்தோடு திரும்பினோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. சாமுவேல் விக்டர்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – உடுமலை
**டாக்டர். மனோகர்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – பொள்ளாச்சி

## மிஷனெரி பிரதிஷ்டை




ஹிமாச்சல் பிரதேசம், நேர்வா பணித் தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரியை ஜார்கண்ட் மாநிலம், சந்தால் சாஹிப்கஞ்ச் பிராந்தியம், பெல்டிஹறா பணித்தளத்தைச் சேர்ந்த நமது விசுவாசி திரு. ஶ்ரீஜால் முர்மு குடும்பம் ஜெபித்து தாங்க முன்வந்துள்ளனர். 01.03.2025 அன்று நடந்த வருடாந்திர சந்தால் மேளாவில் வைத்து இம்மிஷனெரி பிரதிஷ்டை சிறப்பாக நடைபெற்றது. சந்தால் மக்கள் மத்தியில் தனிப்பட்ட குடும்பமாக மிஷனெரியைத் தாங்கும் முதல் பிரதிஷ்டை ஆராதனை இதுவாகும்; இதற்காக தேவனைத் துதிப்போம். வரும் நாட்களில் இதுபோன்ற அநேக தனிப்பட்ட குடும்பங்கள் மிஷனெரிகளை தாங்க முன்வர, தேவன் அவர்களை ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

**அருள்திரு. இராபின்சன் ஹஸ்தா,** துறைசெயலர் – வட இந்திய விரிவுப்பணி

## ஆலயப் பிரதிஷ்டை



கர்த்தருடைய பெரிதான கிருபையால் சென்னை ஆவடி பிராந்தியத்திலிருந்து மூன்று பேராக இணைந்து ஜார்கண்ட் மாநிலம் சென்றோம். அங்கு சாஹிப்கஞ்ச் மாவட்டத்திலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடவும், ஜெபிக்கவும், அவர்களுடன் இணைந்து தேவனைத் துதிக்கவும், அவர்களை உற்சாகப்படுத்தவும் தேவன் கிருபை செய்தார். மேலும் தம்தமியா பணித்தளத்திலுள்ள பாக்கூடி கொச்சடோலா கிராமத்தில் சென்னை, ஆவடி பகுதியை சேர்ந்த திரு. பீட்டர் அவர்களின் குடும்பத்தின் சார்பில் கட்டப்பட்ட தூய பீட்டர் தேவாலயம் 12.03.2025 அன்று தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. நமது மிஷனெரிகள் பிரதிஷ்டை ஏற்பாடுகளை மிக சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. ஜான் டிக்சன்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – ஆவடி

## திருவள்ளூர் மண்டலம் நடத்தும்
## அர்ப்பணித்தோர் முகாம் - 2025

நாள்: ஏப்ரல் 13 ஞாயிறு மாலை 4 மணி துவங்கி 14 திங்கள் மாலை 4 மணி வரை
இடம்: இறைவனின் தோட்டம், சென்றாயன் பாளையம், பூண்டி, திருவள்ளூர் மாவட்டம்
தேவ செய்தி: **Rev. N. ஆசீர்வாதம்**
பணித்தள பகிர்வு: **திருமதி. வசந்தி இம்மானுவேல்,** FMPB மிஷனெரி
தொடர்புக்கு: 044-2685 2200, 90039 70412

## தென் மண்டலம் நடத்தும்
## அர்ப்பணித்தோர் முகாம் - 2025

நாள்: ஏப்ரல் 13 & 14 - ஞாயிறு & திங்கள் (அரசு விடுமுறை)
ஞாயிறு மாலை 4 மணி முதல் திங்கள் மாலை 4 மணி வரை
இடம்: FMPB சிநேகாலயா, 14/1, கார்டன் தெரு, செயின்ட் மேரீஸ் முதலாவது
குறுக்கு தெரு, பெருமாள்புரம், திருநெல்வேலி - 7.
தேவ செய்தி: **Rev. பிரபாகர சாரதி,**
**Mr. S. நத்தானியேல் எட்வர்ட், Rev. G. கிங்ஸ்லி**
தொடர்புக்கு: 9445119789, 9444393228, 9443694021

## மிஷனெரி தரிசன கூடுகை - 2025
## VISION MISSION 25

நாள்: 14.04.2025, காலை 9.00 - 5.00 வரை
இடம்: YMCA Auditorium, வெப்பேரி
செய்தி: **Rev. இம்மானுவேல் ரஞ்சித்சிங், Dr. சாம் டேனியல்**
தொடர்பு: 9445200041, 9444396215, 9941305030
*(குறிப்பு: 18 வயது முதல் 30 வயது வரை இரட்சிக்கப்பட்ட
ஆண், பெண் வாலிபர் கலந்து கொள்ளவும்)*

## 26 மிஷனெரிகளின்
## பிரதிஷ்டை ஆராதனை

நாள்: 27.04.2025 ஞாயிறு காலை 8 மணிக்கு
இடம்: சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயம், திருப்பூர்.
தொடர்புக்கு: **அருள்திரு. வின்சென்ட் பிரேம்ராஜ்**



# ஆலயப்பிரதிஷ்டை



தூத்துக்குடி மாவட்டம், நல்லூர் பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. செல்லதுரை & திருமதி. செல்லம்மாள் ஆகியோரின் ஞாபகார்த்தமாக, ஜார்கண்ட் மாநிலம், பகையா பணித்தளத்திலுள்ள பைசர் கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தை, அவர்களது மகன் திரு. ரவி ஆபிரகாம் தலைமையில் குடும்பமாகச் சென்று 16.06.2024 அன்று பிரதிஷ்டை செய்தனர். ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை முடிவடையும் நேரத்தில் உயர்ஜாதி மதவாதிகள் பிரச்சனை செய்ததால் நமது குழுவினர் பைசர் கிராமத்திலிருந்து திரும்பி, வேனில் பகையா மிஷன் வளாகத்திற்கு வந்துகொண்டிருந்தபோது, 9 பேர் இருசக்கர வாகனங்களில் சுமார் 11 கி.மீ. தூரம் விரட்டியும், செங்கற்களை வீசி தாக்கியும் தொடர்ந்து வந்தனர். வேனின் உள்ளே 6 செங்கற்கள் விழுந்தும், அனைத்து கண்ணாடிகளும் உடைந்து உள்ளே விழுந்த நிலையிலும் யாருக்கும் எந்த சேதமும் இல்லாதபடி கர்த்தர் அற்புதமாகப் பாதுகாத்தார். நமது பகையா பணித்தள மிஷனெரி வசிக்கும் பாராகாட் வந்தபிறகு வேனின் எல்லா கண்ணாடிகளையும் உடைத்து விட்டார்கள். ஒருவன் பெரிய கம்பியை வைத்து வேனின் கதவை உடைக்க முற்பட்டபோது நமது மிஷனெரிகள் காவல் துறையை அணுகினார்கள்.

அனைவரின் ஜெபத்தைக்கேட்டு தேவ தூதனைப்போல காவல்துறையினர் வந்து நமது குழுவினரைப் பாதுகாத்து, காவல் நிலையம் அழைத்துச்சென்று முதலுதவி செய்து உதவினர். நமது மிஷனெரியையும், சுதேச ஊழியரையும் காவல் நிலையத்தில் இருக்க வைத்து, மற்ற நமது ஊழியர்களையும், ஜெபக்குழுவினரையும் காவல் துறையினர் உதவியுடன் நமது பகையா மிஷன் வளாகத்திற்கு அனுப்பி வைத்தார்கள். நமது மிஷனெரிக்கு ஆரம்பகால ஊழியத்திலிருந்து உதவி செய்து வருகிற கிறிஸ்தவரல்லாத ஒரு தலைவரைத் தொடர்புகொண்டபோது அவர் வந்து, அவர்களை விடுவிப்பதற்கு உதவினார். ஆபத்தான சூழ்நிலையில் அற்புதமாகப் பாதுகாத்த தேவாதி தேவனை மனதாரத் துதிக்கிறோம். அல்லேலூயா!

**விரிவுப்பணி பிராந்திய செயலர்** – தூத்துக்குடி தெற்கு

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்



திரு. எஸ்.ஏ. ஸ்டீபன் செல்வராஜ் அவர்கள் வான்படையில் 21 ஆண்டுகள் பணியாற்றி பின்னர் இந்தியன் வங்கியில் 16 ஆண்டுகள் பணி செய்து ஓய்வு பெற்றப்பின் தன் மனைவியுடன் இணைந்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னேற்றப்பணியில் தன்னை முழுமையாய் ஈடுபடுத்தி வந்தார். 1978இல் அலகாபாத்தில் பணியாற்றியபோது நமது மிஷனெரி திரு. செல்லதுரையின் சகோதரர் திரு. ஞானமுத்து மூலம் FMPBயைக் குறித்து அறிந்து அங்குள்ள ஜெபக்குழுவில் பங்குபெற்று வந்தார். 2003லிருந்து அம்பத்தூர் பகுதியில் முன்னேற்றப்பணி ஊழியத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 2008க்கு பிறகு தன் சொந்த ஊரான கடையம் பகுதியில் அனைத்து ஆதரவாளர்களின் வீடுகளுக்கும் சென்று ஜெபித்து, காணிக்கை சேகரித்து 20ஆம் தேதிக்குள் தலைமை செயலகத்திற்கு அனுப்புவதில் மிகவும் சிரத்தையுடன் செயல்பட்டார். சிறந்த ஜெபவீரரான இவர் மிஷனெரிகள், ஊழியர்கள், ஸ்தாபனங்கள், சபைகள், அரசாங்கத் துறைகள் அனைத்துக்கும் ஊக்கமாக ஜெபித்ததோடு மற்றவர்களையும் ஜெபத்தில் உற்சாகப்படுத்தி வந்தார். ஓசூரில் வசிக்கும் மகன் திரு. சாமுவேல் ஜான்சன் நம் இயக்கத்தின் பொதுக்குழு அங்கத்தினர். அவரது குடும்பமும், திருச்சியில் வசிக்கும் மகள் திருமதி. சோபியா பாஸ்கர் அவர்களும் குடும்பமாக முன்னேற்றப்பணி ஊழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். திரு. எஸ்.ஏ. ஸ்டீபன் செல்வராஜ் அவர்கள் 02.01.2025 அன்று பூரண விசுவாசத்துடன் தன் ஓட்டத்தை முடித்து தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசித்துள்ளார். அவரது மனைவி திருமதி. ரெஜினா மற்றும் பிள்ளைகளின் குடும்பங்களை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

**அருட்திரு. C. ஆசீர் செல்வராஜ்,** விரிவுப்பணி செயலர் – தென்காசி



கன்னியாகுமரி பிராந்தியத்திலுள்ள திட்டுவிளை பணிமாவட்டத்தின் கௌரவ முன்னேற்றப்பணி செயலராக இருந்த திரு. எஸ். ஆசீர்தாஸ் அவர்கள் 04.01.2025 அன்று தன் 76ஆம் வயதில் தேவனுடைய ராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களையும், ஊழியர்களையும் அதிகம் நேசித்து, ஜெபித்து, தங்களுடைய ஈகையினால் தாங்கி வந்தவர்கள். தன்னுடைய பி.எஸ்.என்.எல். அதிகாரி பணியோடு 40 ஆண்டுகளுக்கு மேலாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவோடு இணைந்து பணியாற்றி, கன்னியாகுமரி மாவட்டத்தின் பல பகுதிகளில், இயேசுவை அறியாத வட இந்திய மக்களுக்காக ஜெபிக்கவும், கொடுக்கவும் கற்றுக்கொடுத்தவர். மிஷனெரிகளை உருவாக்கி அனுப்பவும், மிஷனெரி ஆதரவாளர்களை கண்டுபிடிக்கவும், ஜெபிக்கும் குழுக்களை உருவாக்கவும் அயராது செயல்பட்டவர். அவர்களுடைய இரண்டு மகன்கள் குடும்பத்திற்கும் ஊழிய பாரத்தைக் கொடுத்து ஊழியம் செய்ய, தாங்க உற்சாகப் படுத்தியவர். இவருடைய பிரிவால் வாடும் அன்பு குடும்பத்தினர்களுக்காக ஜெபிப்போம்.

**அருள்திரு. டி. ஆல்பின்,** விரிவுப்பணி செயலர் – கன்னியாகுமரி



# ஊழியர் பிரதிஷ்டை

தேவனின் பெரிதான கிருபையால், 2025 ஜனவரி மாதம் 12ஆம் தேதி மாலை பாண்டிச்சேரி ஆற்காடு லுத்தரன் ஆலயத்தில் வைத்து நமது மிஷனெரிகள் 10 பேர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இந்த ஆராதனையை ஆலயப் போதகர் அருள்திரு. டென்னட் வின்செண்ட் மற்றும் தமிழ் மெத்தடிஸ்ட் ஆலயத்தின் போதகர் அருள்திரு. சாமுவேல் சரவணன் அவர்கள் நடத்திக் கொடுத்தனர். இந்த பிரதிஷ்டை ஆராதனையில் நம் இயக்கத்தின் உப தலைவர் திரு. சாம் பொன்னையா அவர்கள் தேவ செய்தியை பகிர்ந்துகொண்டார். சுமார் 200க்கும் அதிகமான அங்கத்தினர்கள் கலந்துகொண்டு மிஷனெரிகளின் பணித்தள பகிர்வைக் கேட்டு, தேவன் செய்கின்ற மகத்தான காரியங்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்லி உற்சாகம் பெற்றுச் சென்றனர். மிஷனெரிகளை தாங்கும் குடும்பத்திற்காகவும், உழைத்த ஒவ்வொருவருக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக!

**திரு. J.A. எபினேசர்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – பாண்டிச்சேரி


## நிதி அலுவலகத்திலிருந்து




### இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**
**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar
**ICICI Bank UPI ID: fmpb01@icici**
**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur
**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

### காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**



# பணித்தள விஜயம்

கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காக தாம்பரம் முன்னேற்றப் பணியிலுள்ள 16 தலைவர்கள் அக்டோபர் மாதம் சத்தீஸ்கர் மாநிலத்தி லுள்ள பத்தல்காவ் பணித்தளத்திற்குச் சென்றோம். அங்குள்ள நமது விசுவாசிகள் மிகவும் சிறந்த முறையில் எங்களை வரவேற்றனர். நமது விசுவாசிகளின் வாலிபர்களுக்கு நடத்திய கூடுகையில் கலந்துகொண்டு அவர்களுக்கு செய்தி கொடுத்து, அவர்களுக்காக ஜெபித்தோம். அங்குள்ள நமது சிறுவர் விடுதியையும் பார்வையிட்டு அவர்களுக்காக ஜெபித்தோம். பின்பு அக்சரா என்ற பணித்தளம் சென்று அங்குள்ள சபை மக்கள் மிக அழகாக ஆவியானவரின் பிரசன்னத்தில் நிறைந்து ஆண்டவரை ஆராதிப்பதைக் கண்டு தேவனுக்கு நன்றி செலுத்தினோம். நமது ஊழியர்களின் அர்ப்பணமுள்ள வாழ்க்கை, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் பணியில் கொண்டுள்ள ஆர்வம் கண்டு ஆண்டவரை துதித்து, ஜெபித்து திரும்பினோம்.

**அருள்திரு. சி.ஆர். ஜார்ஜ்,** பிராந்திய விரிவுப்பணி செயலர் – வட தமிழ்நாடு.

## மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திரு. சாலமோன் ராஜன் அண்ணன் அவர்கள், மூணார் அருகில் தென்மலை எஸ்டேட்டில் பிறந்தார். திருமணத் திற்குப்பின் தொழில், வியாபாரம் செய்வதற்கு திருச்சி வந்து, நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் மிகவும் அர்ப்பணமுள்ள, சிறந்த ஸ்கேன் தலைவராக ஊழியத்தை நிறைவேற்றினார்கள். ஆத்தும ஆதாயப்பணியில் மிகுந்த பாரம்கொண்ட இவர் திருச்சி, பஞ்சப்பூர் பகுதியில் ஊழியம் செய்து சபை நாட்டினார். இவர் ஒரு தீவிர மிஷனெரி மற்றும் குழந்தை ஆதரவாளர். அநேகப் பணித்தளங்களுக்கு விஜயம் செய்து, உபவாசித்து ஜெபித்து, மிஷனெரிகளை ஊக்குவித்து வந்தவர்கள். கடந்த 22.01.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அண்ணன் அவர்களின் மறைவு நமது இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பு. துயரில் வாடும் திருமதி. எஸ்தர் சாலமோன் அக்கா, மகன் வில்சன்சாம், மகள்கள் எபி மற்றும் ரேச்சல் ஆகிய மூன்று பேரின் குடும்பங்களுக்காக, பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

**அருள்திரு. மணிமாறன்,** விரிவுப்பணி செயலர் – மத்திய தெற்கு மண்டலம்.



# பணித்தள விஜயம் & ஆலய பிரதிஷ்டை

கர்த்தரின் பெரிதான கிருபையால் நீலகிரி மற்றும் மேட்டுப்பாளையம் பணி மாவட்டத்திலிருந்து 27.02.2025 அன்று ஜார்கண்ட் மாநிலத்திற்கு 24 பேர் கொண்ட குழுவாக பணித்தள விஜயம் செய்ய தேவன் கிருபை செய்தார். 01.03.25 அன்று அதிகாலை யில் பர்ஹர்வா சென்றடைந்தோம். அங்கு கோதுமை மணியாக விதைக்கப்பட்ட ஊழியர்களின் கல்லறைக்குச் சென்று ஜெபித்தோம். அதைத் தொடர்ந்து தோனிபிச்சக்கனியில் இயங்கிவரும் பகல்நேர சிறுவர் பராமரிப்பு மையத் திலும், பந்தேனி ஆங்கிலப் பள்ளியிலும் கற்றுவரும் சிறார்களைக் கண்டு தேவனைத் துதித்தோம். அதன்பின் ஹிரன்பூர் பகுதியில் நடைபெற்று வந்த சந்தால் மேளாவில் கலந்துகொண்டு, கூடியிருந்த விசுவாசிகள் தேவனை ஆராதிக்கிறதை நேரில் கண்டு மிகுந்த சந்தோஷம் அடைந்து தேவனைத் துதித்தோம். அது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாகவும், அற்புதமாகவும் இருந்தது. பின்னர் சஹர்ஜோடி பணித்தளத்தி லுள்ள சந்தால் கிராமத்திற்குச் சென்று இரவுக்கூடுகையில் கலந்துகொண்டு விசுவாசிகளின் சாட்சிகளைக் கேட்டு சுவிசேஷத்தின் வல்லமையை உணர்ந்து கொண்டோம். 02.03.25 அன்று நீலகிரி மற்றும் மேட்டுப்பாளையம் பணி மாவட்டத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட கரோனி பணித்தளத்திலுள்ள பலூர்சுவா கிராமத்தின் ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். மால்பஹாடி விசுவாசிகள் அன்போடு எங்களை வரவேற்று உபசரித்தார்கள். அவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் புதிய ஆலய பிரதிஷ்டை ஆராதனை எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்துகொடுத்த தலைவர்கள், மிஷனெரி குடும்பங்கள் மற்றும் விசுவாசிகள் அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துகொள்கிறோம்.

எங்களுடைய அர்ப்பணத்தையும், தரிசனத்தையும் புதுப்பித்துக்கொள்ளவும், மக்களுக்காக இன்னும் அதிகமாக பாரத்தோடு ஜெபிக்கவும் தீர்மானித்து அங்கிருந்து எங்கள் பகுதிகளுக்கு பாதுகாப்பாக வந்தடைந்தோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருள்திரு. எசேக்கியா,** விரிவுப்பணி செயலர் - மேட்டுப்பாளையம்.



# நானக்மாட்டா பணித்தளம்

உத்ராஞ்சல் என்று முன்னர் அழைக்கப்பட்ட உத்தரகாண்ட் மாநிலம் வட இந்தியாவில் நேபாள தேசத்திற்குக் கிழக்கேயும், உத்திரப்பிரதேசத்திற்கு மேற்கேயும், ஹரியானா மாநிலத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ளது. இதன் தலைநகரம் டேராடூன் ஆகும். இந்த மாநிலம் காலால் மற்றும் குமோன் என்று இரண்டாக பிரிக்கப்பட்டு 13 மாவட்டங்களைக் கொண்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் லைத் காலாலியினர் என்றும், குமோனிகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இந்த மாநிலம் அநேக புண்ணிய ஸ்தலங்களை கொண்டுள்ளதால் இதை தேவ் பூமி (தேவர்களின் பூமி) என்று அழைக்கிறார்கள். இங்கு காடுகள், காட்டு மிருகங்கள் ஏராளமாக உண்டு. எங்கு திரும்பினாலும் செழுமையாக காணப்படுகிறது.

இம்மாநிலத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு 2005ஆம் ஆண்டு சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பித்தது. மால்தன்சொர் என்ற முதல் பணித்தளம் அருள்திரு. மனோஜ் அவர்கள் குடும்பத்தால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 5 பணித்தளங்களாக விரிவடைந்து ஊழியம் நடைபெற்று வருகிறது. இம்மாதம் இம்மாநிலத்திலுள்ள நானக்மாட்டா பணித்தளத்தை குறித்து அறிந்துகொண்டு இங்கு நடைபெறும் ஊழியத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

## நானக்மாட்டா

நானக்மாட்டா பணித்தளம் உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள உத்தம்சிங் மாவட்டத்திலுள்ளது. முன்னர் இவ்விடம் கோரக் மாட்டா என்று அழைக்கப்பட்டது. பின்னர் 16ஆம் நூற்றாண்டில் குருநானக் இங்கு அமைந்துள்ள குருத்துவாரை பார்வையிட வந்தபோது நானக்மாட்டா என்று மாற்றினார் என்று நம்பப்படுகிறது. இங்கு ராய்சீக்கியர்கள், தாரு (புக்சே) போன்ற மக்கள் இனங்கள் வாழ்கின்றனர். இவர்களில் நம் ஊழியம் ராய்சீக்கியர்கள் மத்தியில் அதிகம் நடைபெறுகிறது. இவர்கள் ஹிந்தி மற்றும் பஞ்சாபி மொழியைப் பேசுகின்றனர்.

இம்மக்கள் மத்தியில் சிலை வழிபாடு இல்லை. எனவே இங்கு கோவில்களுக்கு பதிலாக குருத்துவார்கள் உள்ளன. இம்மக்கள் குருநானக் ஜெயந்தி மற்றும் வைஷாக்கி போன்ற நாட்களை கொண்டாடுகின்றனர். இவர்கள் தங்கள் வழிபாடுகளுக்கென எந்த பிரத்தியேக நாட்களையும் வைத்துக்கொள்வதில்லை. இவர்கள் சுமார் பத்தாயிரம் பேர் 115 கிராமங்களிலும், இரண்டு பெரிய நகரங்களிலும் வாழ்கின்றனர். இவர்களின் முக்கிய வாழ்வாதாரம் விவசாயமும், மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்கள் தயாரிப்பதுமாகும். இம்மக்கள் கூட்டத்திலுள்ள பெண்கள் விளை நிலங்களில் கூலித் தொழிலாளர்களாகவும், கால்நடை வளர்ப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். வாலிபர்கள் ராணுவத்திலும், தொழிற்சாலைகள் மற்றும் சுய தொழில்களிலும் உள்ளனர். இவர்கள் மத்தியில் 73% ஆண்களும், 58% பெண்களும் கல்வி கற்றவர்கள். இவர்கள் அரசியலிலும் ஆர்வம் காட்டுகின்றனர். இம்மக்களுக்கான பொது தீர்மானத்தை அந்தந்த கிராமத் தலைவர் எடுக்கிறார்கள்.

இவர்கள் மத்தியில் கிறிஸ்தவர்கள் இருந்ததில்லை. ஆனால் கத்தோலிக்க கிறிஸ்தவ ஸ்தாபனம் சில காலங்கள் ஊழியம் செய்திருக்கின்றனர். தற்போது இவர்கள் மத்தியில் எவ்வித ஊழியமும் நடைபெறவில்லை. இவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இம்மக்கள் மத்தியில் சிறு வயதிலேயே போதை பழக்கம், குரு வணக்கம், ஸ்திரத் தன்மையற்ற அரசியலமைப்பு, சட்டத்திற்கு புறம்பே தயாரித்து வைத்திருக்கும் ஆயுதங்கள், சிறுவர் திருமணங்கள் மற்றும் விவாகரத்து இவையாவும் மிக பெரிய சவாலாக உள்ளது.

## நமது ஊழியம்



திரு. ராமசாமி ஜேரோம் குடும்பம்

ஜுன் 2021ஆம் ஆண்டு நமது ஊழியர்கள் திரு. ராமசாமி ஜெரோம் மற்றும் திரு. சிவகுமார் ஆகியோர் இப்பணித்தளத்தை ஆய்வு செய்தனர். அதன் பின் 04.08.2021 அன்று முதல் பணித்தளம் திறக்கப்பட்டு நமது ஊழியர் திரு. சிவகுமார் & திருமதி. சுசிலா மாரக் அவர்களால் ஊழியம் துவங்கப்பட்டது. ஊழியர்கள் இப்பகுதியில் கைப்பிரதிகளை விநியோகித்துகொண்டிருந்தபோது, 40 ஆண்டுகளாக அசுத்தாவியின் கட்டுகளினால் இரவில் தூங்க முடியாமல் தவித்து வந்த திரு. சத்வேந்தர் என்பவரின் மனைவி தனது கணவருக்காக ஜெபிக்கும்படி ஊழியர்களை வேண்டிக் கொண்டார். எனவே ஊழியர்கள் தொடர்ந்து மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் அவரது வீட்டில் ஜெபம் நடத்தி வந்தனர். மூன்றாம் ஞாயிறு அன்று ஜெபிக்கும் வேளையில் தேவன் அவருக்கு அசுத்தாவியின் கட்டுகளிலிருந்து பரிபூரண விடுதலையை

அருளினார். எனவே திரு. சத்வேந்தர் சிங் மற்றும் அவரது மனைவி திருமதி. பல்ஜீத் கௌர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர். இவர்களே நானக்மாட்டா பணித்தளத்தின் முதல் விசுவாசிகளா வார்கள். உங்களின் தொடர் ஜெபம் மற்றும் ஆதரவினால் தேவன் இப்பணித் தளத்தில் தொடர்ந்து ஆத்தும அறுவடையைக் கட்டளையிட்டு வருகிறார்.



## ஜெபிக்க

- இம்மக்கள் மத்தியில் காணப்படும் முன்கோபம் மற்றும் சட்டத்திற்கு புறம்பே பயன்படுத்தும் ஆயுத பழக்கம் ஒழிய...
- தங்கள் வாழ்வாதாரத்திற்காக மது உற்பத்தி மற்றும் பலவிதங்களில் போதை பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களும், இதை உபயோகிக்கும் நமது விசுவாசிகளும் மனந்திரும்பவும், மாற்று தொழில் வாய்ப்புகள் கிடைக்கவும்...
- இவர்கள் மத்தியில் காணப்படும் திருமணம் சார்ந்த பிரச்சனைகள் நீங்கி அழகிய குடும்பங்கள் கட்டப்பட...
- குரு வணக்கத்தில் பெரிதும் ஈடுபட்டு திருமண வைபவங்களில் கிறிஸ்தவ முறைப்படி திருமணங்கள் நடை பெற்றாலும், குருத்துவாரிலிருந்து வந்து 'கிரந்து' என்ற நூலை வாசிக்காமல் முடிவடைகிறதில்லை. எனவே இவ்வித அடிமைத்தனத்தி லிருந்து விடுபட்டு திரள் திரளாய் இம்மக்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொள்ள...
- இங்கு ஆலயங்கள் இல்லை. சிறிய குழுக்களாக வீடுகளில் கூடி தேவனை ஆராதிக்கின்றனர். தடைகள் உடைக்கப்பட்டு ஆலயங்கள் கட்டப்பட...
- மலை பாம்புகள், முதலைகள், சிறுத்தைகள் மற்றும் கொடிய காட்டுமிருகங்களிடமிருந்து தேவன் பாதுகாக்க...
- மதமாற்ற தடைச் சட்டம் இருப்பதால் மதவாதிகளிடமிருந்து விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் பாதுகாக்கப்பட...
- குருத்துவார்கள் மூலம் வரும் எதிர்ப்புகள் மற்றும் பயமுறுத்தல்கள் மறைய...
- இங்குள்ள விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவை விடுதலையோடு ஆராதிக்கவும், கிறிஸ்துவுக்குள் வேரூன்றி வளரவும்....
- தற்போது இங்கு ஊழியம் செய்யும் திரு. ராமசாமி ஜெரோம் & திருமதி. ராஜம் தம்பதியினரை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

# பணித்தள விஜயம்



திருப்பூர் பிராந்தியத்திலிருந்து ஜெபக்குழு தலைவர்கள் மற்றும் அங்கத்தினர்கள் அடங்கிய 19 பேர் கொண்ட குழுவாக 17.09.2024 முதல் 26.09.2024 வரை ஹிமாச்சல் பிரதேச பணித்தளங்களை பார்வையிட்டு வந்தோம். இரண்டு குழுக்களாக பிரிந்து தலா 5 பணித்தளங்களை பார்த்து, திருச்சபை விசுவாசிகளோடு, ஊழியர்களோடு அதிக நேரம் ஜெபிக்க தேவன் உதவி செய்தார். இரவு நேரங்களில் விசுவாசி குடும்பங்களோடு அமர்ந்து ஜெபித்த நேரம் ஆசீர்வாதமாக இருந்தது. கடுமையான கால சூழ்நிலை, கரடுமுரடான மலை பாதைகள், பள்ளத்தாக்குள் மத்தியில் கள்ளம் கபடமில்லாத மக்களுக்காக, மிக கடினமாக உழைக்கும் நமது மிஷனெரி குடும்பங்கள், சுதேச ஊழியர்களின் குடும்பங்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். ஹிமாச்சல பிரதேசத்திற்காக தொடர்ந்து ஜெபிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்களாக ஜெபப் பாரத்தோடு திரும்பிவர தேவன் உதவி செய்தார். அல்லேலூயா!

**அருள்திரு. வின்சென்ட் பிரேம்ராஜ்,** பிராந்திய விரிவுப்பணி செயலர் – திருப்பூர்

# பணித்தள விஜயம்



கர்த்தருடைய பெரிதான கிருபையால் கோயம்புத்தூர் பிராந்தியத்திலிருந்து பிப்ரவரி 22ஆம் தேதி அன்று ஜெபக்குழு தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களாக 17 பேர் கொண்ட குழு மேற்கு வங்காளத்திலுள்ள ராணிகஞ்ச் & இட்டாஹர் பணித்தளங்களை பர்வையிடச் சென்றோம். லாவன்டங்கா கிராமத்தை பார்வையிட்டதோடு அங்கு கட்டப்பட்டுள்ள சபை சார்ந்த பயிற்சி மைய கட்டிடத்தை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். அன்று இரவு ரோல்குட்டா கிராமத்தில் நடந்த இரவுக் கூட்டத்தில் கலந்துகொண்டோம். மறுநாள் பசார் கிராமத்தில் வசிக்கும் ராஜ்பான்சி மற்றும் சந்தால் இன மக்களுடன் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு எங்களது சாட்சிகளையும், தேவ செய்தியையும் பகிர்ந்துகொண்டோம். இந்த பணித்தள விஜயம் எங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. அங்கு பணி செய்யும் மிஷனெரிகள் மற்றும் பிராந்திய செயலர் எங்களுடன் இருந்து எங்களை வழிநடத்தினார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**அருள்திரு. பி. டேவிட்,** விரிவுப்பணி செயலர் – கோவை

# போஷேரா திருச்சபை வரலாறு

## மொக்கடா பணித்தளம் – கோதவரி பிராந்தியம்

### மத்திய மண்டலம் – மஹாராஷ்டிரா



*எழுதியவர்:* **திருமதி. ஆக்னஸ் எட்வர்ட்**

மஹாராஷ்டிரா மாநிலம், தானே மாவட்டத்தின் மொக்கடா தாலுகாவில் அமைந்துள்ளது போஷேரா என்ற பெரிய கிராமம். கொங்கன் பிராந்தியத்தைச் சேர்ந்த போஷேரா கிராமத்தில் 987 குடும்பங்கள் வசிக்கின்றனர். இதன் மொத்த ஜனத்தொகை 4417. இந்திய அரசியலமைப்பு மற்றும் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்படி போஷேரா கிராமம் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சர்பஞ்ச் எனும் கிராமத் தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது. 94.63% பழங்குடியினர் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் விவசாய உரிமையாளர்களாகவும், விவசாய தொழிலாளர்களாகவும் உள்ளனர்.

### ஆரம்பம்

1990இல் திரு. துக்காராம் யஷ்வந்த் வாஹ் என்பவரின் மூலம் போஷேரா கிராமத்தில் ஏற்கனவே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆண்டவரை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் எதிர்ப்பினிமித்தம் நாசிக் பகுதியில் கூடி தேவனை ஆராதித்து வந்தனர். 2004இல் எட்டு குடும்பங்கள் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட போதிலும், அவர்களுக்கு சரியான ஆவிக்குரிய வழிகாட்டுதல் இல்லாதிருந்தது. 2006ஆம் ஆண்டில் நமது இயக்கத்தின் மூலமாக அருள்திரு. ஜாண்சன் பர்னபாஸ் மற்றும் அருள்திரு. பெத்துவேல் பர்தன் ஆகியோரால் பழங்குடியினர் மற்றும் ஆண்டவரை அறியாதோர் மத்தியில் நற்செய்தி அறிவிக்க மொக்காடா பணித்தளம் திறக்கப்பட்டது. ஜுலை 2007இல் மொழி பயிற்சி பெற்ற மிஷனெரி திரு. பசவராஜ் & திருமதி. சன்மதா மொக்காடா பணித்தளத்திலுள்ள ஜவ்ஹார் பகுதியில் தங்கி ஊழியம் செய்தனர்.

### முதல் விசுவாசி

திரு. பசவராஜ், போஷேரா கிராமத்திலுள்ள திரு. பஹுதர்ம கடாலி என்பரின் வீட்டில் ஆராதனை துவங்கியபோது ஆரம்பத்தில் கிறிஸ்தவ விரோதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். 2007இல் காவல் துறையினரால் எதிர்ப்பாளர்கள் எச்சரிக்கப்பட்டு விசுவாசிகள் விடுவிக்கப்பட்டனர்.

எதிர்ப்புகளை சந்தித்தபோதிலும் திரு. பசவராஜ் விசுவாசிகளை சந்தித்து இரவு கூட்டங்களை மறைவாக நடத்தி வந்தார். ஒருமுறை இரவுக் கூட்டம் முடியும் அதிகாலை 3 மணி வேளையில் அவரை தாக்கும்படி எதிர்ப்பாளர்கள் முயற்சித்தபோது தேவன் அவர்களின் கையிலிருந்து ஊழியரை தப்புவித்தார். திரு. கோவிந்த் கவார் என்பவரது வீட்டில் ஞாயிறு ஆராதனை துவங்கும் வரை மறைவாக கூடி ஆராதித்து வந்தனர். கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில் ஆராதனையை தடைசெய்த காவல் துறையினர் திரு. பசவராஜை பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

ஊழியர், சிறுபான்மை ஆணையத்திடம் உதவி கோரியதின் விளைவாக 20 காவலர்களின் பாதுகாப்புடன் இரவு கூட்டம் நடத்தப்பட்டு, போஷேரா அணையில் திரு. பஹூதர்ம கடாலி உட்பட 148 பேர் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சியும் நடை பெற்றது. ஆலயம் கட்டப்படும் வரை திரு. கடாலி வீட்டில் தொடர்ந்து ஞாயிறு ஆராதனை நடைபெற்று வந்தது. இதில் சுமார் 80 பேர் கலந்துகொண்டு தேவனை ஆராதித்து வந்தனர்.

**பஹூதர்ம கடாலியின் சாட்சி**



போஷேரா கிராமத்தின் பஹூதர்ம கடாலி குடிப்பழக்கத்திற்கும், பில்லி சூனியத்திற்கும் அடிமைப்பட்டிருந்தார். அசுத்தாவியின் தாக்குதலால் மனநிலை பாதிக்கப்பட்ட இவருக்காக இவரது உறவினர்களான கிறிஸ்தவர்கள் ஜெபித்தபோது அசுத்தாவியிலிருந்தும், பில்லி சூனியக் கட்டுகளிலிருந்தும் பரிபூரண விடுதலையை பெற்றார்.

**துள்சிராம் கடாலி**

இவர் கடுமையான வயிற்று வலியினால் பாதிக்கப்பட்ட போது மந்திரவாதிகளிடம் சென்று சுகமடைந்தார். எனினும் அவரது மூத்த மகன் இதேபோல் வயிற்று வலியினால் இறந்து போனார். பின்னர் இவரும், இவரது மகளும் இதே நோயினால் பாதிக்கப்பட்டதினால் மிகவும் பயத்துடன் கிறிஸ்தவரான திரு. துக்காராமின் உதவியை நாடினர். இவர்களுக்காக ஜெபித்தபோது, இவரது மகள் ஒரு பிரகாசமான ஒளியை அனுபவித்ததோடு பரிபூரண சுகத்தையும் பெற்றுகொண்டார்.

## *எதிர்ப்பு*

தேவன் அருளிய அற்புத சுகம் மற்றும் விடுதலையின் மூலம் அநேகர் விசுவாசிகளாயினர். விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்தபோது எதிர்ப்புகள் தீவிரமடைந்தது. விசுவாசிகளின் உறவினர்களும், கிறிஸ்தவ எதிர்ப்பு சக்திகளும் ‘கிறிஸ்தவர்கள் தேவனை தொடர்ந்து வழிபட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்’ என்று அச்சுறுத்தினர். ஆனாலும் ஆராதனைத் தொடரவே விசுவாசிகள் தங்கள் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகங்களுடன் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் கிறிஸ்தவத்தை பின்பற்றமாட்டோம் என்று உறுதி யளித்து, அறிக்கையில் கையெழுத்திட கட்டாயப்படுத்தப்பட்டனர். பின்னர் ஒரு பிராமணரால் மாருதி கோவிலுக்கு

அழைத்துச் செல்லப்பட்டு தாய்மதத்திற்கு திருப்பப்பட்டனர். அன்றிலிருந்து போஷேராவில் ஆராதனை நின்றுபோயிற்று. விசுவாசிகள் பயத்தினால் இரகசிய கிறிஸ்தவர்களாக மாறினர்.

அருள்திரு. பேரின்பதாஸ் மிஷனெரி திரு. பசவராஜிடம் போஷேராவைச் சேர்ந்த கிறிஸ்தவரான திரு. சவ்ஞ்சி மோதிராம் முக்கனேவை சந்திக்கும்படி கூறவே அவரைத் தேடி போஷேரா கிராமத்திற்குச் சென்றார். அங்குள்ள விசுவாசிகள் இரகசிய கிறிஸ்தவர்களாக, பயத்துடன் வாழ்ந்து வருவதாக பஹூதர்மா கடாலியின் மனைவி சீதாபாய் மூலம் கேள்விப்பட்டார். விசுவாசிகள் தேவனை ஆராதிக்கும் வாய்ப்பிற்காக ஊக்கமாக ஜெபித்து வந்தனர்.

## தேவாலய வளர்ச்சி



போஷேரா கிராமத்தில் கட்காரி மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகு மது மற்றும் புகையிலைப் பழக்கத்தை விட்டுவிட்டதால், பொருளாதார மற்றும் சமுதாய வளர்ச்சிப் பெற்றனர். குடும்ப வாழ்விலும் ஆசீர்வாதங்களை அனுபவித்தனர். முதல் விசுவாசியான திரு. பஹூதர்ம கடாலி, 2011இல் பஞ்சாயத்துத் தேர்தலில் வெற்றிப்பெற்று 18 கிராமங்களுக்கு சர்பஞ்சாக நியமிக்கப்பட்டார். கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால் தடைசெய்யப்பட்ட தேவாலயக் கட்டுமானத்திற்கு தடையில்லா சான்றிதழ் வழங்கினார். அவரது தலைமையில் எதிர்ப்புகள் நிறுத்தப்பட்டு கட்காரி மக்கள் தைரியமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், விடுதலையோடு தேவனை ஆராதிக்கவும் தேவன் கிருபை செய்தார்.

**திரு. ராமு அர்ஜூன் வாஹ்:** இவர் ஒரு காலத்தில் கிறிஸ்தவ விரோதியாக இருந்து தன் குழுவுடன் விசுவாசிகளை துன்புறுத்தி வந்தார். இவரது மனைவி பில்லி சூனிய கட்டுகளினாலும், சரீரம் முழுவதும் கட்டிகளினாலும் அவதிப்பட்டு வந்தார். அவரது வியாதியினிமித்தம் மூச்சு திணறல் ஏற்பட்டு மயக்கமானார். மந்திரவாதிகளிடம் சென்றும் ஒரு பலனும் கிடைக்கவில்லை. இறுதியில் அவர் அவளை கிறிஸ்தவர்களிடம் ஜெபிக்கும்படி அழைத்து வந்தார். பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் வேளையில் தேவன் ஒளியின் மூலம் தரிசனம் தந்து சுகப்படுத்தினார். அதன்பின் அவர் ஒரு உறுதியான விசுவாசியாக மாறி தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். திரு. ராமு அர்ஜூன் உடன் இருந்தவர்கள் அவரது விசுவாசத்தைக் கைவிடும்படி அவருக்கு அழுத்தம் கொடுத்தபோதிலும், அவர் விசுவாசத்தில் உறுதியாக இருந்தார். புற்றுநோயினால் பாதிக்கப்பட்டும், குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுமிருந்த அவரது தந்தையை மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்றும் சுகம் கிடைக்காத நிலையில் ஆலயத்திற்கு அழைத்து வந்தார். ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் தேவன் அவரை குணப்படுத்தினார். இந்த தெய்வீக குணப்படுத்துதலால் அவரது மாமனார் (மந்திவாதி), மைத்துனர், பெற்றோர் மற்றும் சகோதரரின் குடும்பத்தினர் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தனர்.

## தேவாலய நிலம் & கட்டுமானம்

கட்காரி இனத்தைச் சேர்ந்த போஷேரா கிராம விசுவாசிகள் தங்களுக்கு ஒரு தேவாலயம் வேண்டுமென விரும்பி இரண்டு வேளை உணவைத் தவிர்த்து 40 நாட்கள் ஜெபித்து வந்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் ஆலயம் கட்ட அவர்களுக்கு உதவி செய்தார். தத்தா ஆலே மற்றும் அவரது சகோதரர்களிடமிருந்து 20,000 சதுரஅடி நிலம் ரூ.25,000/-க்கு வாங்கப்பட்டு, 2012இல் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆலயத்தின் பெயர் **பரி. யோவான் ஆலயம்.** கோயம்பத்தூரைச் சேர்ந்த திரு. நெல்சன் ராஜ்குமார் நிதி உதவி அருள கட்காரி மக்களுக்காக முதல் ஆலயம் தடையின்றி கட்டி முடிக்கப்பட்டது. 22.06.2013 அன்று போஷேரா கிராமத்தின் சர்பஞ்ச் திரு. பஹுதர்ம கடாலி அவர் களின் தலைமையில் ஆலயம் தேவ நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப் பட்டது. அப்பிரதிஷ்டை ஆராதனையில் திரு. நெல்சன் ராஜ்குமார், கோயம்பத்தூர் ஜெபக்குழுத் தலைவர் திரு. கனகராஜ் மற்றும் ஊழியர்கள் திரு. சங்கர், திரு. ஸ்ரீனிவாஸ், திரு. ஹெமந்த் குமார் ஆகியோரின் குடும்பங்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஏப்ரல் 2013இல் போஷேரா கிராமத்தில் மும்பை ஜெபக்குழுவைச் சேர்ந்த திரு. பி. ஜெய சந்திரன் மற்றும் திரு. கிறிஸ்டோபர் ஆகியோரின் மூலம் ஆள்துளை கிணறு தோண்டப்பட்டது. 35 அடி ஆழத்தில் தண்ணீர் பீறிட்டு வர தேவன் கிருபை செய்தார். டிசம்பர் 2015இல் போஷேரா ஆலயத்தின் அருகில் தலைமைத்துவ பயிற்சி மையத்திற்காக அறை ஒன்று கட்டப்பட்டது.

## திருச்சபை ஊழியங்கள்

ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையின் போதும் ஞாயிறு பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. இதனை மிஷனெரியின் மனைவி திருமதி. சன்மதா மற்றும் திருமதி. ரேகா, திருமதி. சுரேகா, திருமதி. ஸ்வப்னா ஆகியோர் நடத்துகின்றனர். விசுவாசிகள் தங்கள் உறவினர்களையும், நோயாளிகளையும் சந்தித்து ஜெபித்து வருகின்றனர். எதிர்ப்புகள் மற்றும் புலம்பெயர்ந்து செல்வதினால் சில கிராமங்களில் ஆராதனைகள் தொடர்ந்து நடைபெறுவதில் சிரமமாக உள்ளது. நான்கு கிராமங்களில் தொடர்ந்து ஆராதனை நடைபெற்று வருகிறது. போஷேரா விசுவாசிகளின் மூலம் சுமார் 50 பேர் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஒவ்வொரு புதன் கிழமையும் உபவாச ஜெபம் நடைபெற்று வருகிறது.

## ஜெபிப்போம்

- மதுவுக்கு அடிமைப்பட்டுள்ள சில விசுவாசிகள் அதிலிருந்து விடுதலைபெற...
- வேலை நிமித்தம் புலம்பெயர்ந்து செல்லும் விசுவாசிகளின் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, சொந்த கிராமத்தில் விவசாயம் செய்து வருமானம் ஈட்ட ஏற்ற வழிவாசல்களை தேவன் அருள....
- 10% குழந்தைகள் மட்டுமே கல்வி அறிவு பெறுகின்றனர். வறுமை மற்றும் புலம்பெயர்தல் காரணமாக குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது. அனைத்து பிள்ளைகளும் கல்வி அறிவு பெற...
- விசுவாசிகள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

# காலச் சுவடுகள்



## டாக்டர். ஈடித் மேரி பிரவுன்

(1864 - 1956)

### அறிமுகம்

130 ஆண்டுகளுக்கு முன்பு, இங்கிலாந்திலிருந்து ஒரு இளம் பெண் கடல் கடந்து தொலை தூரத்தில் வாழும் நம் இந்திய மக்கள் மத்தியில் குறிப்பாக பெண்கள் மத்தியில் பல சவால்களைக் கடந்து, ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் சேவை செய்ய அழைப்பும் தரிசனமும் பெற்றார். அந்த தரிசனமானது 1894இல் லூதியானாவில் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி & மருத்துவமனை நிறுவியதின் மூலம் நிறைவேறியது.

### இளமைப்பருவம்

**ஈடித் மேரி பிரவுன்** அம்மையார் இந்தியாவில் சேவையாற்றிய ஒரு ஆங்கில மருத்துவ மிஷனெரி. இவர் 24.03.1864 அன்று இங்கிலாந்தின் கம்பர்லாண்ட் என்னுமிடத்திலுள்ள வைட்ஹெவனில் பிறந்தார். சிறுவயதிலேயே தந்தையை இழந்தவர். தந்தையின் மரணத்திற்குப் பிறகு இவரது குடும்பம் லண்டனுக்கு குடிபெயர்ந்தது. மிஷனெரியான தனது மூத்த சகோதரியின் மூலம் ஈர்க்கப்பட்ட ஈடித் தன் சிறுவயதிலேயே இந்தியாவுக்கு மிஷனெரியாகச் செல்ல வாஞ்சித்தார். இந்திய மக்களுக்கு சுகாதார பராமரிப்பு தான் அத்தியாவசியத் தேவை என்பதை உணர்ந்த இவர் ஒரு மருத்துவராக முடிவு செய்தார். எனவே இவர் தன் பள்ளி படிப்பிற்குப்பின் கேம்பிரிட்ஜியிலுள்ள கிர்டன் கல்லூரியில் அறிவியல் பயின்றார். அதன்பின்னர் லண்டன் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து 1891இல் மருத்துவப் பட்டம் பெற்றார்.

### மருத்துவ சேவை

மிஷனெரி ஊழியத்திற்காக கர்த்தரின் அழைப்பைப் பெற்ற ஈடித், பாப்டிஸ்ட் மிஷனெரி சொசைட்டி (B.M.S.) மூலம் இந்தியாவிலுள்ள மும்பைக்கு 09.11.1891 அன்று வந்து சேர்ந்தார். இந்தியாவின் மருத்துவ மற்றும் சுகாதார நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அந்நாட்களில்

இந்து பெண்கள் நவீன மருத்துவ பயிற்சிப்பெற்ற அல்லது பண்டைய மருத்துவ முறைகளில் பயிற்சிப்பெற்ற ஒரு ஆண் மருத்துவரிடம் சிகிச்சைப்பெற அனுமதிக்கப்படவில்லை. மகப்பேற்றின் போது கூட மூடநம்பிக்கை நிறைந்த செவிலியரின் சேவைகளையே சார்ந் திருந்தனர். பொதுவாக இவர்கள் தாழ்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும், சிகிச்சை முறையில் சுகாதாரமற்றவர்களாகவும் இருந்தனர். மேலும் பெண்களுக்கு சமுதாயத்தில் பலவித அழுத்தங்கள் இருந்தபடியால், பெண்கள் மூலமாகவே மருத்துவ சேவைகள் வழங்கவேண்டியதின் அவசியத்தை ஈடித் உணர்ந்தார். அந்நாட்களில் பயிற்சிப்பெற்ற பெண் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைக் காண்பது அரிதாக இருந்தது. நாடு முழுவதிலும் பெண்களுக்கான மருத்துவ மனை ஒன்று அல்லது இரண்டு மட்டுமே இருந்தன. எனவே இந்தியப் பெண்களுக்கு, குறிப்பாக செவிலியர்களுக்கு மருந்து களைக் குறித்து பயிற்சியளிக்க முடிவு செய்தார். சிறிது காலம் டெல்லி மற்றும் பஞ்சாபில் உள்ள கிராமங்களில் மற்ற மிஷனெரிகளுடன் இணைந்து மருத்துவ சேவை வழங்கினார்.

நவீன மருத்துவ முறையில் உள்ளூர் பெண்களுக்கும், செவிலியருக்கும் பயிற்சி அளிக்க தீர்மானித்த இவர் தனது விடாமுயற்சியினால் ஜனவரி 1894இல் பஞ்சாப் மாநிலத்தின் லூதியானாவில் பழையப்பள்ளி ஒன்றை வாடகைக்கு எடுத்து மருத்துவக் கல்லூரியைத் தொடங்கினார். இதற்காக இங்கிலாந்தி லுள்ள ஒரு பெண் அன்றைய மதிப்புப்படி ரூ.77,364.90 நன்கொடை அளித்தார். நான்கு மாணவர்கள் மற்றும் நான்கு ஆசிரியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி ஆசியாவில் பெண்களுக்கான முதல் மருத்துவக் கல்லூரியாகும். இந்த மருத்துவக் கல்லூரி, மருத்துவம், செவிலியர், மருந்தகப் பள்ளிகள் கொண்ட முழு கல்லூரியாகவும், 200 படுக்கைகளைக்கொண்ட மருத்துவமனை யாகவும் வளர்ந்தது. பஞ்சாப் அரசாங்கம், லண்டன், எடின்பர்க், கிளாஸ்கோ, ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் நியூசிலாந்திலுள்ள பெண்கள் துணை நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க மானியங்களால் இக்கல்லூரி ஆதரிக்கப் பட்டது. 1911இல் இக்கல்லூரி **மகளிர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி** என அழைக்கப்பட்டது.

## மருத்துவ சாதனைகள்

ஈடித் அம்மையார் அன்றாட நோய்களுக்கு சிகிச்சை அளித்தது மட்டுமல்லாமல் அறுவை சிகிச்சை நிபுணராகவும், மகப்பேறு மருத்துவராகவும், கண் மருத்துவராகவும் மற்றும் ஆசிரியராகவும் விளங்கினார். 1947ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின்போது, பஞ்சாப் பகுதி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பிரிக்கப்பட்டது. இதன் விளைவாக லூதியானாவில் ஆயிரக் கணக்கானோர் படுகொலை செய்யப் பட்டனர். வன்முறையின் போது கல்லூரி மற்றும் மருத்துவமனை தாக்குதலிலிருந்து தப்பியது. இந்த மருத்துவமனை படுகாயம் அடைந்தவர்களுக்கு அவசர சிகிச்சை மையமாக செயல்பட்டது. நவம்பர் 1951இல் ஈடித் இந்தியாவுக்கு வந்த 50-வது ஆண்டு விழாவின்போது இக்கல்லூரியின் மூலம் 411 மருத்துவர்கள், 143 செவிலியர்கள், 168 மருந்தக விநியோகிப்பாளர்கள் மற்றும்

ஆயிரத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் பட்டம் பெற்றிருந்தனர். ஈடித் 1952இல் கல்லூரி முதல்வராக ஓய்வுப் பெற்றார். இருப்பினும் கல்லூரியின் முன்னேற்றத் திற்காக தொடர்ந்து உழைத்து வந்தார். 1952இல் இக்கல்லூரி பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் மருத்துவக் கல்வியை வழங்கும் **கிறிஸ்துவ மருத்துவ கல்லூரியாக** (சி.எம்.சி) வளர்ச்சி அடைந்தது.

மருத்துவ சேவையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த இவர் 1956இல் தனது 92-வது வயதில் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசித்தார். ஈடித் எந்த விதமான பாகுபாடுமின்றி அனைத்து மதத்தினருக்கும் மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் சேவை செய்தார். ஒவ்வொரு ஆத்துமாவையும் ஒரு ராஜாவுக்கு சமமாக பாவித்து சேவை செய்த இவர் **என் சேவை ஒரு ராஜாவுக் கானது** என்று அடிக்கடி கூறுவார். இவரது சேவைகளின் மூலம் பல இந்தியப் பெண்கள் தங்களது ஆத்தும இரட்சிப்பையும், சரீர ஆரோக்கியத்தையும் பெற்று அனுபவித்தனர். இன்று இக் கல்லூரி வட இந்தியாவின் புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரியாக 775 படுக்கை களுடன் கூடிய மருத்தவமனையுடன் சிறப்பாக இயங்கி வருகிறது.

பிரியமானவர்களே! உங்கள் தொழிலை சுவிசேஷத்திற்கான ஒரு கருவியாக பயன்படுத்துகிறீர்களா?

*“ஆண்டவரே, எனக்கான உமது சித்தத்தை என்னில் நிறைவேற்றி, மற்றவர்களுக்கு சேவை செய்வதற்கு மட்டுமே என்னை பயன்படுத்தும்.” ஆமென். - ஈடித் மேரி பிரவுன்*

# ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை





கர்த்தருடைய பெரிதான கிருபையால் சத்தீஷ்கர் மாநிலம், சீதாப்பூர் பணித்தளம், பர்பஹாலா ஆலய பிரதிஷ்டை மிக அசீர்வாதமாக சிறப்பாக நடந்து முடிந்தது. ஆலய கட்டுமானத்திற்காக பண உதவி செய்த திருப்பூர் மாவட்டத்திலுள்ள திரு. I. லாசர் அண்ணன் குடும்பம் மற்றும் திரு. டி. ஜாசுவா அண்ணன் குடும்பத்தினரின் முன்னிலையில், மூத்த மிஷனெரி அருட்திரு. கருணாகரன் அவர்களால் 14.01.2025 அன்று தேவ நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இங்கு ஊழியம் செய்யும் மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுக்காக தேவனைத் துதிக்கின்றோம். தேவனுக்கே துதியும் கனமும் மகிமையும் உள்டாவதாக!

**அருட்திரு. S. வின்சென்ட் பிரேம்ராஜ்,**
விரிவுப்பணி செயலர் - திருப்பூர்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராபர்ட் ராஜலிங்கம்
திரு. ஸியான்லுன்தாங்க் ஸௌ T.
திரு. தௌஜபாவ் குயிட்டே
திரு. சுங்லென்லால் சிங்சிட்
திருமதி. மெலொடி டிம்சன்டிங் வய்ஃபெய்

# ஜம்மு

## ராம்கார்:

### ஜாண் எஸுங் & லிபெனி ஜமி

**துதிக்க:** சுவிசேஷம் அறிவிக்க தடை செய்யப்பட்டிருந்த கரேலியன் கிராமத்தில் தற்போது ஜெபக் கூட்டம் நடத்த ஊழியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். அநேக புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை கட்டளையிட்டுள்ளார். ஊக்கமான ஜெபத்தினால் சுனிதா மற்றும் கீதாவுக்கு தேவன் கர்ப்பத்தின் கனியை அருளினார். ஜெபத்தின் மூலம் விசுவாசி சுனிலுக்கு நல்ல வேலை வாய்ப்பை தந்துள்ள தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குருக்களை தேடிச் செல்லும் மக்களின் மனக்கண்கள் திறக்கப்பட; வெளி மாநில ஊழியர்கள் என்று நமது மிஷனெரிகளை வேற்றுமைப்படுத்தி விசுவாசிகள் மத்தியில் பிரிவினை உண்டுபண்ண முயற்சிக்கும் சில உள்ளூர் ஊழியர்கள் மனந்திரும்ப; விசுவாசிகள் எல்லா சூழ்நிலைகளிலும் விசுவாசத்தில் உறுதியுடன் இருந்து தங்கள் சாட்சியினை காத்துக்கொள்ள; கிறிஸ்தவர்களை வெளியேற்ற தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ள மத தீவிரவாத குழுக்களின் திட்டங்கள் முறியடிக்கப்படவும், எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## நௌஷேரா:

### ஷேக் சுபானி & எமி பாக்கியா

**துதிக்க:** பிரிந்து வாழ்ந்த சஞ்ஜீவ் குடும்பத்தினர் ஜெபத்திற்குப்பின் சமாதானத்துடன் சேர்ந்து வாழ கர்த்தர் கிருபை செய்தார். குடியின் அடிமைத் தனத்தினால் குடும்பத்தின் சமாதானத்தை கெடுத்து வந்த கலாராம் தனது குடும்பத்தாரின் ஜெபத்தினால் மனந் திரும்பி குடியிலிருந்து விடுதலை பெற்றார். விசுவாசி பச்சன், சொந்த கடை திறந்து வியாபாரம் செய்ய தேவன் கிருபை செய்தார். ஆலய ஆராதனையில் புதிதாக கலந்து கொள்ளும் தேவ்ராஜ், அஜய் குமார், ரோகன்லால் ஆகியோருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பேசும் மற்றும் கேட்கும் திறன் குறைபாடுள்ள 18 வயது பச்சனுக்கு தேவன் அற்புதம் செய்ய; சிறுநீரகங்கள் செயலிழந்து காணப்படும் ரோசன்லால் தேவனால் தொடப்பட; மாடியிலிருந்து கீழே விழுந்து காயமேற்பட்டுள்ள ராதிகா விரைவில் சுகம்பெற; விசுவாசத்தில் பின் மாற்றம் அடைந்துள்ள அனிதா, அமித், சாக்சி ஆகியோர் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; போதைப் பழக்கத்தினால் குடும்பத்தை வறுமைக்குள் தள்ளியுள்ள சேகர் மாக்ரி மனந்திரும்பி போதைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிவ் ஜெனிஃபர் நத்தானியேல் எட்வர்ட்
திரு. செந்தில் முருகன் V.

## ராசி:

### அய்யனார் டேவிட் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** புதிய பணித்தளத்திற்கு உடைமைகளை பத்திரமாக கொண்டு சேர்க்க தேவன் கிருபை செய்தார். புதிய பணித்தளத்தில் மிஷனெரிகள் தங்க சீலா என்ற கிராமத்தில் நல்ல வீடு ஒன்று கிடைக்க தேவன் உதவி செய்துள்ளார். புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்துள்ளார். தால்வாரா கிராமத்தில் நற்செய்தி பகிர நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தூன்சால் கிராமத்தில் ஜீத்து என்பவர் சுவிசேஷத் திற்கு வாஞ்சை காட்டுகிறார். மார்பக புற்றுநோய் அறுவை சிகிச்சை முடித்து சுகம் பெற்று வரும் மிஷனெரியின் தாயார் காந்தம்மாவுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஒற்றைத் தலைவலியினால் மிகவும் கஷ்டப்பட்டு வரும் மிஷனெரி மன்பிரீத் கௌர் பூரண சுகம்பெற; ராசி பகுதியில் அதிகம் வசிக்கின்ற குர்ஜார் இனமக்கள் மத்தியில் சுவிசேஷத்தி ற்கு நல்ல வரவேற்பு கிடைக்க; சலால், தால்வாரா, பராடரி மற்றும் ஜோதிபுரா கிராமங்களில் விதைக்கப்பட்டுள்ள சுவிசேஷ விதைகள் நல்ல பலனைத் தர; புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட; துன்சால் கிராமத்தில் நற்செய்திக்கு வாஞ்சைக்காட்டும் மக்களின் வேண்டுதல்களை தேவன் வாய்க்கப்பண்ண ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ராம்பூர்:

### தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** அநேக கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, கைப் பிரதிகள் விநியோகிக்க தேவன் உதவி செய்தார். திடீரென சுயநினைவை இழந்து கை, கால்கள் செயலிழந்த பூஜாவின் தகப்பனாருக்காக ஏறெடுத்த ஊக்கமான ஜெபத்தின் மூலம் அவர் சுகம் பெற்றார். நல்லிரவில் இரத்த வாந்தியினால் அவதியுற்ற ரேகாவின் மகளுக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிர்மண்ட் கிராமத்தில் ஆராதனை நடக்கும் போது கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் சத்தமாக ஒலிபெருக்கிகளை ஒலிக்க செய்து ஆராதனையை இடையூறு செய்து வருகிறார்கள். தேவன் எதிர்ப்போரின் இருதயங்களில் கிரியை செய்ய; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள அமன் & பார்க்கா தம்பதியினர் மீண்டும் தேவனுடைய விசுவாசத்தில் வளர; ஞாயிறு ஆராதனையில் பங்குபெற ஆர்வமின்றி இருக்கும் டெக்லாக் கிராம சபையினர் உள்ளத்தில் தேவன் இடைபட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மரியம்மாள் பால் சாலமோன்
திரு. ஐசக் R., திருமதி. பியூலா முரளிதரன்
திருமதி. ஜெய சௌந்தரி ஜெபராஜ் சாமுவேல்
திரு. ரபீந்திர முர்மு, திரு. தாவுட் டுடு

## ரோஹ்ரு:

**ஜாண்சன் சங்கர் & ஜெபராணி**

**துதிக்க:** திடீரென மயங்கி விழுந்து வாயில் நுரை தள்ளிய நிலையில் மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்லப்பட்ட சிறுமி ஆஷ்வி குணமடைந்து வீடு திரும்ப தேவன் கிருபை செய்துள்ளார். பத்து வருடங்களுக்கு முன் இழந்த தன்னுடைய வேலைக்கு இழப்பீடு கேட்டு நீதிமன்றத்திற்கு சென்று வந்த நமது சுதேச ஊழியரின் தாயார் துள்சி தேவிக்கு எதிர்ப்பார்த்த இழப்பீடு கிடைக்க தேவன் உதவி செய்துள்ளார். நோயினால் பாதிக்கப்பட்டிருந்த மாட்டிற்காக விசுவாசி அஞ்சலி ஜெபித்தபோது மாடு சுகம்பெற்று மீண்டும் நன்றாக பால் கொடுக்க தேவன் கிருபை செய்தார். ஆலயம் செல்ல தடைசெய்து வந்த ரீட்டாவின் கணவர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அகன்ஷா, கல்பனா, விமலா, முஸ்கான் ஆகியோர் விசுவாசத்தில் இன்னும் அதிகமாய் வேரூன்றி வளர; அரசாங்கத் தேர்வு எழுதியுள்ள அர்பித், வந்தனா, வன்சிகா, பாருல், சஞ்சனா ஆகியோர் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சிபெற; கல்லீரல் பிரச்சனையினால் கஷ்டப்படும் நிம்தேவிக்கு தேவன் சுகமருள; லெந்து கால உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் உற்சாகத்தோடு பங்குபெற ஜெபிப்போம்.

## ரிகாங்பியோ:

**சங்கர் ஏ. & ரூத் மேரி**

**துதிக்க:** சீமான் மற்றும் ராஜ்குமாரை ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். உபவாச ஜெபத்தின் மூலம் அனிதாவின் கணவரை இருதய நோயிலிருந்து தேவன் சுகமாக்கினார். மூன்று இடங்களில் நடைபெற்ற சுவிசேஷ ஊழியத்தின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை முதன்முறையாக அறிந்துகொள்ளும் வாய்ப்பை தேவன் தந்தருளினார். நடைபெற்ற பெண்கள் மற்றும் சபை மூப்பர் கூடுகைகளில் அநேகர் பங்குபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் ரூபா & ரூபாவின் கணவர், பூணம், சீமா, ஆஷா, அஷ்வின், அவந்திகா, கர்மாங், மாரிஸ்மான், ராஜு, அஜய் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட தயக்கம் காட்டுகின்றனர். தேவன் இவர்கள் உள்ளத்தில் கிரியை செய்ய; காச நோயினால் நுரையீரல் பாதிக்கப்பட்டுள்ள இமான்சிங்கின் மாமனாருக்கு தேவன் பூரண சுகமருள; தவறான போதனைகளினால் கிறிஸ்துவை விட்டு பின்வாங்கியோர் மனந்திரும்பி மீண்டும் ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; அரசாங்க தேர்வை எழுதியுள்ள விசுவாசிகளுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கிரேஸி ஸ்டான்லி ஜார்ஜ்
திருமதி. கௌரம்மா @ சுவேதா அமரேந்திரன்
திருமதி. அன்னா ரோஸ்லின் ஐசக் ஆபேல்

## பஞ்சாப்

### பட்டிண்டா:

**சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா; பிரதாப் ரஹாங் & ரேஷ்மி**

**துதிக்க:** பாய்ரூபா, புஜிரிமன்சா, மோர்சிங் மற்றும் சாய்சிங் கிராமங்களில் முதன் முறையாக கிறிஸ்துவின் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஐந்து கிராமங் களில் திரைப்பட ஊழியம் செய்யவும், ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நடத்தவும் கர்த்தர் கிருபை செய்தார். விசுவாசி ராஜாசிங்கிற்கு சிறுநீரக அறுவை சிகிச்சை மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கிற கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, இயேசு திரைப்பட ஊழியம் ஆகியவை தடையின்றி நடைபெற; ஊழிய விரிவாக்கத்திற்கு அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; ஆராதனையில் கலந்துகொள்ளும் அர்தீப், ஆகாஷ் மற்றும் ரீனா தங்கள் விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட; பெண்கள் மற்றும் வாலிபர்களின் ஜெபக்கூடுகை தடையின்றி நடைபெறவும், அநேகர் கலந்துகொள்ளவும் ஜெபிப்போம்.

### மான்சா:

**தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்**

**துதிக்க:** ஞாயிறு பள்ளி மற்றும் விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நல்ல முறையில் நடத்தப்பட்டது. சுசிபாலி மற்றும் காலாவலி பகுதிகளில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஜுனேர் கிராமத்தின் குருப்பிரீத் சொந்தமாக வீடு கட்டி குடியேற தேவன் கிருபை பாராட்டினார். சக்காரியா கிராமத்தின் ரேமி இரத்த புற்றுநோயின் தாக்கத்திலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோகாகிர், ஜுனேர் மற்றும் ஜேயா பகுதிகளில் நடத்தவிருக்கும் சத்சங் நிகழ்ச்சிகள் தடையின்றி சிறப்பாக நடைபெற; அடிக்கடி மயங்கி விழும் ஜோய்னா கிராமத்தின் அன்மோலுக்கு தேவன் பரிபூரண சுகமருள; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள பல்தேவ் குடியிலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட; உஸ்தா, குக்குவாலா, சர்க்கா பகுதிகளில் இயேசு திரைப்படம் ஊழியம் தடையின்றி நடத்தப்பட ஜெபிப்போம்.

### அஹ்மத்கட் மண்டி:

**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** துல்வன், பல்வால், ஜஸ்வால், நான்கட், கேரா கிராமங்களில் முதன் முறையாக நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு உடல் உபாதைகளினால் அவதியுற்று வந்த தராம்தர் ஜெபத்திற்குப்பின் சுகம்பெற்று வருகிறார். ரோகிரா சபையில் நான்கு குடும்பங்கள் புதிதாக ஆலய ஆராதனையில் பங்கேற்று வருகிறார்கள். விசுவாசி ரவியின் திருமணம் சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரோகிரா கிராமத்தில் புதிதாக ஆலயத்திற்கு வரும் அஞ்சு, ராஜ்யா ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; 10ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள ஆசு, கரண், நந்தினி, சந்தீப் மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள நிகிதா, அஜய் ஆகியோர் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெற; தவறான வழிகாட்டுதலினாலும், சமுதாயக் கட்டுப்பாட்டினாலும் விசுவாசத்தை அறிக்கையிட தயங்குவோரை தேவன் பெலப்படுத்த ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராம கிருஷ்ணா அகிபாடா
திரு. பாலாஜி நெட்டாலம், திரு. அமரேந்திரன்
திருமதி. ஜெபா கிரேஸ் டேவிட்
திருமதி. ருக்மணி ஹெம்ரோம்

# உத்தராகண்ட்

### கிச்சா: பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** பெலவீனப்பட்டிருந்த விசுவாசி லக்விந்தர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். டாம் கிராமத்தில் ஞாயிறு ஆராதனை துவங்க தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளுக்கு தேவன் நல்ல அறுவடையை கட்டளையிட்டுள்ளார். நீண்ட நாட்களுக்குப்பிறகு நமது விசுவாசிகள் மீண்டும் டிராக்டர் வாகனங் களை விவசாயத்திற்கு பயன்படுத்த தேவன் கிருபை செய்துள்ளார். ஜெபத்தின் மூலம் சிவானி புத்திர பாக்கியம் பெற கிருபை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் பாதிக்கப் பட்டுள்ள சிம்ரனுக்கு தேவன் பூரண சுகமருள; சாந்திபுரத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; ஞாயிறுதோறும் புதிய ஆத்துமாக்கள் ஆராதனையில் பங்குபெற; ஆகாஸ் கிறிஸ்துவை விசுவாசித்து அவரின் மந்தையில் இணைய; சுக்விந்தர் குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; எதிர்ப்பின் மத்தியிலும் நமது அனைத்து விசுவாசிகளும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நிற்க; இப்பணித்தளத்தில் காணப்படும் சமுதாய தடைகள், கிறிஸ்தவ எதிர்ப்பு இயக்கங்கள் மற்றும் குருத்துவாரா போன்றவை மூலம் வரும் அழுத்தங்கள் உடைக்கப்பட்டு, விடுதலையோடு மக்கள் மெய் தேவனை ஏற்றுக்கொள்ள; பால் சுரேஷ்க்கு உள்ள விரைவீக்கத்திலிருந்து தேவன் சுகமருள ஜெபிப்போம்.

## தினேஷ்பூர்:

### சிவகுமார் & சுசிலா மராக்

**துதிக்க:** கேடா கிராமத்தின் ராம்காலி என்பவர், வாய் புற்றுநோயிலிருந்து ஜெபத்தின் மூலம் தேவன் தந்த சுகத்தை கிராமத்தினருக்கு முன் சாட்சியாக பகிர்ந்து வருகிறார். ஜோதி சகோதரியின் காலில் இருந்த பெரிய கட்டி ஜெபத்தினால் கரைந்து வருகிறது. ஐந்து கிராமங்களில் பின்தொடர் பணி தடையின்றி சிறப்பாக நடைபெற்றது. இப்பணித்தளத்தில் கடந்த மாதம் அனைத்து கூடுகைகளும் தடையின்றி நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுவதோடு ஜெபக் கூடுகைகளில் கலந்துகொள்ளும் ஜோகேஷ், கபில், பிரியா, பிரியங்கா, ஜோதி, லக்ஷ்மி, அம்மு ஆகியோர் விசுவாசத்தில் வளர; தொண்டையிலுள்ள கட்டியினால் சாப்பிட முடியாமல் கஷ்டப்படும் 12 வயது ஆயூஷ்க்கு தேவன் இரக்கம் பாராட்ட; ஜோதிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; விசுவாசிகளில் சிலர் புகையிலை, குடி போன்ற தீயப் பழக்கங்கங்ளுக்கு அடிமைப்பட்டுள்ளனர். அதிலிருந்து அவர்கள் விடுப்பட்டு சாட்சியுள்ள வாழ்க்கை வாழ ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
திரு. ஃபிராங்ளின் M.Y. பாதம் A.S.
திருமதி. சூர்ஜ்யகாந்தி உதிப்தகுமார் பாக்
திரு. கொடிசெலா பிரவீன்

### மல்தன்சோர்:
### ஷிஷு பால் & அனிதா

**துதிக்க:** பாரம் கிராமத்தில் புதிதாக இரவுக் கூடுகை ஆரம்பிக்க தேவன் கிருபை பாராட்டினார். சரஸ்வதி, அனிஹறன், தீபிகா ஆகியோர் அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். மோஹன் நகரில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற; பஹான்பூர் மற்றும் நாராயன்பூர் சபைகளில் நடைபெறவிருக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி குறித்த நாளில் தடையின்றி நடைபெற; புதிய விசுவாசிகளான தரி, பராட்டா, பிரமுர்கி ஆகியோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் காளிதாஸ், கந்து, ரன்ஜித், சந்தீப் ஆகியோர் தயக்கமின்றி கிறிஸ்துவை அறிக்கையிட ஜெபிப்போம்.

### பாஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** தன்னுடைய தோழியின் ஜெபத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சரோஜா எல்லாவற்றிலும் கர்த்தரை முன்நிறுத்தி வெற்றிபெற்று வருகிறார். பன்னகடா கிராமத்தில் கிறிஸ்துவை பற்றி அறிந்துகொண்டு அநேகர் விசுவாசத் திற்குள் வந்துள்ளனர். பரம்பரை நிலத்தை இழந்துவிட்ட விசுவாசி ருக்காவுக்கு கர்த்தர் தயவு பாராட்டி அது மீண்டும் கிடைக்கும்படி உதவி செய்துள்ளார். வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த குல்வந்த், ஊக்கமான ஜெபத்தினால் சுகம் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திடீரென பார்வையிழந்த பாலு மீண்டும் பார்வை பெற; நுரையீரல் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள குமார்பால் விரைவில் சுகம்பெற; வீட்டின் மேலிருந்து கீழே விழுந்து காயமடைந்துள்ள அஞ்சலி பரிபூரண சுகம்பெற; பிற மத சடங்குகளில் பங்குபெறும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சில விசுவாசிகள் அவ்வாறு பங்குபெறுவதி லிருந்து மனந்திரும்பி முழுமனதுடன் கர்த்தரைப் பின்பற்ற ஜெபிப்போம்.

## இகழ்வோருக்கு முன் உயர்த்தும் தேவன்

*மத்தியப்பிரதேசம், கால்வா பிராந்தியத்திலுள்ள மெத்தராணி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி சாகன்சோலாங்கி சொந்த வீடின்றி மற்றும் தனது வாலிபப் பிள்ளைகளுக்கு திருமணம் செய்ய இயலாமல் கஷ்டப்பட்டு வந்தார். இதனால் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாத அவரின் சொந்த சகோதரர்கள் இவரின் இயலாமையை எண்ணி மிகவும் சந்தோஷப்பட்டனர். ஆனால் நமது விசுவாசியின் ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் அவரை ஆசீர்வதித்ததால்கடந்தாண்டு ஒரு பெரிய வீட்டைக் கட்டியதோடு, தன் மகள் மற்றும் மகனுக்கு திருமணம் ஏற்பாடுகளும் செய்தார். இதனால் ஆத்திரமடைந்த அவரின் சகோதரர்கள் திருமணத்தை தடுக்க பல முயற்சிகள் செய்தனர். கர்த்தரின் கிருபையால் திருமணம் நல்லமுறையில் நடைபெற்றது. தேவனுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் இரண்டு நாட்கள் உபவாச ஜெபத்தை தன் இல்லத்தில் நடத்தி, ஆடு ஒன்றினை காணிக்கையாக அர்ப்பணித்தார் விசுவாசி சாகன்சோலாங்கி. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பவன் குமார்

# ஹரியானா

## ரத்தியா: கார்த்திகேயன் & ஜெயந்தி

**துதிக்க:** சத்பால் என்பவர் அசுத்தாவியின் தாக்குதலினால் மனநிலை பாதிக்கப் பட்டிருந்தார். பல கோவில்களுக்கு அழைத்துச் சென்று பூஜைகள் செய்தும் சுகம் கிடைக்காத நிலையில் நமது ஆலயத் திற்கு வந்த அவருக்காக விசுவாசிகள் கூடி ஊக்கமாய் ஜெபித்த போது பிசாசின் பிடியிலிருந்து அவர் விடுதலை பெற்றது மட்டுமின்றி குடிப்பழக்கத்திலிருந்தும் பரிபூரண விடுதலை பெற்றார். இதன் மூலம் அவரது குடும்பத்தினர் அனைவரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். மணி மஞ்சள் காமாலையிலிருந்தும், பரஞ்ஜீத் கர்ப்பப்பை கட்டியிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து புஷ்பாவுக்கு விடுதலை அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அஞ்சலி ராணி, பிரேமா, குக்குமி பாய், போலி ஆகியோரை சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து தேவன் குணப்படுத்த; போதைப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள சோனி, சுர்ஜாவன், ஜுகுனு, பாலா ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; மீனா மற்றும் சுமன் தைராய்டு பிரச்சனையிலிருந்தும், பாப்பி மற்றும் ஓமி, யூரிக் ஆசிட் பிரச்சனையிலிருந்தும் பரிபூரண சுகம்பெற; நுரையீரலில் நீர் தேங்கி கஷ்டப்படும் ரவுனீத் கௌர் விரைவில் குணமடைய ஜெபிப்போம்.

## தோஷம்: அஜய் பர்டே

**துதிக்க:** நான்கு ஆண்டுகளாக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்த பாஸ் கிராமத்தைச் சேர்ந்த பவன், ஆலயத் திற்கு வந்து ஜெபித்தபோது தேவனின் கிருபையால் சுகம்பெற்று வருகிறார். பலாவாஸ் கிராமத்தைச் சேர்ந்த ஜிட்டோ மற்றும் துனியா ஆகியோர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். இப்பணித்தளத்தி லுள்ள நமது விசுவாசிகள் உற்சாகத்துடன் ஊழியத்தில் உதவி செய்து வருகின்றனர். சுல்தான்பூர் கிராமத்தைச் சேர்ந்த நேஹா மற்றும் ஜோகிந்தர் குடும்பத்திற்கு தேவன் ஆண் குழந்தையை தந்து ஆசீர்வதித்துள்ளார். கானக் கிராமத்தைச் சேர்ந்த சன்னிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போர் அவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட; பெலவீனப்பட்டுள்ள பிஜ்ஜோ, முகேஷ், பவன் ஆகியோருக்கு தேவன் பெலன் கொடுக்க; சத்சங் கூட்டத்தில் புதிதாய் கலந்துகொள்ளும் மக்களின் விடுதலைக்காக; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் ஊழியர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்த; பலாவாஸ் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி சுமித்ராவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, குடும்பத்தில் பிரச்சனைகளை ஏற்படுத்தும் புதிய தொடர்பாளரான லக்ஷ்மியின் சகோதரன் குடியிலிருந்து விடுபடவும், இக்குடும்பத்தை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் S.
திரு. சாலமோன் ஜெபராஜ் J.
திருமதி. பின்னி ஞானம் ஜாண் தினேஷ்
திருமதி. அனியா ஜோஸ்ஃபின் வெங்கடேசன்
திருமதி. ரேணு அருண் காந்தா
திருமதி. சாரா மால்தோ மர்கூஸ்

# ராஜஸ்தான்

## உதய்பூர்: ஆஷிஷ் குமார் & சவிதா தேவி, பிஜூலால் & ஸ்டெஃபி

**துதிக்க:** மான்சாவில் நடத்தப்பட்ட விசுவாசிகளின் ஆவிக்குரிய கூடுகை சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். பிஜாலி கிராமத்தில் மூன்று குடும்பங்கள் ஆலய ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். வாய் மற்றும் மூக்கிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்த லக்மா ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். ஹன்சா, ராதா, கமலா ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பலேசியா மற்றும் கோகுண்டா தாலுகாவில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை தந்தருள; பிசாசின் பிடியில் சிக்கி, குடும்பத்தினரை அடித்து துன்புறுத்தும் மகேந்திராவுக்கு தேவன் விடுதலை அருள; கருச்சிதைவினால் பெலவீனத்திலிருக்கும் ஆஷாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; மந்திரவாதியின் ஆதிக்கத்திலிருக்கும் சுசீல், ஜலன், ராஜ், சிவா ஆகியோர் தேவனால் விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

## காஜூவாலா: வி. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** பின்தொடர் பணி செய்த கிராமங்களில் சுகவீனமானவர்களுக்காக ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். ராஜ்பால், ஜஸ்பிரீத், மனுகர் ஆகியோர் சுவிசேஷ பணிக்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். அநேக வருடங்களாக சுகவீனப்பட்டு படுக்கையிலிருந்த போலோ கௌர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல்தேவ் சிங் கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற; பிசாசின் பிடியிலிருந்து சீதா விடுபட; வேலையின்றி தவிக்கும் சந்தீப்க்கு நிரந்தரமான வேலை கிடைக்க; மனிஷாவுக்கு விசுவாசியான மணமகன் வாழ்க்கைத் துணையாய் கிடைக்க; மணிலால் குடும்பம் பிரச்சனையின்றி சமாதானமாய் வாழ; திட்டமிட்டபடி பெண்கள், வாலிபர்கள், மூப்பர்கள் கூடுகைகள் தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## கங்காநகர்:

## போடார் அம்ருத்பாய் & சுவேரா மார்த்தா, பினோத் சம்பிரமரி & மிரிலா

**துதிக்க:** மிகவும் சுகவீனப்பட்டு மருத்துவ மனையில் அனுமதி மறுக்கப்பட்ட நிலையிலிருந்த நீலம்க்கு ஜெபத்தின் மூலம் தேவன் பரிபூரண சுகமருளினார். வேலையின்றி தவித்த சுக்ஜெயின் மற்றும் ஜஸ்பாலுக்கு குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்தினால் தேவன் நல்ல வேலை கிடைக்கும்படி கிருபை செய்தார். கஜாசிங்பூரில் தடைசெய்யப்பட்டிருந்த ஆராதனையை மீண்டும் துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரவு கூட்டங்கள் நடத்த காணப்படும் தடைகள் நீங்க; வேலையின்றி தவிக்கும் விசுவாச வாலிபர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்புக்களை தேவன் தந்திட; திருமணத்திற்கு ஆயத்தமாயிருக்கும் விசுவாசிகளான வாலிபப் பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை கிடைக்க; புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க காணப்படும் தடைகள் நீங்கவும், புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்க ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.




*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. கோல்டன் J. இன்பராஜ்

## டெல்லி

### பட்பர்கன்ஜ்: ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்

**துதிக்க:** திரிலோக்புரி பகுதியைச் சேர்ந்த விசுவாசி சாவித்ரி அதிக இரத்தப்போக்கினால் அவதிப்பட்டும், கிராமத்தினரின் எதிர்ப்புகளை சந்தித்த போதிலும் உறுதியான விசுவாசத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். சீலாம்பூர் பகுதியில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். உற்சாகத்துடன் சிறுவர் வகுப்புகளை நடத்தும் சபை வாலிபர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கும் கரிஷ்மா, தயானந்த் குடும்பங்கள் தடையின்றி அறிக்கையிட; பிசாசின் பிடியில் சிக்கித்தவிக்கும் ஷாலு, நீலம் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; குடியின் அடிமைத்தனத்திலிருக்கும் ஆறுமுகம், ராயல் வில்சனும் மற்றும் ஆன்லைன் சூதாட்டத்திலிருந்து ஜாட்டின் தினேஷ், ராயல் ஆகியோரும் விடுவிக்கப்பட; அஜய் மற்றும் நிக்கி சிறுநீரக பாதிப்பிலிருந்து பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர், அஜித் பாண்டியன்

**துதிக்க:** குக்கர் வெடித்தபோதிலும் காயமின்றி விசுவாசி மானிஷாவை தேவன் பாதுகாத்தார். சுகப் பிரசவம் சாத்தியமில்லாத சூழ்நிலையில் சபையாரின் ஊக்கமான ஜெபத்தினால் சோனிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். வயிற்று கட்டியிலிருந்து ஜெபத்தின் மூலம் பப்லிக்கு தேவன் சுகமருளினார். முதியோர் கல்வி மூலம் 11 பெண்கள், 9 வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் உற்சாகத்துடன் கல்வி கற்று வருகின்றனர். முதல் மாடியிலிருந்து கீழே விழுந்த உமேஷை தேவனின் கரம் தாங்கி பிடித்து பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேகனா ஆலய வழக்கு விரைவில் முடிய; சுதேச ஊழியர்கள் ஷியாம் சுந்தர் மீதுள்ள வழக்கு விரைவில் முடிக்கப்பட; விஜய் குமார், ஜெய்கரன் மற்றும் சபை மூப்பர் துளசிராம் ஆகியோரின் வழக்கு முடிக்கப்பட்டதின் ஆவணங்கள் விரைவில் கிடைக்க; பிதுனா துணை மையத்திலுள்ள விசுவாசிகளை மிரட்டி வரும் மதத் தீவிரவாதிகள் தேவனால் சந்திக்கப்பட; நடைபெறவிருக்கும் பெண்கள் முகாம் ஆசீர்வாதமாக அமைய ஜெபிப்போம்.

### ஹசேரன்:

#### சுரேஷ் மால்தோ & பிரேம்லதா

**துதிக்க:** பக்காகுஷ்பூரில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். சமுதாய தலைவரின் எச்சரிப்பையும் மீறி ஜோகி இனமக்கள் தக்ராவப்பூரா கிராமத்தில் ஞாயிறு ஆராதனைக்காக கூடி தேவனை ஆராதித்தனர். விபத்திலிருந்து விசுவாசி அஜித் சிங்கை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். குடும்பப் பிரச்சனையினால் பிரிந்து வாழ்ந்த ராம்குமாரின் குடும்பம் ஜெபத்தின் மூலம் மீண்டும் இணைந்து வாழ கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொடர்ந்து விசுவாசிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் ஜோகி இன மக்களின் தலைவர் தேவனின் அன்பினால் தொடப்பட; விசுவாசத்தை விட்டுவிடுமாறு வற்புறுத்தி வரும் கீர்த்தியின் கணவர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; தொடர் காய்ச்சலினால் பார்வையிழந்துள்ள மான்சிங் மீண்டும் பார்வைபெற; பிசாசின் பிடியிலிருந்து அனுராக், பூணம் ஆகியோர் விடுதலை பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆபிரகாம் G.
திருமதி. ஜெயந்தி ஃபிரான்சிஸ்

### காட்டாம்பூர்:

**ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்**

**துதிக்க:** சகோதரி அனுவின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி சாட்சியாக, சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். ஆஷிஷ் மற்றும் அபிஷேக் இருவரின் திருமணங்களை நிச்சயிக்க தேவன் கிருபை பாராட்டினார். ஞாயிறு ஆராதனைகள் மற்றும் வீட்டு ஜெபக்கூடுகைகளில் எதிர்ப்புகளின் மத்தியிலும் தடையின்றி நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புது இடங்களுக்கு மாற்றம் பெற்று சென்றுள்ள ராஜீவ் மற்றும் ரவீந்தர் ஆகியோரை தேவன் வல்லமையாக பயன்படுத்தவும், சங்கர் மற்றும் சீதாராம் குடும்பம் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெறவும், எதிர்ப்பாளர்களின் பயத்தினால் நமது விசுவாசிகளுடன் பழகுவதை நிறுத்தியுள்ள கிராம மக்களின் இருதயங்களில் தேவன் கிரியை செய்யவும், வேற்றுமைகள் களைந்துபோகவும் ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா பிரதான்**

**துதிக்க:** குடும்பப் பிரச்சனை மற்றும் பல்வேறு வியாதிகளினால் அவதியுற்ற ரீனாவுக்கு மந்திரவாதிகளிடம் சென்றும் விடுதலை கிடைக்கவில்லை. தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட பின்பு அனைத்து பிரச்சனையிலிருந்தும், வியாதியிலிருந்தும் தேவன் அவருக்கு விடுதலை அருளினார். மேலும் பிரசவ நேரத்தில் ஆபத்தான நிலைக்குச் சென்ற ரீனாவை ஜெபத்தின் மூலம் தேவன் பாதுகாத்தார். இவ்வாறு தேவன் செய்த அற்புதத்தின் மூலம் ரீனாவின் குடும்பம் இயேசுவை ஆராதித்து வருகின்றனர். மறதி வியாதியினால் அவதிப்பட்ட கணபதிக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் ஜெபத்தின் மூலம் தேவன் நல்ல நினைவாற்றலைத் தந்துள்ளார். தீ காயங்களால் நடக்க முடியாமல் கஷ்டப்பட்டு வந்த ராணக் மற்றும் ஷைலேந்திராவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பைட்டர்வா மற்றும் அமான்புராகேரி ஆராதனைக் குழுக்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருவதற்காகவும், சபை மூப்பர்கள் உற்சாகத்துடன் செயல்படுவதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 23 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் விஜய் & போய்ஜந்தி தம்பதியினரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; சிக்கில்செல் அனிமியா நோயினால் பாதிக்கப்பட்டு வேலூர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் மிஷனெரியின் மகளுக்கு தேவன் அற்புத சுகமருள; பாபுசிங் குடும்பத்தினர் ஆவிக்குரிய வாழ்வில் வளர; திட்டமிடப்பட்டுள்ள அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பெரில் சிரோமணி ஏகலைவன்
திரு. பீட்டர் பிரபாகரன்

### சிரியா: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** கடந்த மாதம் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் 270 பேர் பயன்பெற்றனர். இரண்டு இடங்களில் நடைபெற்ற இரண்டு நாட்கள் உபவாச ஜெபத்தில் 100க்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்துகொண்டு தேசத்திற்காக பாரத்துடன் ஜெபித்தனர். 7 வயது மன்சாராம் மரத்திலிருந்து கீழே விழுந்து சுயநினைவிழந்தபோது விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் நினைவு திரும்ப தேவன் உதவி செய்தார். தவறுதலாக தீக்குள் விழுந்த விசுவாசியின் 3 வயது சிறுமி செட்னா பேனுவை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். பிரசவ நேரத்தில் ஆபத்தான நிலையிலிருந்த பானு லக்ஷ்மனுக்கு ஜெபத்தின் மூலம் சுகப்பிரசவத்தை தேவன் அருளினார். பிசாசின் பிடியிலிருந்து சுனிமாய் ஜெபத்தினால் விடுதலை பெற்றார். ஜெபத்தின் மூலம் செவந்தாவின் குடும்பப் பிரச்சனை நீங்கி மீண்டும் இணைந்து வாழ கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொழு நோயிலிருந்து ரோஹித்தை தேவன் குணப்படுத்த; நடக்கவும், பார்க்கவும் இயலாமல் கஷ்டப்படும் நான்கு வயது ஹர்ஷித்துக்கு தேவன் அற்புத சுகமருள; காச நோயினால் அவதிப்படும் சுனிலுக்கு தேவன் விடுதலை அருள; பிரசவத்திற்குப் பின் படுத்தப்படுக்கையாய் இருக்கும் செம்மன் காட் கிராமத்தைச் சேர்ந்த ரீட்டாவை தேவன் குணப்படுத்த; வலிப்பு வியாதியினால் கஷ்டப்படும் பில்கேட் கிராமத்தைச் சேர்ந்த ஜெரோமை தேவன் சுகப்படுத்த; இடுப்புக்கு கீழ் செயலிழந்து காணப்படும் ரோஹித்துக்கு தேவன் அற்புதம் செய்ய; மல்காவ்ன், ஜும்கி ஆகிய கிராமங்களில் தடைப்பட்டுள்ள ஆராதனை மீண்டும் துவங்கப்பட ஜெபிப்போம்.

### குணா: சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** நீண்ட நாட்களாக நடக்க முடியாமலிருந்த சிகோரா கிராமத்தைச் சேர்ந்த ஆக்கன் விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தின் மூலம் நடக்கும்படி தேவன் கிருபை செய்தார். தீய நண்பர்களின் பழக்கத்தினால் குடிக்கு அடிமைப்பட்டிருந்த, 12ஆம் வகுப்பு படிக்கும் விசுவாசியின் மகனுக்காக ஜெபித்த போது அவனுக்கு புது வாழ்வும், விடுதலையும் தேவன் அருளினார். மருத்துவர்களால் கைவிடப்பட்ட அம்ரோய் கிராமத்தின் லம்பாபாய்க்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். சுதேச ஊழியர் தீபக்கின் மகனுக்கு கடுமையான வயிற்று வலியிலிருந்து சுகமருளி மீண்டும் படிப்பைத் தொடர உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அநேக ஆண்டுகளாக பிசாசின் கட்டுகளினால் கட்டப்பட்டுள்ள மோசி பேட்டிக்கு தேவன் விடுதலை அருள; வயிற்று வலி மற்றும் வயிற்று வீக்கத்தினால் கஷ்டப்படும் சுக்னிபாய்க்கு தேவன் பூரண சுகமருள; வலிப்பு வியாதியினால் கஷ்டப்பட்டு வரும் மிஷனெரி ஷர்மிளாவை தேவன் குணப்படுத்த; இரண்டு இடங்களில் புதிய பணித்தளங்கள் அமைக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; வயிற்றில் குழந்தை இறந்த பின் சரியான சிகிச்சை கிடைக்காததால் தொடர் வயிற்று வலியினால் கஷ்டப்படும் காமிபாய்க்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. சுசித்ரா லிம்மா

# அஸோம்

## கோகாமுக் & தகுவாகனா:

### டென்சிங் & கவிதா

**துதிக்க:** கிராம பஞ்சாயத்து தலைவர் மூலம் எழுந்த பிரச்சனையை சந்திக்கவும், அதை மேற்கொள்ளவும் ஊழியருக்கு தேவன் உதவி செய்தார். கடுமையான கால் வலியிலிருந்து புயினுகுட்டியை ஜெபத்தின் மூலம் தேவன் சுகமாக்கினார். மனநிலை பாதிக்கப்பட்டு, அடிக்கடி வீட்டை விட்டு ஓடிவிடும் பெய்டிடோலே ஜெபத்திற்கு பின் பூரண சுகம்பெற்றாள். டினிகிரி கௌன், அஞ்சரி கௌன், டிங்ரி கௌன் மற்றும் பத்திராம்சுக் கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை தந்தருளினார். மிஸ்ஸிங் மக்கள் மத்தியில் அறுப்பின் பண்டிகை சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. ஊழியரின் மகள் லிசா மிராக்ளினுக்கு இதுவரை தேவன் தந்துவரும் சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினாலும், கடுமையான மூட்டு வலியினாலும் அவதியுறும் தீரன்கமான் பூரண சுகம்பெற; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் நுமோய் பங்கிங், அஹோமா, துர்பொட்டி, ட்ராசிங் கமான், ஜெரினா டோபான் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; நுரையீரல் பிரச்சனையினால் சுவாசிக்க சிரமப்படும் மாலதி நத்தேக்கு தேவன் பரிபூரண சுகமருள; ஹட்டியமோரா, ஹத்திராம், கொசுதுலி ஆகிய பகுதியிலுள்ள விசுவாசிகள் ஆலய ஆராதனையில் தடையின்றி கலந்து கொண்டு விசுவாசத்தில் வளர; லிசா மிராக்ளினுக்கு ஏப்ரல் 15 தேதி நடைபெறவிருக்கும் சிறிய அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற ஜெபிப்போம்.

## லக்கிம்பூர்:

### ஆரோன்சிங் நர்சாரி & ரீனா

**துதிக்க:** விசுவாசி துபா சுங்க்ராங் வேலையிலிருந்து வீடு திரும்பும்போது ஜீப்பிலிருந்து தவறுதலாக கீழே விழுந்தபோதிலும் அற்புதமாய் தேவன் பாதுகாத்தார். லக்கிம்பூர் பணித்தளத்தில் சபை சார்ந்த பயிற்சி மைய கட்டுமானப் பணிகளைத் துவங்க தேவன் உதவி செய்துள்ளார். கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது தன்னார்வ ஊழியர்கள், ஊழியத்திலும், ஆவிக்குரிய வாழ்விலும் உற்சாகமாய் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள; இந்நிதியாண்டின் ஊழியத்தை தேவ ஒத்தாசையைக்கொண்டு வெற்றியாய் நிறைவேற்றி முடிக்க ஊழியர்களுக்கு வேண்டிய கிருபைகளை தேவன் அருள; நரேன் சின்டேவை தாய் மதத்திற்கு திரும்பும்படி வற்புறுத்தும் அவரது குடும்ப உறுப்பினர்கள் தேவனின் அன்பினால் தொடப்படவும், நரேன் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும், அவரின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிடியா சுதர்சன் தாமஸ்
திருமதி. அஹரோனி குட்டோய் அச்சுமி
திரு. கிறிஸ்டியன் பிரகாஷ் S.
திருமதி. ஜெபமலர் ராஜன்

## பீஹார்

### சாட்டாபூர்:

**கே. ரவி ராத்தோட் & சுதாராணி**

**துதிக்க:** அநேக புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். லால்பூர் கிராமத்தில் மரணமடைந்த விசுவாசி சுகுமாரியின் நல்லடக்க ஆராதனை தடையின்றி நடைபெற்றது. சுவிசேஷத்திற்கு கடுமையான எதிர்ப்பு நிலவிவந்த மாஸ்கான் மற்றும் ஊரியரக்கா கிராமங்களில் தேவன் தந்து வரும் சமாதானத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்தோஷ் மற்றும் குஷ்பு ஆராதனையில் கலந்துகொள்வதை தடைசெய்யும் அவர்களது தகப்பனார் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ஹரிரக்கா கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கும் மோகன் மண்டல் மனந்திரும்ப; 50 வருடங்களாக வசித்துவரும் இடத்தை காலிசெய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள லால்பூரைச் சேர்ந்த விசுவாசி ஹிர்லா சதாவுக்கு தேவன் நீதி செய்ய; விசுவாசத்தினிமித்தம் கிராமத்தினரின் எதிர்ப்பை சந்தித்து வரும் சேகன் சதாவை தேவன் பலப்படுத்தவும், எதிர்ப்போர் இயேசுவின் அன்பினால் தொடப்படவும் ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### ராஜ்மஹால் சமுதாய கல்லூரி:

**ஸ்டாலின் ஜீவா & செல்வராணி**

**துதிக்க:** பலவிதமான விஷ பாம்புகள் மற்றும் விஷப் பூச்சிகளிடமிருந்து ஊழியர்களையும், மாணவர்களையும் தேவன் பாதுகாத்தார். 12ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வை நல்ல முறையில் எழுத தேவன் கிருபை செய்தார். நமது வளாகத்தில் மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கான பலவித பயிற்சிகள் நல்லமுறையில் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கணினி, செவிலியர், தையல், ஓட்டுநர், வெல்டிங், எலக்ட்ரிக்கல் போன்ற பயிற்சி வகுப்புகளில் அநேகர் சேர்ந்து வாஞ்சையோடு படிக்க; கணினி மற்றும் செவிலியர் வகுப்புகளை நடத்த அர்ப்பணமுள்ள ஆசிரியர்கள் கிடைக்க; ஓட்டுநர் பயிற்சி அளிக்க தேவையான வாகனத்தை தேவன் தந்தருள; முடக்கு வாதத்தினால் அவதியுறும் மிஷனெரி ராணி ஸ்டாலினுக்கு தேவன் பூரண சுகமருள; சமுதாய கல்லூரி மூலம் ஆதரிக்கப்படும் மிஷனெரி சுரேஷ் மால்டோவை தேவன் வல்லமையாக பயன்படுத்த; பயிற்சி முடித்து சென்றுள்ள மாணவர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்புகள் கிடைக்கவும், ஆவிக்குரிய வாழ்வில் வளரவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹெப்சிபா ஜேக்கப் பிரதீப் குமார்
திருமதி. கண்மணி பரிமளம் ராஜாசிங்

## ஜமா: முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்

**துதிக்க:** ஒன்பது இடங்களில் ஜெபக் கூட்டங்கள் நடத்த தேவன் கிருபை செய்தார். இரவு கூட்டங்கள் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்துகொண்டனர். பல்வேறு வியாதிகளிலிருந்து ஜெபத்தின் மூலம் விசுவாசிகள் சுகம் பெற்றனர். விசுவாசிகளின் மேளா நல்ல முறையில் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லெந்து நாட்களில் நடைபெறும் ஜெபங்கள் தடையின்றி நடைபெற; மந்திரவாதி லுக்கிராம் டுடு மனந்திரும்ப; வலிப்பு நோயிலிருந்து அனிதா சோரன், கணேஷ் மராண்டி, சோனா முனி ஹெம்ரோம் மற்றும் காச நோயிலிருந்து சஞ்சை, சோம்லால் முர்மு, சுனிராம் முர்மு, லுக்கிராம் ஹன்ஸ்தா, தபோய்க் டுடு ஆகியோரை தேவன் குணப்படுத்த; மனநிலை பாதிப்பிலிருந்து புட்டுல் ஹெம்ரோமுக்கு தேவன் அற்புத சுகமருள; பக்கவாதத்திலிருந்து ராம்தான் சோரன் மற்றும் கண் பார்வை இழந்துள்ள கன்காய் மராண்டி, ரோஜ்பேலா ஹன்ஸ்தக் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; சுவிசேஷ ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் மனந்திரும்ப; வேலை நிமித்தம் புலம்பெயர்ந்து செல்லும் விசுவாசிகளை தேவன் பாதுகாக்கவும், ஆவிக்குரிய வாழ்வை காத்துக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## பகையா:
## ஜெபக்குமார் பெரியசாமி & பொன்லதா

**துதிக்க:** சமுதாயக் கல்லூரியில் நடைபெற்ற சுதேச ஊழியர்களின் கூடுகையில் ராஜ் மஹால் பிராந்தியத்திலுள்ள அனைத்து சுதேச ஊழியர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மேற்கு வங்காளத்தில் திரைப்பட ஊழியம் செய்யவும், ஒரு பணித்தளம் ஆரம்பிக்கப்படவும் தேவன் வழிவாசலை திறந்திருக்கிறார். பதலா கிராமத்தில் விசுவாசிகளுக்கு பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தி வந்த சவபத்தியா எக்கா பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு, ஜெபத்தின் மூலம் சுகம்பெறவே தற்போது குடும்பாய் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயுள்ளார். மசூரியா சபையின் புதிய விசுவாசி சிவதர்ஷன் எக்கா மரித்தபோது அவரை அடக்கம் செய்யவிடாமல் அவரது குடும்பத்தினர் பிரச்சனை செய்து வந்தனர். இதற்காக ஜெபித்தபோது காவல் துறையினரின் பாதுகாப்புடன் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்ய தேவன் கிருபை செய்தார்.

**ஜெபிக்க:** கால் எலும்பு முறிவு, இடுப்பில் வலி, சிறுநீரகக் கல் மற்றும் கண் பிரச்சனைகளுக்காக சிகிச்சைப் பெற்று வரும் மிஷனெரிக்கு தேவன் பரிபூரண விடுதலை அருள; கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போரை தடைசெய்யும் பஜ்ரங்கி என்பவர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சசிசேகர் மின்சுவுக்கு தேவன் சுகமருள; மசூரியா ஆலயத்திற்கு புதிதாக வரும் மக்கள் சத்தியத்தை அறிந்துக்கொண்டு கிறிஸ்துவை விசுவாசித்து அறிக்கையிட; தலையில் புற்றுநோய் கட்டியினால் பாதிக்கப்பட்டு சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் எஸ்தர் மின்ச் என்ற 2 வயது மகளுக்கு தேவன் அற்புத சுகம் அருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாசுதேவ் மால்தோ

திருமதி. ஜெபா தெபொராள் வேதமாணிக்கம்

செல்வி. சூரஜ் முகி

## கதுவா & சந்தால் தலைமைத்துவப் பயிற்சி மையம்:

**சுந்தர் துரை & மெல்பின் ரெஜினி**

**துதிக்க:** 2025 ஆண்டுக்கான விடுமுறை வேதாகமப் பள்ளி பாடல்கள் பதிவு நேர்த்தியாய் முடிக்கப்பட தேவன் உதவி செய்தார். மாதாந்திர இரவு ஜெபத்தில் விசுவாசிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தேசத்திற்காக பாரப்பட்டு ஜெபித்தனர். குஸ்மா கிராமத்தில் புதிய ஆலயம் கட்டப்பட்டு தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. சந்தால் கன்வென்ஷனில் திரளானோர் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர். கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து பயிற்சிகளிலும் கலந்து கொண்டவர்கள் புத்தெழுச்சிப்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாகபாண்ட் ஆலய தளம்போடும் வேலை விரைவில் முடிவடைய; ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் கிராமத் தலைவர்கள் மற்றும் மந்திரவாதிகளின் இரட்சிப்பிற்காக; படிக்க இயலாதோருக்காக ஆடியோ பைபிள் செயல்பாட்டில் உள்ளது. அனைவரும் அதன் மூலம் வேதத்தைக் கற்றுக்கொள்ள; இந்த மாதம் அநேக புதிய ஆத்துமாக்களை தேவனுக்கு நேராய் வழிநடத்த எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; விடுமுறை வேதாகமப் பள்ளி புத்தகங்கள் விரைவில் அச்சிடப்பட; இந்த லெந்து காலத்தில் நமது விசுவாசிகள் அதிகமாக தேவனோடு ஐக்கியப்பட; இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போர் தடையின்றி அவரை அறிக்கையிட; ஆறுமாதங்களாக இடது காலில் புண்ணினால் கஷ்டப்படும் நமது விசுவாசி சுபான் முர்மு விரைவில் குணமடைய ஜெபிப்போம்.

## *கிறிஸ்துவில் புது வாழ்வு*

*மஹாராஷ்டிரா மாநிலம் இகத்பூர் பணித்தளத்தின் வாகர்பாடா கிராமத்தில் வசித்து வருபவர்கள் கிருஷ்ணன் & குசும்பு தம்பதியினர். பக்கத்து வீட்டாருடன் நிலவிய மனக்கசப்பினால் அவர்களுடன் பேசுவதையோ, உறவு வைத்துக்கொள்வதையோ விரும்பவில்லை. எப்போதும் இரு வீட்டாருக்குமிடையே சிறு விஷயங்களுக்குக் கூட வாய்சண்டை நடந்து கொண்டேயிருக்கும். இந்நிலையில் இத்தம்பதியினர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து அவரின் சீஷர்களாயினர். அதன்பின் பக்கத்து வீட்டாருடன் கிறிஸ்துவின் அன்பினை பகிர்ந்துகொள்ள கர்த்தர் அவர்களது மனதில் பேசினார். எனவே, கர்த்தரிடம் ஜெபித்துவிட்டு, இதுவரை இருந்த கசப்பை விட்டுவிட்டு பக்கத்து வீட்டிற்குச் சென்று அவர்களுடன் அன்பாகப் பேச ஆரம்பித்தார் குசும்பு. இதுவரை விரோதித்து வந்த குசும்பு தற்போது அன்பாக பேசுவதை நம்பமுடியாமல் பக்கத்துவீட்டார் திகைத்து நின்றபோது, கிறிஸ்துவைப் பற்றி அவர்களிடம் பகிர்ந்துகொண்டார். தற்போது இரண்டு குடும்பங்களும் சமாதானமாக வாழந்து வருகின்றனர். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. அல்லேலூயா!*




*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் M.
திருமதி. அமுதா குமார் பால்
திரு. ஸ்ரீனிவாசன் J., திரு. டென்சிங் R.
திரு. அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா

## மசலியா:

### தோட்சுயோ ஷிம்ரா & ஜெரினா

**துதிக்க:** கடந்த மாதம் இரண்டு விசுவாசிகள் முகாம், சிறு குழுத் தலைவர்கள் முகாம் மற்றும் சபை மூப்பர் முகாம் ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்துள்ளார். பஞ்சாப் மாநிலத்தில் காணாமல்போன பைதானத் டுடு நான்கு மாதத்திற்குப்பிறகு ஜெபத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்; மொர்சிலா சோரன் மனநிலை பாதிப்பிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். ஜுஜ்கோ கிராமத்தைச் சேர்ந்த புதிய விசுவாசி காமோஸ் கிஸ்குவுக்கு கால் வீக்கத்திலிருந்து தேவன் சுகமருளினார். கீழே விழுந்து நடக்க முடியாமலிருந்த நமது சுதேச ஊழியர் மோதிலால் சோரன் கர்த்தரின் கிருபையால் சுகம்பெற்று வருகிறார். காச நோயினால் பாதிக்கப்பட்டிருந்த விசுவாசி குரோயா ஹெம்ரோம் ஜெபம் மற்றும் மருத்துவ சிகிச்சையின் மூலம் பரிபூரண சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசிகள் வேத வார்த்தையில் வேரூன்றி வளர; சுவிசேஷத் திற்கு வாஞ்சைக்காட்டும் குடும்பங்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட; மனநல பாதிப்பிலிருந்து பாபுசோல் டுடு, சிறுநீரக தொற்றிலிருந்து குலாபி ஹெம்ரோம் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; அடிக்கடி நோய்வாய்ப்பட்டு இறந்துபோகும் விசுவாசிகளின் கால்நடைகள் தேவனால் பாதுகாக்கப்பட; தீயப்பழக்கத்திற்கு அடிமைப் பட்டுள்ள சில விசுவாசிகள் அதிலிருந்து விடுதலைபெற; விசுவாசி பாபுஜி மராண்டிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; சத்பஹார் சபையில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; கும்கட்லா கிராமத்தில் விரைவில் ஆராதனை துவக்கப்பட; சிட்டல் கிராமத்தைச் சேர்ந்த மஹாராணி மற்றும் சோனா மராண்டி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெறவும், அவர்களது குடும்பங்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## *மறைந்துபோன மர்ம நோய்*

*குஜராத் மாநிலம், விஜயநகர் பணித்தளத்தி லுள்ள பாடேர் கிராமத்தைச் சேர்ந்த காந்திபாய் கடந்த சில வருடங்களாக மர்ம காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு, சரீரம் மிகவும் பெலவீனமடைந்த நிலையில் உதய்பூரிலுள்ள பெரிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு அனைத்து மருத்துவப் பரிசோதனைகள் செய்தும் வியாதியை கண்டு பிடிக்க முடியவில்லை. மந்திரவாதிகளிடம் சென்று பூஜை புனஸ்காரங்கள் செய்தும், பலிகள் செலுத்தியும் சுகம் கிடைக்கவில்லை. மிகவும் பெலவீனப்பட்டு படுத்தப்படுக்கையானார். நமது விசுவாசிகளின் அறிவுறையின் படி கிராமத்தில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்திற்கு அழைத்து வரப்பட்ட அவருக்காக விசுவாசிகள் கூடி அவரின் சுகத்திற்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுத்தனர். அதன் பலனாக சிறிது சாப்பிட ஆரம்பித்தவர் சில நாட்களிலேயே பரிபூரண சுகம்பெற்று நன்றாக சாப்பிடவும், எழுந்து நடக்கவும் ஆரம்பித்துள்ளார். தற்போது அவரது முழுக் குடும்பமும் தேவன் மீது விசுவாசம் வைத்து ஆராதனைக்கு வருகின்றனர். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பிரபாகர சாரதி, திரு. பாபு P.
திருமதி. மேரி ஜான்சி ராணி பென்ஹர் M.

# ஒடிசா

## ஜகன்நாத்பூர்:

### பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ

**துதிக்க:** ஜிர்ஜோர், பெட்டெட்டா, மச்சு வாசை ஆகிய புதிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. குண்டி ஜோரா மற்றும் புருபோட்டாவில் புதிய விசுவாசிகளுக்கான பயிற்சிக் கூடுகை நடத்த தேவன் உதவி செய்தார். கரகேஷ்னா சபையில் ஏழு நாட்கள் உபவாச ஜெபமும், துர்சாய் & பைஹாட்டு சபைகளில் இரண்டு நாட்கள் உபவாச ஜெபமும் சிறப்பாக நடைபெற்றது. பராஜம்டா ஆலய வளாகத்தில் சபை சார்ந்த பயிற்சி மையம் தடையின்றி கட்டப்பட தேவன் உதவி செய்தார். இப்பணித்தளத்தில் பிர்ஹோர் இன மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுக்லால் லகுரியை வலிப்பு நோயிலிருந்து தேவன் குணப்படுத்த; பராஜம்பானி சபையைச் சேர்ந்த புதிய விசுவாசியான மிரு ஜேராய்க்கும் மற்றும் மஜ்கான் கிராமத்தைச் சேர்ந்த மிரு ஹைபுருவுக்கும் தேவன் குழந்தை பாக்கியம் அருள; லிசிமுடி கிராமத்தில் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குருபார் லகுரிக்கு தேவன் அற்புத சுகமருள; பந்தபேடா கிராமத்தில் வலிப்பு நோயினால் கஷ்டப்படும் 8 வயது முதிராம் லகுரி மற்றும் பக்வான் லகுரிக்கு தேவன் அற்புத சுகமருள; பிராந்திய அளவில் ஏப்ரல் 24-26 வரை நடைபெறவுள்ள பெண்கள் மேளா தேவ நாமத்திற்கு மகிமையாய் நடைபெற ஜெபிபோம்.

## தல்பும்கார்:

### பிரமோத்குமார் வகேரா & ஜசோதா பேன்

**துதிக்க:** விஷ பாம்பு கடியிலிருந்து ஜாவ்னா சோரனை தேவன் பாதுகாத்தார். சுதேச ஊழியர் மோடன் சோரன் தாயாரின் அடக்க ஆராதனை தடையின்றி நடத்தப்பட்டது. தன்னார்வ ஊழியர் பிஸு சோரன் குடும்பத்திற்கு தேவன் புத்திர சந்தானம் அருளினார். நாய் கடித்த நமது விடுதி மாணவன் புதுராம் ஹன்ஸ்தாவுக்கு உடனடியாக மருத்துவ உதவி கிடைக்க தேவன் கிருபை செய்தார். நமது விடுதியில் படிக்கும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் பொதுத் தேர்வை நல்ல முறையில் எழுத கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராய்முனி மஜி முழங்கால் வலியிலிருந்தும், மாகி முர்மு & காயா ஹன்ஸ்தா நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தத்திலிருந்தும் சுகம்பெற; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் எழுப்பித் தர; விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிடவும், தேவனுக்கு சாட்சிகளாய் வாழ்ந்து ஆத்தும பாரம் நிறைந்தவர்களாய் அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்கும் வாஞ்சை பெற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ரூபன் சாமுவேல் J.
திருமதி. லிஸி வாவச்சன்
திருமதி. பிரிசில்லாள் ரமேஷ் வேல்ராஜ்
திருமதி. கீதாஞ்சலி நாயக்
திரு. ஜாண் டேவிட்சன் செல்வராஜ்

## தேன்கனல்:

### அசோக் நாயக் & சுரபி நாயக்

**துதிக்க:** ஜெயராம் குய்யன் என்ற பில்லி சூனியம் செய்பவரின் மனைவி மரண படுக்கையிலிருந்த போது ஜெபத்தின் மூலம் தேவன் ஜீவன் கொடுத்ததால் அவரது குடும்பம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ளனர். நடக்க இயலாம லிருந்த பிர்சிங் குர்த்தி ஜெபத்திற் குப்பின் நன்றாக நடக்கிறார். ஐந்து புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகவீனமாயிருக்கும் மீனா, ஜீலி, ஜலேஷ்வர், குதுபாரி, பெனிட்டா, சீதா ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; இயேசுவை விசுவாசிப்போர் தைரியமாய் அவரை அறிக்கையிட; விசுவாசிகள் தேவனை அறியும் அறிவில் அதிகமாய் விருத்தியடைய; சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ள கிராமங்களில் மக்களின் இருதயத்தில் தேவன் கிரியை செய்ய ஜெபிப்போம்.

## கியோன்ஜர்:

### பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

**துதிக்க:** குட்டுங்கா கிராமத்தைச் சேர்ந்த சுலோச்சனா முண்டா அசுத்தாவியின் பிடியினால் பாதிக்கப்பட்டபோது பெல்டா சபைக்கு அழைத்து வரப்பட்டார். அவருக்காக சபையார் ஏறெடுத்த ஜெபத்தின் மூலம் அசுத்தாவியின் பிடியி லிருந்து தேவன் விடுதலை அருளினார். இரவு நேரங்களில் தொடர்ந்து அழுதுகொண்டிருந்த குனியின் மகள் ஹர்ஷினிக்காக விசுவாசிகள் இணைந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை அருளினார். அசுத்தாவியின் தாக்குதலினாலும், கடுமையான வயிற்று வலியினாலும் அவதியுற்ற ரஷ்மிதா கோபேவுக்கு தேவன் சுகமருளினார். அண்டை வீட்டாரால் எதிர்ப்பை சந்தித்த ஜனு மற்றும் அவரது தாயாரை தேவன் பாதுகாத்து அவர்களது விசுவாசத்தை பெலப்படுத்தி வருகிறார். சிறுநீரகப் பிரச்சனையினால் கஷ்டப்பட்டு வந்த சபை மூப்பர் புத்ராமுக்கு பரிபூரண சுக மருளினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹன்டிபோங்கா ஆலயக் கட்டுமானப்பணி விரைவில் முடிக்கப்பட; பேன்பாரி ஆலயத்தில் விரைவில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட; ஜோக்டாலா, உச்சாபலி, செனா மேட்டா, கஷியா, புருனாதிஹ், குருடா, நுவாகான், சி. பிளாக், சடக் மோரா, பி. பிளாக் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; சுதேச ஊழியர்களான ஜும்மாள் மற்றும் ராசிகாவை தேவன் வல்லமையாக பயன் படுத்த; ஜோங்கா-கழுத்தில் கொப்புளங்கள், மல்லினி டிரியா-வயிற்றில் தொற்று, மச்சு முண்டா-காலில் கொப்புளங்கள், பார்வதி கொய்பி-தொடர் காய்ச்சல், ஜிங்கி-இடுப்பு வலி, சுஃபிரா ககராய்-சரீர வளர்ச்சியின்மை ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மெயின்ராஜ் I.

திருமதி. சுவர்ணலதா சஞ்சீப் ஆன்ட்ரப்

**ஜிங்பானி:**

**ஆபிரகாம் எஸ். & அலீஸ் ஷீபா**

**துதிக்க:** ராமுவின் மகன் மரத்திலிருந்து கீழே விழுந்த போது ஆபத்தின்றி தேவன் பாதுகாத்தார். நமது விசுவாசிகளின் வீடுகள் அருகில் குளம் ஒன்று அமைக்க தேவன் உதவி செய்தார். 13 புதிய கிராமங்களில் விசுவாசிகளின் உதவியுடன் சுவிசேஷம் அறிவித்திட தேவன் கிருபை செய்தார். விசுவாசி டோகர் டியூவின் ஜெபத்தின் மூலம் வியாதியிலிருந்த அநேகருக்கு தேவன் சுக மருளினார். இல்லிகடா கிராம சபை மூப்பர் சொந்த வீடு கட்டிக்கொள்ள தேவன் உதவி செய்தார். சக்ராதார்பூர் பகுதியில் புதிதாக ஊழியம் துவங்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொக்சோ, துய்பானா, சோனா போஷி ஆகிய கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; ஜெய்பூர் மற்றும் புக்ரிபி பகுதிகளில் நடைபெறவிருக்கும் சபை மூப்பர் மற்றும் வாலிபர்கள் பயிற்சிகள் தடையின்றி நடைபெற; புதிய சபை மூப்பர் சிராம்பாரிக்கு சுரங்கத்தில் வேலை கிடைக்க; சக்ராதாபூரில் ஊழியம் செய்யும் துய்யா சாம்பியா குடும்பத்தை தேவன் வல்லமையாக பயன்படுத்த; புக்ரிபி பகுதி யில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தேவன் தந்தருள; இரத்த வாந்தியினால் அவதியுறும் பார்வதி புர்த்தி, கண் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள சலோனி ஹெம்ரோம், பித்தப்பை பிரச்சனையிலிருக்கும் நந்தி ஹெம்ரோம் ஆகியோரை தேவன் குணப்படுத்த; இப்பணித்தளத்திலுள்ள சிறுவர்களும், வாலிபர்களும் தங்கள் பெற்றோருக்கும், தேவனுக்கும் கீழ்ப்படிந்து சாட்சியாய் வாழ ஜெபிப்போம்.

## ஜீவனுள்ள தேவன்

*மஹாராஷ்டிரா மாநிலம், சுர்கானா பணித் தளத்திலுள்ள போர்சோன்ட் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி நரேஷ் வன்சாயி. நன்றாக உழைத்துக்கொண்டிருந்த இவர் ஒருநாள் திடீரென பக்கவாதத்தினால் தாக்கப்பட்டு படுத்தபடுக்கையானார். இவரது குடும்பத்தினர், உறவினர் மற்றும் சக கிராமத்தினர் இது பிசாசின் வேலை என்று சொல்லி மந்திரவாதியிடம் சென்று பூஜைகள் செய்யுமாறு அறிவுறுத்தினர். அதன்படி நரேஷை பல ஊர்களிலுள்ள பெயர்பெற்ற மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் கூறியபடி பரிகார பூஜைகள் பல செய்தனர். பணம் செலவழிந்ததே தவிர நரேஷ் சுகம்பெறவில்லை. எனவே நகர்புறங்களிலுள்ள பெரிய மருத்துவ மனையில் அவரை அனுமதித்து சிகிச்சை மேற்கொண்டனர். ஆனால் நரேஷின் உடல்நிலை மேலும் மோசமாகிக்கொண்டே சென்றது. அதன்பின் கிராமத்திலுள்ள விசுவாசிகளின் அறிவுரையின்படி அவரை ஆலயத்திற்கு தூக்கிச் சென்றனர். விசுவாசிகள் கூடி ஊக்கமாக ஜெபித்த அன்றே அவருடைய வாய் திறக்கப்பட்டு உணவு கேட்டு வாங்கி சாப்பிட்டார். பிறகு மெதுவாக அவர் எழுந்து உட்கார ஆரம்பித்தார். தொடர் ஜெபத்தினால் தற்போது எழுந்து நடக்க தொடங்கியுள்ளார். நரேஷின் குடும்பம் மட்டுமல்லாது அவரது உறவினர்களும் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சாந்தா வினயராஜ்

திரு. ஜாஹா் சாய் பன்னா

## அங்குல்: சங்கர் பி. & ஜெலின்

**துதிக்க:** நமது சிறுமியர் விடுதியில் படித்த விசுவாசியின் மகள் சுனிதா ஹெம்ரோ முக்கு ஜெ.பி.ஆர். மருத்துவமனையில் வேலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். ஜெய்தாந்த்பூர், பிராமணி, மோகன் போஷி ஆகிய கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்க தேவன் உதவி செய்தார். பொந்தா ஆலயத்தில் நடத்தப்பட்ட குடும்பக் கூடுகையில் 32 குடும்பங்கள் கலந்துகொண்டு குடும்ப வாழ்வில், ஆவிக்குரிய வாழ்வில் வளர் வதைப் பற்றி கற்றுக்கொள்ள தேவன் கிருபை செய்தார்.சரோஜினி ஹெம்ரோம் நெஞ்சு வலியிலிருந்தும், பார்சா பால்முச்சி வயிற்றுப் போக்கிலிருந்தும் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். பிசாசின் கட்டுகளினால் பெலவீனப்பட்டிருந்த 3 வயது சிறுமிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பரிபூரண விடுதலையைக் கட்டளையிட்டதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தல்சர் பிளாக் மற்றும் பல்லஹாரா பிளாக்கில் வாழும் ஹோ இன மக்கள் மத்தியில் ஆய்வுப் பணிகள் விரைவில் முடிக்கப்பட; பொதுத் தேர்வு எழுதியுள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற; உள்ளூர் மக்களால் துன்புறுத்துதலுக்கும், மதுவுக்கும் அடிமைப்பட்டு கிறிஸ்துவை விட்டு பின்வாங்கியுள்ள மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நமது சபை மூப்பர் களான பிகாஸ் கொய்பாய், ரன் சாம்பியா, ரூபா பிருலி, ஜித்தன், லட்சுமன் ஹெம்ரோம், சந்திர திரியா ஆகியோருக்கு தேவன் சரீரத்தில் நல்ல ஆரோக்கியத்தைத் தந்து ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்த; என்.டி.பி.சி. நிலத்தில் 60 ஆண்டுகளாக வாழந்து வரும் 165 குடும்பங்களை திடீரென காலி செய்யச் சொல்லி அரசாங்கம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. இங்கு நமது ஒன்பது விசுவாச குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். தேவன் இவர்களுக்கு நீதி செய்ய ஜெபிப்போம்.

## தெல்கோய்:
### சுகின்லால் & ஜெயராணி

**துதிக்க:** நெஞ்சு வலியிலிருந்து சோம்பாரி முண்டாவை தேவன் குணமாக்கினார். தேவ கிருபையால் மோம்லாபோசி மற்றும் பங்கோர்சுனி ஆலயக் கட்டுமானப்பணிகள் தடையின்றி நடைபெற்று வருகிறது. விசுவாசிகள், சபை மூப்பர்கள், ஊழியர்கள் யாவரையும் எதிர்ப்புகளுக்கும், ஆபத்து களுக்கும் நீக்கி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநலப் பிரச்சனையினால் அவதியுறும் ஜித்தோன் முண்டாவை தேவன் குணப்படுத்த; அருண் முண்டா மற்றும் அரோமா முண்டாவை வலிப்பு நோயிலிருந்து தேவன் சுகப்படுத்த; நடக்க இயலாமல் கஷ்டப்படும் சுகராயின் கால் களை தேவன் பெலப்படுத்த; ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஜெய புர்த்தி, துரா முண்டா, பர்மா முண்டா, சத்ரு முண்டா, பானு கிசான், சுக்காதேவ் கிசான், ராமா கிசான் ஆகியோர் தேவனின் அன்பினால் தொடப்பட; சிறுநீரகப் பிரச்சனையினால் அவதியுறும் ஜம்பி முண்டா மற்றும் மணிகா முண்டாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; ஹோ மற்றும் ஜ்வாங் மக்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அருள்மணி R., திரு. தியாகராஜன் P.
திரு. அரவிந்த் குமார் M.

## குஜராத்

### அஹ்வா: விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

**துதிக்க:** லாஹான்தபாஸ் கிராமத்தைச் சேர்ந்த கௌசல்யாவுக்கு ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுதலை அருளினார். 18 வருடங்களாக நடக்க முடியாமலிருந்த ரவீந்த்ரா மற்றும் பக்கவாதத்தினால் படுக்கையிலிருந்த சைத்துபாய் ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று எழுந்து நடக்க தேவன் கிருபை செய்தார். துள்சிராமுக்கு வயிற்றிலிருந்த கட்டி அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றப்பட கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொண்டைக் கட்டியினால் அவதிப்படும் ஆனந்துக்கு தேவன் பரிபூரண சுகமருள; கண் அறுவை சிகிச்சைக்குப் பின் அதிக தலைவலியினால் கஷ்டப்பட்டு வரும் சாந்தாபாயை தேவன் குணப்படுத்த; பிசாசின் பிடியிலிருந்து வனிதா, சாரா, ஹிரா ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; பார்கந்தியா கிராமத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நம் விசுவாசிகளுக்கு கிராமத்தினரால் வரும் உபத்திரவங்கள் நீங்க; ஜீப் வாகன விபத்தில் காலில் காயமுற்றிருக்கும் விலாஸ் பாயை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

### விஜயநகர்:

### விஜயகுமார் கே. & சுஷீலா

**துதிக்க:** விஷ காய்ச்சலிலிருந்து காந்தி பாய்க்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். புற்றுநோயின் தாக்கத்திலிருந்து காங்கு விடுதலை பெற்றார். அநேக ஆண்டுகளாக ஆண் குழந்தைக்காக ஜெபித்து வந்த காந்தா பேனுக்கு தேவன் ஆண் குழந்தை அருளி ஆசீர்வதித்தார். புதிதாக ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளும் சோனியா பாய், ஜீவிபாய், ரீனா, பிரசன்னா ஆகியோருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலயம் வருகின்றவர்கள் விசுவாசத்தில் வேரூன்றி வளரவும், விரைவில் கிறிஸ்துவை அறிக்கையிடவும், வருகின்ற மாதம் நடத்த திட்டமிட்டுள்ள அனைத்து நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெறவும், இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்தவும் ஊக்கமாய் ஜெபிப்போம்.

### சூரத்:

### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** ரயில்வே கேட்டில் காத்துக் கொண்டிருந்தபோது பின்னால் வந்த லாரி பயங்கரமாக மோதியதில் விசுவாசியின் வாகனம் நொறுங்கிய போதிலும் தேவன் விசுவாசி நிகிலின் ஜீவனை அற்புதமாய் பாதுகாத்தார். பிரசவ நேரத்தில் ஆபத்தான நிலையிலிருந்த உமேஷ்வரி, ஊக்கமான ஜெபத்தின் மூலம் சுகபிரசவத்தில் குழந்தை பெற்றெடுக்கும்படி இரக்கம் பாராட்டின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நகர்புறத்தில் வாழும் விசுவாசிகளின் பிள்ளைகள் வேலையினிமித்தம் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்ள இயலாமலிருக்கும் நிலை மாற; அதிக உதிரப்போக்கினால் அவதியுறும் பூஜா, ஹன்னா, கவிதா, வித்யா ஆகியோருக்கு தேவன் பரிபூரண விடுதலை அருள; அநேக ஆண்டுகளாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வரும் நிலாவிற்கு தேவன் இரக்கம் பாராட்ட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் நிக்கல்சன்
திருமதி. ஜெப ரோஸ் விஜயன்
திருமதி. பிது காந்தி லிமா ஸ்ரீதர் மொபிடெனி
திருமதி. ஹட்நெய்கிம் லெட்கோலுன் பய்ட்டே

## செலம்பா:

### யுவனேஷ் & ஜான்சி ராணி

**துதிக்க:** எதிர்ப்பினிமித்தம் மூடப்பட்டிருந்த லக்மிகேடா கிராம ஆலயம் திறக்கப்பட்டு ஆராதனை நடத்த தேவன் கிருபை செய்தார். பிராந்திய அளவிலான பெண்கள் சிறப்புக் கூடுகையில் இப்பணித்தளத்தி லிருந்து திரளானோர் கலந்துகொண்டு ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட்டனர். வேலையின்றி தவித்த மித்தல் பாய்க்கு ஜெபத்தின் மூலம் தேவன் நல்ல வேலையைத் தந்தருளினார். சிறுநீரகக் கல் பிரச்சனையினால் வேலை செய்ய முடியாமல் தவித்து வந்த ஈஸ்வர் பாய்க்கு சுகமருளி, ஏற்ற வேலை வாய்ப்பை கட்டளையிட்ட தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் பயமின்றி தைரியமாய் கர்த்தரே தேவன் என்று அறிக்கையிட; சாவ்தல், கடுவபாடா, சிக்கல்பாடா, கடுமால் கிராமங்களில் புதிய ஜெபக்குழுக்கள் துவங்கப்பட; சுவாலி, உல்மா மற்றும் ஜார்கம் கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்கவும், அதற்கான தடையில்லா சான்றிதழ் உள்ளூர் நிர்வாகத்திடமிருந்து கிடைக்கவும் ஜெபிப்போம்.

## தராம்பூர்:

### ஜி. குமரன் & ஜெலின் ஜெயா

**துதிக்க:** பாம்பு கடித்ததினால் உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்த சிறுவன் தேஜஸ், சபையினரின் ஊக்கமான ஜெபத்தினால் உயிர் பெற்றான். புற்றுநோயினால் அவதியுற்ற அம்ருத் பாய் ஜெபத்தின் மூலம் அதின் வீரியத்தி லிருந்து விடுபட்டு வருகிறார். சுகவீனத் தினால் நீண்ட நாட்களாக தூக்கமின்றி கஷ்டப்பட்டு வந்த ஜாக்ருதி பேனுக்கு ஜெபத்தின் மூலம் நல்ல நித்திரையை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபையில் உறுப்பினர் களாக இணைந்த 11 பேரும் இறுதி வரை விசுவாசத்தில் உறுதியாக நிலைத் திருக்க; நுரையீரல் வீங்கி மூச்சுவிட சிரமப்படும் ஐந்து வயது பியூஸ் பரிபூரண சுகமடைய; சிறுநீரகப்பாதை தொற்றினால் கஷ்டப்படும் வீரல்பாய் குணமடைய; இரண்டு முறை கருச்சிதைவு ஏற்பட்டு, அதன் மூலம் குடும்பத்தினரால் உண்டாகும் பிரச்சனையினிமித்தம் மன அழுத்தத்தி லிருக்கும் ஜான்கி பேனுக்கு தேவன் ஆறுதல் அளித்து, குழந்தை பாக்கியம் அருள; கல்லீரல் அறுவை சிகிச்சைக்குப்பின் அதிக வலியினால் அவதியுறும் ரீனாபேன் தேவனால் குணப்படுத்தப்பட ஜெபிப்போம்.




*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெபர்சன் B.

## கவாண்ட்:

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** பல்வேறு வியாதிகளினால் துன்புற்று வந்த உமர்காந்த், அவரது மனைவியின் உபவாச ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். சிறுநீரகக் கல் பிரச்சனையில் கஷ்டப்பட்ட சைபிபேனின் ஜெபத்தைக் கேட்ட தேவன் கல் தானாவே வெளிவர கிருபை செய்தார். அதிக உதிரப்போக்கினால் கஷ்டப்பட்டு வந்த சமீனாபேன் குடும்பத் தினரின் எதிர்ப்பையும் மீறி ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது அவருக்கு பரிபூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகளான ரீட்டா பேன், சில்லு பேன், சிட்டல் பேன் ஆகியோர் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைபெற; பிசாசின் கட்டுகளினால் அடிக்கடி வியாதிக் குள்ளாகும் ரும்லா பேனின் குடும்பத்தினருக்கு தேவன் பூரண சுகமும், விடுதலையும் அருள; வறுமையின் பிடியில் சிக்கித்தவிக்கும் வீர்பாரியைச் சேர்ந்த ரீட்டா பேனின் குடும்பத்தின் வறுமையை தேவன் நீக்கி ஆசீர்வாதத்தை அருளிச்செய்ய; வரும் நாட்களில் நடத்தவிருக்கும் வாலிபர், பெண்கள், சிறுவர் கூட்டங்கள் தடையின்றி ஆசீர்வாதமாய் நடைபெற ஜெபிப்போம்.

### ஜாலோத்: குமார் பால் & அமுதா

**துதிக்க:** பிராந்திய அளவில் நடைபெற்ற ஆவிக்குரிய மேளாவில் திரளானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். ஜபல் பூரைச் சேர்ந்த விசுவாசி ராகேஷுக்கு சொந்தமாக ஆட்டோ வாங்க தேவன் கிருபை செய்தார். குந்தி கிராமத்தின் ஆஷாவுக்கு தேவன் சுகப்பிரசவத்தை தந்தருளினார். கேடியா ஆலயத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியில் அநேகர் கலந்துகொண்டு பயன் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பச்சிளம் குழந்தையை இழக்கக் கொடுத்துள்ள பிரதீப் & அருணா தம்பதி யினருக்கு தேவன் ஆறுதல் அளிக்க; சிக்லியில் ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சோமாபாய், கவிதா ஆகியோர் இயேசுவின் அன்பினால் தொடப்பட; பக்கவாதத்தினால் சரீரத்தின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டுள்ள மதன்பாயை தேவன் குணப்படுத்த; வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாததால் நாத்து பாயின் வீடு சீல்வைக்கப்பட்டுள்ளது. தேவன் அவருக்கு உதவி செய்ய ஜெபிப்போம்.

# தாத்ரா & நகர் ஹவேலி

### கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** பணித்தளத்தில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் சுமார் 150 பேர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். அநேக நாட்களாக சிறுநீரகப் பிரச்சனை யினால் உடல் வீங்கி கஷ்டப்பட்டு வந்த மடுகாம் கிராமத்தைச் சேர்ந்த சுகானிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகம் தந்து வருகிறார். கர்ப்பப்பை கட்டி அறுவை சிகிச்சை செய்துள்ள நீதாபேனுக்கு தேவன் தந்து வரும் சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வாய் புற்றுநோயினால் பாதிக்கப் பட்டுள்ள ரமேஷுக்கு தேவன் பூரண சுகமருள; அதிக உதிரப்போக்கினால் மிக பெலவீனமாக காணப்படும் 14 வயது சிறுமி கீதாவை தேவன் குணப்படுத்த; நரம்புத் தளர்ச்சியினால் எவ்வித வேலையும் செய்யமுடியாமல் கஷ்டப்படும் தேவாபேனுக்கும், மூல வியாதி யிலிருந்து மஞ்சுளாவுக்கும், குடல் புண் பிரச்சனையிலிருந்து சங்கீதாவுக்கும் தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சூசன் தாமஸ் மேத்யூ

திரு. சௌ புன்யா

# மகாராஷ்டிரா

## போரடி:

### ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** கோடிடா ஆலயத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 189 பேர் பயன்பெற்றனர். குராட்பானி, கோடிடா, உமர்டா, கெனாரி, போரடி, சமரியா, சக்ரிபாடா, புடகிவிகீர் ஆகிய கிராமங்களில் உபவாச ஜெபக் கூட்டங்கள் தடையின்றி நடத்த தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளுக்கான முகாமில் 73 பேரும், பெண்கள் கூடுகையில் 103 பேரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். திட்டமிடப்பட்ட வாலிபர் கூடுகை, சிறுவர் முகாம், இரவு கூட்டங்கள், பஜன் கூடுகைகள் அனைத்தும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உடல் முழுவதும் கட்டிகளினால் அவதியுறும் பர்சிபாடா கிராமத்து அனீஷ் மற்றும் இரத்த சோகையினால் கஷ்டப்படும் சமீனா பாய் & ஜோஷா பாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த; பேசும் மற்றும் கேட்கும் திறனை இழந்துள்ள பிரேம் & அர்ஜுன் ஆகியோருக்கு தேவன் இரக்கம் பாராட்ட; சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து ஆஷிஷா பாய் மற்றும் ராமா பாய் தேவனால் சுகம்பெற; மனநிலை பாதிக்கப்பட்டுள்ள டபசியா கிராமத்தைச் சேர்ந்த மீனாபாய் & புடகிவிகீர் கிராமத்தைச் சேர்ந்த தீபக், பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கெனாரி கிராமத்தைச் சேர்ந்த ரவ்சிங்பாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த; குடியின் அடிமைத்தனத்திலிருந்து ஜக்ஷிஷ் பாய் மற்றும் பாய்தாஸ் பாய் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள ஜெபிப்போம்.

## தலாசரி:

### கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** ஷைவான் கிராமத்தைச் சேர்ந்த கக்கட் தேவல் சிங்டா சந்தித்த பெரிய விபத்தில் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டபோதிலும் அவரது ஜீவனை தேவன் பாதுகாத்தார். சபை மூப்பர் மற்றும் சுதேச ஊழியர்களுக்கான கூட்டங்கள் நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபை செய்தார். கடந்த மாதம் இரவு கூட்டங்கள், பெண்கள் முகாம், ஞாயிறு பள்ளி, வேதபாட வகுப்புகள் அனைத்தும் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக இரண்டு கிராமங்களில் நடத்தவிருக்கும் சுவிசேஷ ஊழியங்கள் தடையின்றி நடைபெற; புதிய விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், சாட்சியாய் ஜீவிக்கவும், வரும் நாட்களில் திட்டமிட்டபடி அனைத்து கூடுகைகளும் தடையின்றி நடைபெறவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பெஞ்சமின் B.
திரு. பிரதீப் முஷாஹரி
திருமதி. ஜெபஜோதி பால்ராஜ்
திருமதி. மதுகலா ரமேஷ்வர் நிர்மல்
திருமதி. ஏமி பாக்யா சுபானி

## எட்டப்பள்ளி:

### பாபுஜி முர்மு & வைலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** விபத்திலிருந்து நிலேஷ் நரோட்டி மற்றும் சூரஜ் கும்மாவை தேவன் பாதுகாத்தார். அபாம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த பேபிபாய் ரேணுவுக்கு கடுமையான தலைவலியிலிருந்து தேவன் சுகமருளினார். கால் எலும்பு முறிவினால் நடக்க முடியாமலிருந்த மர்கால் கிராமத்தைச் சேர்ந்த மடிவெட்டா, ஜெபத்தின் மூலம் நன்றாக நடக்கவும், இருசக்கர வாகனம் ஓட்டவும் தேவன் கிருபை செய்தார். டிராக்டர் விபத்தில் சிக்கிய உடேரா கிராமத்தைச் சேர்ந்த ஜோய்டி வாவ்டேவை பாதுகாத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இனம்புரியாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ள கோத்தி கிராமத்தைச் சேர்ந்த வைஷாலி பாயை தேவன் குணப்படுத்த; சிறுநீரகக் கல் பிரச்சனையினால் அவதியுறும் பந்தேவாகி கிராமத்தைச் சேர்ந்த மஹுரு தாலன்டே மற்றும் விபத்தில் சிக்கி நடக்க முடியாமல் கஷ்டப்படும் ராஜேஷ் வாவ்டே ஆகியோருக்கு தேவன் சுகமருள; நடைபெறவிருக்கும் பிராந்திய அளவிளான மேளாவுக்கு அரசாங்க அனுமதி கிடைக்க; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள வாலிபர்களுக்கு தேவன் விடுதலை அருள; ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் புதிய தொடர்பாளர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## அக்கல்குவா:

### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** ஜெபத்தைக் கேட்ட தேவன் ரக்சனாவுக்கு சுகப்பிரசவம் அருளினார். ஜெபத்தின் மூலம் ஜப்பா அம்லி மற்றும் புனார் வாசன் ஆராதனைக் குழுக்களை தேவன் மீட்டுத் தந்தார். ராஜு தாதாவை வியாதிலிருந்து தேவன் சுகமாக்கினார். நான்கு கிராமங்களில் முழுஇரவு ஜெபங்கள், ஏழு கிராமங்களில் உபவாச ஜெபங்கள் நடைபெற்றன. ஏழு இடங்களில் பெண்கள் கூடுகையும், 11 கிராமங்களில் பின்தொடர் பணியும் நடைபெற தேவன் கிருபை செய்தார். பணித்தளத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் ஆலய ஆராதனைகள் தடையின்றி நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கால் நரம்பு பிரச்சனையினால் அவதியுறும் தன்னார்வ ஊழியர் உஷா பெனுக்கு தேவன் சுகமருள; பாதத்தில் இரத்தம் வடிந்துகொண்டிருக்கும் பிரதாபை தேவன் குணப்படுத்த; ரோஹித், பியூஸ், தீரஜ், உஷா பென் ஆகியோரின் வீட்டு கட்டுமானப் பணியின் தேவைகள் சந்திக்கப்பட; கிறிஸ்துவை அறிக்கையிட வாஞ்சிப்போரின் தடைகள் நீக்கப்பட; ஞாயிறு பள்ளி நடத்த அர்ப்பணமுள்ள ஆசிரியர்களை தேவன் தந்தருள; சுதேச ஊழியர்களான சுனில்பாய், உஷா பென் ஆகியோரை தேவன் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கனகநேசம் செல்லத்துரை
திரு. பொன் அகஸ்டின் E., திரு. சிவகுமார் C.
திரு. பென்னிசன் எபினேசர் I.
திருமதி. காயத்ரி ஜெபர்சன்

## சரஸ்மால் விடுதி:

### ஸ்மிதா ராணி லிமா

**துதிக்க:** 23 கிராமங்களில் பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். விடுமுறை வேதாகம பள்ளி ஆசிரியர் பயிற்சி நடத்த தேவன் உதவி செய்தார். ஊழியத்திற்கு அர்ப்பணித்த 15 மாணவர்களுக்கு தனியாக ஆலோசனைக் கொடுக்க கிருபை செய்ததற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசாங்க தேர்வு எழுதிய மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெற; நான்கு வருடங்களாக குழந்தைக்காக ஜெபித்து வரும் கமலியை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; ஆலயம் வருவதை நிறுத்தியுள்ள வினோதின் இருதயத்தில் தேவன் இடைபட; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் தேவ்லி பேன் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## பெயிண்ட்:

### அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** எதிர்ப்பு நிறைந்த அம்பே கிராமத்தில் முதன்முறையாக இயேசு திரைப்படம் திரையிட தேவன் கிருபை செய்தார். வாழ்வாதாரத்திற்கு ஆதார மாயிருந்த தனது எருமை மாடு காணாமல் போனதால், உபவாசமிருந்து ஊக்கமாய் ஜெபித்த கவிசாவின் ஜெபத்தைக் கேட்டு, நான்கு நாட்களுக்குப்பின் எருமை மாடு பத்திரமாக வீடு வந்து சேர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி சுயநினைவை இழந்துவிடும் ராமுபாய்க்கு தேவன் அற்புத சுகமருள; அலிசாவின் உடல் முழுவதும் பரவியிருக்கும் கொப்புளங்கள் மறைய; கர்ப்பப்பை வீக்கத்தினால் கஷ்டப்படும் குசும்பேனுக்கு தேவன் சுகமருள; சரீரம் முழுவதும் கட்டிகள் மற்றும் எரிச்சலினால் நீண்ட நாட்களாக தூங்க முடியாமல் அவதிப்படும் மம்தாவுக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## மோல்கி:

### ரூபன் டுடு & ருக்மணி ஹெம்ப்ரோம்

**துதிக்க:** கடந்த சில வருடங்களாக சுவாச பிரச்சனைக்காக பல சிகிச்சைகள் மேற்கொண்டும் பலன் அளிக்காத நிலையில் ஆலயம் வந்து ஜெபித்ததின் விளைவாக துகிரிபாய் பூரண சுக மடைந்துள்ளார். மட்டியாபாரி மற்றும் மக்கூர்கண்ட் கிராமங்களில் நடைபெற்ற முழுஇரவு கூட்டங்களில் புதிதாக அநேகர் கலந்துகொண்டு நற்செய்தி கேட்டனர். வேலை நிமித்தம் காட்டுக்குச் சென்ற ரமேஷை தாக்கவந்த கரடியிடமிருந்து அவரை காப்பாற்றிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காசநோயினால் அவதியுறும் ரூபிபாயை தேவன் குணப்படுத்த; திருமணமாகி அநேக வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஏங்கித்தவிக்கும் சுபான் & சந்திரா தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளிச்செய்ய; ஆய்வு செய்யப்பட்டுள்ள பட்பாரா, அசலி, படாமுண்ட், மலிபாரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் மோசஸ் தியாகராஜ் S.
திருமதி. ஜோதிமணி மனோஜ்
திருமதி. இடிகினலா மௌனிகா கொடிசெலா

### கப்ராடா:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** விஷ பாம்பிடமிருந்து விசுவாசி ரங்துபேனை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். பிரசவத்திற்குப்பின் ஏற்பட்ட சுகவீனத்தினிமித்தம் அவசர பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மஞ்சுளா பேனுக்கும், குழந்தைக்கும் ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். நடக்க இயலாமலிருந்த யாஸ்பாய் ஜெபத் திற்குப்பின் நடக்க ஆரம்பித்துள்ளார். மனநோயிலிருந்து டிக்சால் கிராமத்தைச் சேர்ந்த வந்தனா பேனுக்கு தேவன் விடுதலை அருளினார். ஒருவருடத்திற்கும் மேலாக படுத்தப்படுக்கையாக இருந்த மும்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அஜய்பாய் என்ற வாலிபன் ஜெபத்திற்குப்பின் மெதுவாக நடக்க ஆரம்பித்துள்ளான். சண்ட்குன் சபையைச் சேர்ந்த தேவ்ஜிபாய் மூன்று முறை விபத்தில் சிக்கிய போதிலும் அவரை அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தில் தங்கள் ஒரே மகனை இழக்கக்கொடுத்த வடோலி சபை மூப்பர் லக்சுமன் பாய் மற்றும் ஹட்டி கிராமத்தைச் சேர்ந்த சீதாராம் பாய் ஆகியோரின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள; கருச்சிதைவு ஏற்பட்டுள்ள சுனிதா பேனுக்கு தேவன் ஆறுதலும், பெலனும் அளிக்க; குடல் வீக்கத்தினால் அவதியுறும் அரவிந்த் பாயை தேவன் குணப்படுத்த; விபத்தில் கால் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள விஹரீர்பாடாவைச் சேர்ந்த அஜய்பாயையும் மற்றும் பக்கவாதத்தினாலும், மன நோயினாலும் அவதியுறும் செண்டார்பாடா கிராமத்தைச் சேர்ந்த ராம்தாஸ் பாயையும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## கர்நாடகா

### முண்டர்கி: சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** ஹாவேரி மாவட்டத்தில் துர்முகி இன மக்கள் மத்தியில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். வேலையின்றி தவித்து வந்த ரத்னா பிரவீன் தொடர்ந்து ஆலயம் வந்து ஜெபித்தபோது தேவன் நல்ல வேலையை தந்தருளினார். ஜெபத்தைக் கேட்டு பஞ்கமா அஜிக்கு அரசாங்கத்தின் மூலம் வீடு கிடைக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள துர்முகி மற்றும் குருபர் இன மக்கள் மத்தி யில் தேவன் எழுப்புதலைக் கட்டளை யிட்டு, வரும் நாட்களில் திருச்சபைகள் உருவாக்கப்பட; ஞாயிறு ஆராதனையின் முக்கியத்துவத்தை விசுவாசிகள் புரிந்துகொண்டு தேவனோடுள்ள ஐக்கியத்தில் வளர; திரைப்பட ஊழியத் திற்கு பயன்படும் உபகரணங்கள் சேதமாகா மலிருக்கவும், திரைப்பட ஊழியத்தின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும் ஜெபிப்போம்.




### நிட்குண்டி:

**மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா**

**துதிக்க:** இளங்கலை செவிலியர் படிப்பினை நல்ல மதிப்பெண்களோடு நிறைவு செய்ய சங்கருக்கு தேவன் கிருபை செய்தார். உடல் முழுவதும் கட்டிகளால் சிரமப்பட்டுவந்த சுபாஷ் ஜெபத்தின் மூலம் சுகமடைந்தார். பாருபாயின் நிலப்பிரச்சனை சுமூகமாக முடிய தேவன் உதவி செய்தார். மாவட்ட அளவிலான தடை ஓட்டத்தில் முதல் பரிசு பெற அபிஜீத்க்கு உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வரும் முட்டானா, நந்தா, சந்தோஷ், பிரியா ஆகியோரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; பெற்றோருக்கு கீழ்ப்படியாமல் நடக்கும் காசிராம் மனந்திரும்பி குடும்பத்திற்கு ஆசீர்வாதமுள்ள மகனாய் ஜீவிக்க; காவலர் தேர்வு எழுதியுள்ள ராகுல் தேர்வில் வெற்றி பெற்று விரைவில் வேலையில் சேர; இரத்த குறைப்பாட்டினால் அடிக்கடி இரத்தம் ஏற்றவேண்டிய நிலையிலிருக்கும் சிறுமி சில்பாவுக்கு தேவன் இரக்கம்பாராட்டி பூரண சுகத்தை தந்தருள ஜெபிப்போம்.

### ஷிக்காவ்: நரேந்திரா குமார்

**துதிக்க:** 35 வயதாகியும் திருமணம் நடக்காமலிருந்த ரீட்டாவுக்கு அவரது குடும்பத்தினர் உபவாசம் இருந்து ஜெபித்தபோது தேவன் ஏற்ற வாழ்க்கைத் துணையை தந்தருளினார். சித்ராவுக்கு மருத்துவர்களால் புற்றுநோய் உறுதி செய்யப்பட்ட நிலையில், உபவாசமிருந்து ஜெபித்து மீண்டும் மருத்துவ பரிசோதனை செய்தபோது புற்றுநோய் இல்லையென்று அறிக்கை வர தேவன் கிருபை செய்தார். வலிப்பு நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் பிரகாஷுக்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பணித்தளத்தின் முதல் விசுவாசி கங்கம்மாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள; மருத்துவர்களால் கணிக்கமுடியாத அளவிற்கு சர்க்கரையின் அளவு ஏற்ற இறக்கத்துடன் காணப்படும் 9 வயது சிறுமி சிருஷ்டிக்கு தேவன் அற்புத சுகம் தந்தருள; பிரகாஷ் பக்கவாதத்திலிருந்தும், கிரிஜா சிறுநீரக பிரச்சனையிலிருந்தும், மல்லவா சுவாச பிரச்சனையிலிருந்தும் பரிபூரண சுகம்பெற; சந்தோஷ் சந்தித்து வரும் நில சம்பந்தப்பட்ட வழக்கிலிருந்து விடுபட ஜெபிப்போம்.

## ஜெயம் கொடுக்கும் தேவன்

*பீஹார் மாநிலம், அரரியா பணித்தளத்தைச் சேர்ந்த ரங்தா கிராமத்தில் பிப்ரவரி 25ஆம் தேதி இரவில் இயேசு திரைப்படம் காட்டப்பட்டுக்கொண்டிருந்த போது கிராமத்தினர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில் காவலர்கள் வந்து அந்நிகழ்ச்சியை தடைசெய்தனர். மறுநாள் கிராமத்தினர் விசுவாசிகளிடம் "நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் இக்கிராமத்தில் வாழ முடியாது; ஊழியர்கள் கிராமத்திற்குள் வந்தால் அவர்களை அடிப்பதோடு கொலை செய்யவும் தயங்கமாட்டோம் என்று எச்சரித்தனர்". விசுவாசிகள் காவல் நிலையத்திற்குச் சென்று தங்கள் சூழ்நிலையை அறிவித்தனர். இதற்காக இயக்கத்தின் ஊழியர்களும், ஜெபக்குழு அங்கத்தினர்களும் ஊக்கமாக ஜெபித்து வந்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் எதிர்ப்புகள் நீங்கவும், ஊழியர்கள் ஞாயிறு ஆராதனையை எவ்வித தடையுமின்றி நடத்தி வரவும் கிருபை அருளினார். விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும், ரங்தா கிராமத்தில் மாபெரும் எழுப்புதலை தேவன் கட்டளையிடவும் ஜெபிப்போம்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷீபா G. சந்திரா ஸ்ரீனிவாசன்
திருமதி. செல்வ மெரினா மனாசே டேனியல்

# ஆந்திரப் பிரதேசம்

## பலமநேர்:

### பால் குப்புசாமி & ஷைலா

**துதிக்க:** பசவராஜகண்ட்ரிகா கிராமத்தில் நடைபெறும் ஜெபக்கூடுகையில் புதிதாக அநேகர் கலந்துகொள்கின்றனர். விபத்தில் சிக்கி படுத்தப்படுக்கையாக இருந்த கங்காராஜ் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று எழுந்து நடக்கும்படி தேவன் கிருபை செய்தார். பல்வேறு பெலவீனத்தினால் அவதிப்பட்டு வந்த சுப்ரமணி ஆலயம் வந்து தொடர்ந்து ஜெபித்ததினால் பரிபூரண சுகம் பெற்றார். 15 கிராமங்களில் பின்தொடர் பணி மூலம் அநேகருக்காக ஜெபிக்கும் வாய்ப்பை அருளிய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளும் வெங்கட்ராமன் & சரஸ்வதி குடும்பத்தினர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட காணப்படும் தடைகள் நீங்க; ஆலயம் வந்து ஜெபிக்கும் புதிய விசுவாசி சுப்ரமணியின் கால் எலும்பு முறிவு விரைவில் குணமாக; வறுமையில் சிக்கித்தவிக்கும் குமாரி குடும்பத்தினரின் வாழ்வாதாரத்திற்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை தேவன் கட்டளையிட; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு குடும்பத்தினரை அடித்து துன்புறுத்தும் கங்காதர் மனந்திரும்பவும், குடியிலிருந்து விடுதலைபெறவும் ஜெபிப்போம்.

### சதும்: அனில் மஹாலி & பிரசாந்தி

**துதிக்க:** இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட மார்கா, தனது நீண்ட நாள் பெலவீனம் நீங்கி சுகம்பெற்றார். கடன் பிரச்சனையில் சிக்கித்தவித்த சந்திரம்மாவின் ஊக்கமான ஜெபத்தினால், வங்கி அவருடைய கடனை தள்ளுபடி செய்துள்ளது. ராமாபுரம் ஆலய சுற்றுச் சுவர் கட்டுமானப் பணிகள் நல்ல முறையில் முடிவடைய தேவன் கிருபை செய்தார். அம்வாசியா கிராமத்தில் சபை மூப்பர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் கை செயல் படாமல் முடங்கிப்போயுள்ள ஜானகிராம் விரைவில் சுகம் பெற; வறுமை, வேலை யின்மை போன்ற பிரச்சனையிலிருந்து நமது விசுவாசிகள் விடுதலை பெற்று ஆசீர்வதிக்கப்பட; குடிக்கு அடிமைப் பட்டுள்ளோரை தேவன் விடுவிக்க; நடைபெறவிருக்கும் பயிற்சி முகாம்கள், பெண்கள் கூடுகைகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## *விசுவாசமுள்ள ஜெபம்*

*ஆந்திரப்பிரதேசம், தாமலசெருவு பணித் தளத்திலுள்ள சிட்டி நாயணசெருவு பள்ளி கிராமத்தைச் சேர்ந்த சகரியா & எலிசபெத் அவர்களின் பசுமாடு, சில விஷப்பூண்டுகளை சாப்பிட்டதால் வயிறு வீங்கி, தீவணம் திண்ணாமலும், தண்ணீர் குடியாமலும், அசைபோடாமலும் இருந்தது. கால்நடை மருத்துவர் கூட முயற்சித்தும், மாடு பிழைக்காது என கைவிட்ட நிலையில் மாட்டிற்காக எண்ணெய் பூசி ஜெபிக்க, மாடு எழுந்து தீவணம் திண்ணவும், அசைப்போடவும் தொடங்கியது. அல் லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஏசு பாபு A.

### தாமலச்செருவு: ஜாண் டேவிட்ராஜ் (ஓய்வு) & ஞானசேகரி

**துதிக்க:** விசுவாசிகளான ஏஞ்சல் அஸ்வினி, சுஸ்மிதா ஆகியோரை விபத்திலிருந்து அற்புதமாய் தேவன் பாதுகாத்தார். சேஷாபுரம் கிராமத்தைச் சேர்ந்த காந்தம்மா பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றார். நீண்ட நாட்களாக தடைபட்டுவந்த விதவை விசுவாசியின் ஒரே மகளான லாவண்யாவின் திருமணம் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். வி. கொத்தூர் கிராமத்தில் எப்சிக்கு குறை பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது. மிகவும் குறைந்த எடையுள்ள இந்த குழந்தைக்காக ஜெபித்த போது குழந்தையின் எடை அதிகரிக்கவும், குழந்தையை ஆலயத்திற்கு கொண்டு வந்து பிரதிஷ்டை பண்ணவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மிட்டூர் கிராமத்தைச் சேர்ந்த கணேஷ் என்ற சிறுவனுக்கு மூளையில் இரண்டு முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இதனால் அவனது ஒரு கை மற்றும் ஒரு கால் செயலிழந்துவிட்டது. தேவன் அற்புதம் செய்ய; பூத்தலபட்டு கிராமத்தைச் சேர்ந்த எஸ்தர் லாவண்யா ஒரு இரகசிய விசுவாசி. இவர் தனது மகன் மற்றும் மகளை விசுவாசத்தில் வளர்த்து வருகிறார். இரட்சிக்கப்படாத கணவர் ஜானகி ராமன் மூலம் இவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் நீங்கவும், ஜானகி ராமன் தேவனின் அன்பினால் தொடப்படவும் ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

### செங்கம்: கே.எஸ். ஜாஷ்வா

**துதிக்க:** நரசப்பட்டி கிராம சபையில் எழுப்புதல் கூட்டம் நடத்த தேவன் கிருபை செய்தார். குரட்டுபட்டி கிராமத்தில் சபை மூப்பர்களுக்கான ஆத்தும ஆதாய பயிற்சி தடையின்றி நடத்தப்பட்டது. சுண்டக்காபட்டி கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். திருவண்ணாமலை பகுதியில் சுதேச ஊழியர்களுக்கான குடும்பக் கூடுகை சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தபசு கால ஜெபங்கள் ஒவ்வொரு விசுவாசியின் வீட்டிலும் தடையின்றி நடைபெற; சபைகளில் நடைபெறும் உபவாச ஜெபத்தில் அனைத்து விசுவாசிகளும் கலந்துகொண்டு தேசத்திற்காக பாரத்தோடு ஜெபிக்க; ஏப்ரல் 25ஆம் தேதி நடைபெறவிருக்கும் மிஷனெரியின் மகன் டைட்டஸின் திருமணம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### இளம்பிள்ளை: செல்வகுமார் R. வில்சன் & ஜெயா ஹெலன் ரோஸ்

**துதிக்க:** வேதாகம வகுப்புகள், இரவு ஜெபக் கூட்டங்கள் தடையின்றி நடைபெற்றன. மருத்துவம் படித்துக்கொண்டிருக்கும் கிறிஸ்டினா முதலாம் வருட தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சிப்பெற கர்த்தர் கிருபை பாராட்டினார். நாணயத்தை விழுங்கியதால் மூச்சுவிட சிரமப்பட்ட கார்த்திக் என்ற சிறுவனுக்காக விசுவாசிகளான பெற்றோர் ஜெபித்தபோது நாணயம் தானாகவே வெளிவர கர்த்தர் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆராதனைக்கு கிரமமாக வரும் நீலா, அழகம்மா, வீரராகவன், மாரியம்மா ஆகியோர் கிறிஸ்துவை அறிக்கையிட உள்ள தடைகள் நீங்க; காணாமல்போன அழகம்மாவின் மகன் பத்திரமாக வீடு திரும்ப; ஈசாக் என்பவருக்கு தேவன் ஏற்ற துணையை கட்டளையிட; மோனிஷாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தருள ஜெபிப்போம்.

**402**
**மிஷனரி ஆல்பம்**



## திரு. சம்புநாத் நாயக் & திருமதி. ராஜேஸ்வரி பிரதான்

திரு. சம்புநாத் நாயக் ஒடிசா மாநிலம், அங்குல் மாவட்டத்தின் படாமகிட்டாலா கிராமத்தில் மறைந்த திரு. சுவல் நாயக் & திருமதி. டர்பானி நாயக் தம்பதியினருக்கு 05.03.1979இல் 2-வது மகனாகப் பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் இருக்கின்றனர். இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இவர் 7ஆம் வகுப்பு படிக்கும்போது அப்பகுதியில் ஊழியம் செய்த மிஷனெரி மூலம் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொண்டார். பின் நாட்களில் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டபோது குடும்பத்தினராலும், கிராமத்தினராலும் துன்பப்படுத்தப்பட்டார். எனினும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருப்பதைக் கண்ட இவரது தகப்பனார் இவரை வீட்டைவிட்டு விரட்டிவிடுவதாக எச்சரித்தார். இவரது ஊக்கமான ஜெபத்திற்குப்பின் எதிர்ப்புகள் தணிந்தன. பள்ளி படிப்பிற்குப்பின் உயர் கல்விக்காய் ஜெபித்த போது தேவன் இவருடைய இருதயத்தில் ஊழியம் செய்யும்படியான உந்துதலைக் கொடுத்தார். எனவே BCI (Believers Church of India) மூலம் இரண்டு வருடம் வேதாகமப் பயிற்சிப்பெற்று அவ்வியக்கத்தில் சில வருடங்கள் பணிபுரிந்தார். பின்னர் ஒடிசாவில் கட்டக் பகுதியில் ஒரு சிறுவர் இல்லத்தில் பணிசெய்து வந்தபோது அங்குள்ள பிள்ளைகளுக்கு வேதாகம வகுப்புகள் நடத்த வந்த FMPB மிஷனெரி திரு. அனில் குமார் பிசோயி மூலம் இவ்வியக்கத்தின் ஊழியங்களைப் பற்றி அறிந்துகொண்டதோடு முழுநேர ஊழியத்திற்குத் தன்னை அர்ப்பணித்தார்.

ஒடிசா மாநிலம், கஜபதி மாவட்டத்திலுள்ள சேரங்கா கிராமத்தில் வசித்து வந்த மறைந்த திரு. சரபு பிரதான் & திருமதி. ரேணுகா பிரதான் ஆகியோருக்கு மூத்த மகளாக 10.06.1982 அன்று செல்வி. ராஜேஸ்வரி கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு ஆறு வயது இருக்கும்போது இவரது தந்தை விபத்தில் மரித்துவிட்டதால் அவரது தாயார் இவரையும், இவரது சகோதரனையும் ஒரு சிறுவர் இல்லத்தில் சேர்த்து படிக்க வைத்தார். அங்கு தனிமையை உணர்ந்த இவர் தனக்கு யாருமில்லை என்ற மன சோர்வுடன் காணப்பட்டார். ஒருமுறை அங்கு நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப் பள்ளியில் கலந்துகொண்டபோது எபி. 13:5 வசனத்தின் மூலம் **நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை** என்று தேவன் அவருடன் பேசினார். அதன்பின் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். இவர் விடுதியில் பணிபுரியும் ஊழியர்களின் அர்ப்பணமுள்ள வாழ்வை கண்டு தானும் அவ்வாறே தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று விரும்பினார். எனவே பள்ளிப்படிப்பிற்கு பின் வேதாகம கல்லூரியில் இணைந்து பி.டி.எச். படித்தார். 13.05.2009 அன்று திரு. சம்புநாத் நாயக்வுடன் திருமணத்தில் இணைக்கப்பட்டார்.

இவர்கள் 16.06.2009 அன்று குடும்பமாக FMPB-ல் முழுநேர ஊழியர்களாக இணைந்தனர். பின் சேலம், பெத்தேல் பி.பி.ஐ. கல்லூரியில் ஊழிய பயிற்சிப் பெற்று குஜராத் மாநிலத்திலுள்ள வசாவா இன மக்கள் மத்தியில் ஆறு மாதம் ஊழியம் செய்தனர். 2011ஆம் ஆண்டு துவங்கி வடக்கு குஜராத்தின் நகர்புறங்களில் டெடியாபாடா, மால்சோமோட், வாஹ்நகர், மன்சா ஆகிய பணித்தளங்களில் ஊழியம் செய்தனர். தற்போது ஸ்ரீமாலி, பர்மாரா, பிரஜாபதி ஆகிய மக்கள் மத்தியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் தேவனுடைய பணியை செய்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு மூன்று பிள்ளைகளை தந்து ஆசீர்வதித்துள்ளார். இவர்களது மூத்த மகள் ஜாய்ஸ் கட்சியா (26.07.2010) 9-ம் வகுப்பும், இளைய மகள் ஜெசிகா (12.08.2013) 6-ம் வகுப்பும், மகன் ஜோஷ்வா சாம் (15.11.2014) 4-ம் வகுப்பும் டேராடூனிலுள்ள கிரேஸ் அகாடமியில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

**403**
**மிஷனரி ஆல்பம்**



## திரு. பாசுதேவ் மால்டோ & திருமதி. பசந்தி மால்டோ

திரு. பாசுதேவ் மால்டோ ஜார்கண்ட் மாநிலம், சாஹிப்கஞ்ச் மாவட்டத்தி லுள்ள டோக்பாஸ்கோ பஹார் கிராமத்தைச் சேர்ந்த மறைந்த திரு. தர்மா பஹாடியா & மறைந்த திருமதி. தேவி பஹாடியா தம்பதியினருக்கு 15.04.1987இல் மூத்த மகனாகப் பிறந்தார். இவரது தந்தை படிப்பறிவில்லாதவரானதால் தன் பிள்ளைகள் நன்றாக கல்வி கற்க வேண்டுமென மிகுந்த ஆர்வத்துடன் தன் மூத்த மகனை ராஞ்சியிலுள்ள அரசு பள்ளியில் சேர்த்தார். ஜார்கண்ட் மாநிலத்தில் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சிப் பெற்ற கிராமத்தின் முதல் மாணவன் பாசுதேவ் மால்டோ ஆவார். இவர் FMPB ஊழியத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். யாக். 2:26 வசனத்தின் மூலம் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். மேலும் மஹாராஷ்டிராவிலுள்ள யவத்மால் தலைமைத்துவ பயிற்சி கல்லூரி யில் (YCLT) ஒருநாள் வேதாகமம் வாசித்துக்கொண்டிருந்த போது 2 தீமோ. 4:12 வசனத்தின் மூலம் ஊழியத்திற்கான தனது அழைப்பினை உறுதிப்படுத்திக் கொண்டார். ஜுன் 2000ஆம் ஆண்டு இந்தியா கேம்பஸ் க்ரூஸேட் ஃபார் கிரைஸ்ட் (ICCC) இல் சேர்ந்து சில மாதங்கள் பணியாற்றினார். ஜார்கண்ட் பர்ஹர்வாவிலுள்ள VTC-FMPBஇல் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றார். பயிற்சிக்குப் பிறகு 2001ஆம் ஆண்டு அதே நிறுவனத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். ராஞ்சி விளம்பர அலுவலகத்தில் தன்னார்வ ஊழியராக பணியாற்றினார். இதற்கிடையில் 12ஆம் வகுப்பை முடித்து சென்னையிலுள்ள B.Th. படிப்பில் சேர்ந்தார். அதன்பின் 2008ஆம் ஆண்டு ஜார்கண்டின் தும்கா பிராந்திய அலுவலகத்தில் தன்னார்வ ஊழியராக இணைந்தார்.

ஜார்கண்ட் மாநிலம், பாகூர் மாவட்டத்திலுள்ள சிமல்குண்டி கிராமத்தில் அர்ப்பணிப்புள்ள கிறிஸ்துவ குடும்பத்தில், திரு. மைக்கேல் மால்டோ & மறைந்த திருமதி. சரோஜினி மால்டோ ஆகியோருக்கு மூத்த மகளாக 19.11.1986 அன்று சகோதரி. பசந்தி மால்டோ பிறந்தார். இவருக்கு ஒரு தங்கை உள்ளார். இவரது தாத்தா சபையில் ஒரு போதகர். சகோதரி பசந்தி பீஹார் மாநிலம் ஜமால்பூரில் நடைபெற்ற ஒரு ஆவிக்குரிய மாநாட்டில் கலந்துகொண்டபோது யோ. 3:16 வசனத்தின் மூலம் தொடப்பட்டு இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தன் வாழ்க்கையை ஊழியத்திற்கென அர்ப்பணித்தார். ஆனால் அவர் ஒரு பெண் என்ற காரணத்தினால் பெற்றோர் அவரை ஊழியத்திற்குச் செல்ல அனுமதிக்கவில்லை. ஜார்கண்ட் அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படிப்பை முடித்த இவர் அரசு பள்ளி ஆசிரியையாக பணி செய்து வந்தார். 21.05.2009 அன்று சகோதரர் பாசுதேவ் மால்டோவும், சகோதரி பசந்தி மால்டோவும் திருமணத்தில் இணைக்கப்பட்டனர். 16.06.2009 அன்று முழுநேர ஊழியர்களாக நமது இயக்கத்தில் குடும்பமாக இணைந்தனர். உ.பி. ஜான்சியில் மிஷனெரி பயிற்சி பெற்றப்பின் 01.12.2010 அன்று ஒடிசாவின் கியோஞ்சஹார் மாவட்டத்திலுள்ள அங்குல் பணித்தளத்தில் ஜுவாங் இன மக்கள் மத்தியில் முன்னோடி மிஷனெரிகளாக ஊழியம் செய்து வந்தனர். 16.06.2022 முதல் ஜார்கண்ட், ஜகன்நாத்பூர் பணித்தளத்தில் ஹோ இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு பிளெசன் மால்டோ என்ற மகனை தந்து ஆசீர்வதித்துள்ளார். தற்போது பிளெசன் உத்தரகாண்ட், டேராடூனிலுள்ள கிரேஸ் அகாடமியில் 6-ம் வகுப்பு படித்து வருகிறான். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நடத்தும்

# தமிழ் மிஷனரி முகாம் 2025

மே 15↔18

வியாழன் காலை 9.30 மணி முதல்

ஞாயிறு காலை 7.30 மணி வரை

இடம்

பெத்தேல், டேனிஷ்பேட்டை, சேலம்

## செய்தியாளர்கள்

சகோ. சுசி பிரபாகரதாஸ்

சகோ. G. ஜாண் சாமுவேல்

சகோ. விஜய் P. ஐசக்

சகோ. S. ஜாண் பெர்லின்

சகோ. Y. நவநீதர்

சகோ. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்

மற்றும் பணித்தள ஊழியர்கள்

தரிசனமிகு பாடல்கள்

அனலூட்டும் செய்திகள்

உணர்வூட்டும் சந்தியா வேளைகள்

பணித்தளப் பகிர்வுகள்

கருப்பொருள்:



இவர்களிலும் அதிகமாய்

யோவான் 21:15

- பெரியவர்கள் | வாலிபர்கள் | இளம் வாலிபர்கள் | சிறுவர்களுக்கென தனித்தனி கூடுகைகள்
- பதிவுக்கட்டணம்: பெரியவர்களுக்கு ரூ. 300/-
  சிறுவர்களுக்கு ரூ. 200/-

முகாம் முன்பதிவுக்கான QR குறியீடு

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும்,

மிஷனரித் தரிசனத்தில் வளரவும்,

ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக

பங்குபெற அழைக்கிறோம்

Regd. Newspaper for India No.17759/69


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# தேவனின் இதயத்துடிப்பு
# யாரை நான் அனுப்புவேன்?

WANTED MISSIONARY

**FMPB**
குடும்பத்தில்
இணைந்திட வாரீர்

தேவனின் இதயத்துடிப்பே ஆத்தும அறுவடை...!
இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளைக்கு
அடிபணிய விரும்புகிறீர்களா?
மக்களுக்குப் பணிசெய்து,
தேவ பணியை நிறைவேற்றிட,
உங்களுக்கு ஒரு வாய்ப்பு!

# ஊழியர்கள் தேவை!

அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக
நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?



**கல்வி / வயது வரம்பு**

குறைந்தபட்சம் +2 / அதற்கு மேல்
திருமணமாகாதவர்கள் - 30 வயது
திருமணமானவர்கள் - 35 வயது

- முன்னோடி ஊழியனாக
- சபைநாட்டும் ஊழியம் செய்ய
- வேதாகம மொழி பெயர்ப்பாளராக
- மிஷனரி ஆசிரியராக
- மிஷனரி மருத்துவராக
- சிறுவர் ஊழியம் செய்திட
- வாலிபர் மத்தியில் ஊழியம் நிறைவேற்றிட
- தொலைத் தொடர்பு ஊழியம் செய்திட

கலாச்சாரம் கடந்து சென்று ஊழியம் செய்திட
உங்களை அன்புடன் அழைக்கிறோம்

மனிதவளத் துறை
29,உயர்நிலை பள்ளி சாலை ,அம்பத்தூர், சென்னை 53.
email: hrd@fmpb.org / www.fmpb.co.in
044 2657 0404 / 26573353


***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***